ப.45256
(1993)
T. 9770

ஸ்ரீ

ஸ்ரீமத்வரவரமுநயேநம:

ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்

கோபாலகிருஷ்ணதாசர்

அருளிச்செய்த

எம்பிரான்சதகம்.

மூலமும் - உரையும்.

இஃது.

சிலவைஷ்ணவர்களும்

பூவிருந்தவல்லி

கிருஷ்ணசுவாமிதாச

ரவர்களும்.

கேட்டுக்கொண்டபடி

தமிழ்ப்பண்டிதர்

திருநெல்வேலி

இராஜகோபாலபிள்ளை

யவர்களால்

பிழையறப்பரிசோதித்து

கோ-நாராயணசாமிமுதலியா

ரவர்களாலும்

கூ - முநிசாமிபிள்ளை

யவர்களாலும்

மநோன்மணிவிலாச

வச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டன.

ஸ்ரீமுகஹு—தைமீ - ௧௯

வைகுந்தனாதன்.

நன்றாக குருவாழ்க குருவே துணை

ஸ்ரீமதே ராமாநுஜாய நம.

எம்பிரான் சதகம்-மூலமும் உரையும்.

காப்பு

என்றுந் திருமாற்கே யாளாவே னெம்பெருமான் *
என்று மெனக்கே பிரானாவான்-என்றும் ... ... *
பிறவாத பேராளன் பேராயிரமும் ... ... *
மறவாதுவாழ்த்துக வென் வாய், ... *

(இ-ள்) எந்நாளிலும் ஸ்ரீயப்பதிக்கே தாசனாவேன் அந்த எம்பெருமான் எந்நாளுந் தனது நிர்ஹேதுக கடாட்சத்தால், என்னைத் தாசனாக்கிக் கொள்வதற்கே பிரானாக இருப்பான், உச்சரித்தவர்கள் எப்போதும் பிறவாமைக்குக் காரணமாகிய திருநாமங்களையுடைய அம்முதற் கடவுளினது சகஸ்திரநாமங்களையும் என்வாயானது மறவாமல் வாழ்த்தக்கடவது—என்றவாறு.

பாயிரம்.

பிடிபடாமறைபிடித்துவேதமார்க்கப் ... ... *
பிரதிட்டாபனாசாரியருபதேசத்தை... ... ... *
அடைவுடனேயெழுபத்துநாலவர்க்கிந்தே... ... ... *
அவர்கள்சிங்காதனக்குருக்களாகவைத்தோர் ... ... *
உடையவரொம்பெருமானார்பாஷியகாரர் ... ... *
உயர்பூதூர்வள்ளலார்நினைந்தோர்க்கெல்லாம் ... ... *
இடர்றுக்குமெதிராசவிப்பிரதுங்கர் ... ... *
எங்களிராமாநுசர்தாளிறைஞ்சுவோமே,... ... ... *

(இ-ள்) சங்கரர், பாஸ்கரர், யாதவர், முதலிய குதிர்ஷ்டிகளுக்குத் தோன்றாமல் நின்ற வேதார்த்தத்தைக் கண்டு பிடித்து * பரமவைதிக மார்க்கத்தை நிலைக்கச்செய்து வேதமார்க்கப் பிரதிஷ்

டாபஞுசாரியரென்றும், ஆசாரியர் பக்கல் கேட்டருளிய திருமந்திரத்தை எழுபத்து நான்கு தத்துவ தரிசியர்களுக்கு உபதேசமுறையாக அருளிச்செய்து, உலகத்தாரது உஜ்ஜீவநார்த்தமாக அவர்களைக் குருக்களாக வைத்துக் குருராயரென்றும், சரணாகதி செய்தவர்களுக்கு நித்திய விபூதியையும் லீலாவிபூதியையும் தந்தருளுங் காரணத்தைப்பற்றி நம்பெருமாளால் உடையவரென்றும், திருக்கோட்டி நம்பிகளால் எம்பெருமானாரென்றும், சரசுவதிதேவியால் ஸ்ரீபாஷியகாரரென்றும், முற்றத்துறந்த முனிவர்களுக்குள் சிறந்தவராகையால், தியானிக்கும் அடியார்களுக்கெல்லாம் பிறவித்துன்பத்தை ஒழிக்காநின்ற எதிராசரென்றும், சிகாயக்ஞோப வீதமுதலிய பிராமண வொழுக்கங்குன்ற தொழுகியபடியால் விப்பிரதுங்கரென்றும், தேப்பெருமாளால் இராமாநுசரென்றும், திருநாமங்களைப்பெற்ற எல்லாத்தலங்களிலுமுயர்ந்தளங்களுடைய பூதூர் வள்ளலாருடைய திருவடிகளை இந்நூல் இனிது முடியும்பொருட்டு வணங்குவாம்—எ று.

* பரமவைதிகமார்க்கமாவது பகவந்நாராயணனும்சசம் பூதரான ஸ்ரீவேதவியாச பகவான் உலகர்உய்யும்படி, சாங்கியயோக பௌத்தஜைந தார்க்கிக பாசுபதாதி மதங்களைக் கண்டித்துத் தத்துவஹித புருஷார்த்தங்களை விளக்குஞ் சாரீரகமென்கிற பிரமமீமாஞ்சையை அருளிச்செய்தனர், அது பிரமசூத்திரமென்றும், வியாசசூத்திரமென்றும் வழங்கப்படும், அந்தப்பிரமமீமாஞ்சைக்கு வியாசசீடரான போதாயனர் அவர்பக்கல் கேட்ட சிறந்த பொருள்களைப் பின்புள்ளாரும் அறிந்துய்ய, இலட்சத் திருபத்தையாயிரக் கிரந்தப் பரப்புள்ள போதாயன விருத்தியென்னும் ஒரு நூல் செய்தருளினர், அவர்சீடராகிய திரமிடாசாரிய மகாமுனிவர் அந்தவிருத்திக் கிரந்தத்துக்குச் சங்கிரகமாக ஒருபாஷியஞ் செய்தருளினர். அதற்குத்திரமிடபாஷியமென்றுபெயர்வழங்கும், அப்பாஷியத்தை அவலம்பித்து டங்க, குஹதேவ, பிர்மநந்திகள், தனித்தனி சிலபாஷியங்களைச் செய்தருளினர்கள், அவைகளை அவலம்பித்து வாமன முனிடீகை யருளிச்செய்தனர், அவைகள் யாவற்றையும் அவலம்பித்து ஸ்ரீமந்நாதமுனிகள் ஞாயதத்துவமென்னும் நூலையும், ஸ்ரீஆளவந்தார் சித்தித்திரயமென்னும் நூலையும் அருளிச்செய்தனர்கள், அந்நூல்களெல்லாம் வேதபுருஷனுடைய கருத்துக்கிணங்க விசிஷ்டாத்துவித பரமாகவே அமைந்திருக்க, உண்மையுணராத சிலகுதிர்ஷ்டிகள் அவற்றிற்கு விரோதமாக நவீனமதங்களைக் கற்பித்தனர்கள். இவை பெருகுவதைக்கண்டு ஸ்ரீசருவேசுரனுடைய இருதய சுரூபரும் "சென்றாற்குடையா மிருந்தாற்சிங்காதனமாம்-நின்றான்மாவடியா நீள்கடலுள் என்றும்-புணையாம

ணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும் - அணையாந்திரு மாற்கரவு,, என்றபடி பிராட்டிபிரிந்த தசையிலும் தாம்பிரியாதே சருவதேச சருவகால சருவாவத்தைகளிலும் ஸ்ரீசர்வேசுரனைத் தொடர்ந்திருப்பவருமென்னும் ஸ்ரீஅனந்தாழ்வானுடைய திருவவதாரமாகிய, ஸ்ரீராமாநுஜர் ஸ்ரீபோதாயனதிரமிட,டங்க,குஹதேவ,பிர்மநந்தி,வாமன. நாதயாமுனுதி,பூர்வாசாரியர்கள், அருளிச்செய்தவிசிஷ்டாத்துவித கிரந்தங்களைக் கடாட்சித்து ஸ்ரீ பாஷிய கீதாபாஷிய வேதார்த்தசங்கிரக முதலிய கிரந்தங்களைச்செய்து சங்கர,பாஸ்கர யாதவாதியர்செய்த நூல்களைக்கண்டித்து நிலைக்கச்செய்த மார்க்கமாம்—எ-று. (க)

கிம்புருடர்கருடர்காந்தருவர்சித்தர் … … … … … *
கின்னரர்வித்தியாதரர்சங்கீதம்பாடி … … … … … *
தும்புருநாரதர்சனகாதியரெண்டோளன் … … … … … *
சுரர்முனிவரிருடியர்கள்பலரும்போற்ற … … … … *
அம்புயனுன்மறையோதவீற்றிருக்கும் … … … … … *
அச்சுதனேயுனக்கென்றன்புன்சொல்லாலே … … … *
எம்பிரான்சதகமெனவிருத்தநூறும் … … … … … *
இசைப்பதற்குமுன்னிற்பாயெம்பிரானே, … … … … *

(இ-ள்) கிம்புருடர்,கருடர் காந்தருவர்,சித்தர், கின்னரர்,வித்தியாதரர்,இவர்களனைவோரும் நின்று உன்னுடைய கீர்த்திப்பாட்டைக் கீதம்பாடவும், தும்புருநாரதர்,ஜனகர், முதலியபிரமரிஷிகள்,ருத்திரன்,மௌனசீலர்கள்,இந்திரியங்களை வென்றவர்கள்,இவர்களெல்லோரும் துதித்துவணங்கவும், மூலதாமரையிற்பிறந்த பிரமன் நான்குவேதங்களால் துதிசெய்துவணங்கவும், ஆதிசேஷன்மேல் வீற்றிருக்கின்ற நித்தியமாகிய முதற்கடவுளே உனக்கு என்னுடைய அற்பசொற்களைக்கொண்டு எம்பிரான் சதகமென நூறு விருத்தச் செய்யுட்களைப்பாடுதற்கு முன்னின்று காப்பாய் எம்பிரானே—எ-று. (உ)

ஆழ்வார்கள்பன்னிருவர்பாடல்போற்றும் … … … … … *
அரிபத்தன்கோபாலகிருஷ்ணனன்பால் … … … … *
கேள்வியாற்றனதறிவின்மிகுதியாலும் … … … … … *
கிருபைசூழ்குருகிருபாகடாட்சத்தாலும் … … … … *
தாழ்விலாவெம்பிரான்சதகந்தன்னைச்… … … … … … *
சாற்றினன்போற்றியன்பரோத்தும்வண்ணம் … … … *
கேள்வியாலநுதினமுங்கீர்த்திப்பார்கள் … … … … … *
கிளர்விண்டுவைகுந்தத்துளராய்வாழ்வார்…. … … … *

(இ-ள்) பொய்கையாழ்வார் பூதத்தாழ்வார் பேயாழ்வார் திருமழிசையாழ்வார் நம்மாழ்வார் குலசேகராழ்வார் பெரியாழ்வார் திருப்பாணாழ்வார் தொண்டரடிப்பொடியாழ்வார் திருமங்கை

யாழ்வார் மதுரகவியாழ்வார் சூடிக்கொடுத்தநாச்சியார் ஆகிய பன்னிரண்டாழ்வார்களது அருளிச்செயல்களை அனுதினமுந் துதிக்கும் ஸ்ரீஹரிதாசராகிய கோபாலகிருஷ்ணனென்னுந் திருநாமத்தையுடையவர் அன்பினாலும் பரமவைதிகமார்க்கத்தார்பாற் கேட்டறிந்த மெய்ஞ்ஞானக்கேள்வியினாலும் மிகுந்தஉண்மையறிவினாலும் கிருபைநிறைந்த சதாசாரிய கடாட்சத்தினாலும், மெய்யடியார்கள் இதைக்கொண்டு திருமாலைத் துதித்து வணங்கும்படி இலக்கணக்குற்றமில்லாத எம்பிரான் சதகமென்னும் பிரபந்தத்தைச்சொல்லியருளினார், இந்தப்பிரபந்தத்தின் பொருளையறிந்து எந்நாளும் இந்நூற்பாடல்களால் சருவேசுரனைத் துதிப்பவர்கள் நிரதிசயாநந்தபரமபதத்தில்நித்தியமாய் வாழ்வார்கள்—எ-று(௫)

பாயிரம்-முற்றும்,

நூல்.

திருமாதுவீற்றிருக்குங்கமலமார்பா ... ... *
திகிரிசங்கந்தரித்தருளுஞ்செய்யகையா ... ... *
கருமாணிக்கக்கிரிபோனிறத்தமெய்யா ... ... *
கதிரிரவிமதியிரண்டுங்கண்ணாங்கண்ணா ... ... *
அருமாமறைப்பொருளாம்வாசுதேவா ... ... *
அனைத்துலகும்படைத்தளித்திட்டழிக்குமையா... ... ... *
இருபாதமலர்போற்றுமெய்யர்நெஞ்சில் ... ... *
இருந்திநாராயணனேயெம்பிரானே!... ... ... *

(இ-ள்) பெரியபிராட்டியார் எழுந்தருளியிருக்குந் தாமரசபுஷ்பமாகிய திருமார்பையுடையவனே சுதரிசனத்தையும் பாஞ்சசன்னியத்தையுந் தாங்கியருளுஞ்சிவந்தகரங்களை யுடையவனே கருமாணிக்க மலைபோன்ற நிறத்தையுடைய திருமேனியனே கிரணங்கள்நிறைந்த சூரியனையும் சந்திரனையும் இரண்டுநேத்திரங்களாகவுடையகண்ணனே அரியவேதப்பொருளாகிய ஆதிபகவனே சகலவண்டங்களையும் பிரமனுக்குள் அந்தரியாமியா யிருந்து சிருஷ்டித்து ஸ்ரீவிஷ்ணுவாக இரட்சித்துச் சிவனுக்குள் அந்தரியாமியாய்நின்று அழிக்கும் ஐயனே நீயே முதற்கடவுளென உண்மையறிந்து உன்னுடைய இரண்டு திருவடித்தாமரைகளையும் வணங்கப்பெற்ற மெய்யடியார் திருவுளத்தில் எழுந்தருளியிருக்கிறாய் நாராயணனே எம்முடையபெருமானே—எ-று. (௧)

மாதவநீதிருமங்கைக்குபதேசித்த ... ... *
மந்திரஞ்சேனாபதிமெய்ச்சடகோபன்சீர் ... ... *
நாதமுனியுடனுய்யக்கொண்டார்மிக்க... ... ... *
ஞானமணற்காநம்பியாளவந்தார் ... ... *

நீதிபுனைபெரியநம்பியுலகம்போற்றும் ... ... *
நிகரில்ராமாநுசனல்லுபதேசம்பெற் ... ... *
றேதமறவெழுபத்துநாலுபேருக் ... ... *
கெதிராசனுரைக்கவைத்தாயெம்பிரானே.... ... ... *

(இ-ள்) ஸ்ரீயப்பதியே நீபெரிய பிராட்டியாருக்கு உபதேசித்த திருமந்திரத்தை அந்தப்பராசத்தியானவர் சேனாபதிக்கு அருளிச்செய்ய, அவர் உண்மையுணர்ந்த சடகோபருக்கு அருளிச்செய்ய, அவர்மிக்க சுகீர்த்தியுடைய நாதமுனிகளுக்கு அருளிச்செய்ய, அவர்உய்யக் கொண்டாருக்கு அருளிச்செய்ய, அவர்மிகுந்த ஞானமுடைய மணக்கால் நம்பிக்கு அருளிச்செய்ய, அவர் ஆளவந்தாருக்கு அருளிச்செய்ய, அவர்வேதவொழுக்கமே ஆபரணமாகவுடைய பெரியநம்பிகளுக்கு அருளிச்செய்ய, அவரிடத்தில் மெய்ஞ்ஞானச் செல்வர்கள் வணங்குகின்ற ஒப்பில்லாத இராமாநுசாசாரியர் உபதேசம் பெற்று, ஓரான்வழியாக வந்த அந்தத் திருமந்திரத்தை, உலகத்தாருடைய பிறப்பின் பிணியகலும்படி எழுபத்து நான்கு சிங்காதன குருராயர்களுக்கு உபதேசித்தருளச் செய்தாய் எம்பிரானே-எ-று, (உ)

பூதலத்திலுண்டானதலங்கடம்மில் ... ... *
புண்ணியகோடித்தலமென்றாய்ந்துபார்த்து ... ... *
வேதநெறியாலாதிப்பிரமன்றானும் ... ... *
மிக்கதிருக்கச்சியில்வந்திறங்கியுற்றே ... ... *
ஆதரவாயத்திகிரிதலத்திலோமம் ... ... *
அன்றவன்றான்பண்ணவந்தவோமகுண்டத் ... ... *
தேதமறவந்துதித்தேவரங்களீந்தாய் ... ... *
எண்ணரியவருளாளாவெம்பிரானே. ... ... *

(இ-ள்) முதன்மைச் சிருஷ்டியாகிய பிரமனும்பூமியின்கணுண்டாகிய புண்ணியதலங்களிலே, இதுபுண்ணியகோடித் தலமென்று ஆராய்ந்து நிச்சயித்து, மிகுந்த வளப்பமுடைய திருக்காஞ்சியில் வந்துசேர்ந்து வேதநெறிப்படி அன்போடு அஸ்திகிரி ஸ்தலத்திலே யாகஞ்செய்ய, அந்த யாககுண்டத்தில் திருவவதரித்து அப்பிரமனுக்கு வேண்டியவரங்களைத் தந்தருளினாய், அளவிடக்கூடாத கருணையையுடையானே எம்பிரானே-எ-று. (ங)

உன்னுடையவுடன்மயமேபூமியெல்லாம் ... ... *
உனதுசெவ்வாய்நீர்மயமேயுதகமெல்லாம் ... ... *
மின்னியநின்கண்மயமேதேயுவெல்லாம் ... ... *
வீறியநின்சுவாசமயமேகாற்றெல்லாம் ... ... *
நின்னினைவின்மயமேயாகாயமெல்லாம் ... ... *
நின்மூர்த்திமயமுயிர்களுணர்விவ்வெல்லாம் ... ... *

என்னுடலோடுயிர்செய்கையெல்லாநீயே ... ... *
இரண்டுபண்ணியலைப்பதென்னோவெம்பிரானே. ... *

(இ-ள்) பூமியெல்லாம் உன்னுடைய திருமேனியின் மயமேயாம், சமுத்திரமுதலிய நீரெல்லாம் உனது செவ்வாயினூறிய நீர்மயமேயாம், சூரியன்முதலிய ஒளியுள்ள பொருள்களெல்லாம் விளங்காநின்ற உனது திருக்கண்களின்மயமேயாம், பிரசண்டமாருதமுதலிய காற்றெல்லாம் யாவரினும் உயர்ந்த வுனதுசுவாசமயமேயாம், ஆகாசமெல்லாம் உனது நினைப்பின்மயமேயாம், எல்லாவுயிர்களும், அவற்றினறிவுமாகிய இவையெல்லாம் உனது மூர்த்திமயமேயாம், ஆகையால் என்னுடலும் உயிரும் செய்கையுமெல்லாம் உன்வசப்பட்டிருக்க, நல்வினை தீவினைகளென இரண்டுபண்ணி அவ்வினைகளைக்கொண்டு என்னை யலையச்செய்வது யாதுகாரணமோ எம்பிரானே-எ-று (௪)

அருளாளாவேகவதிநதிசூழ்கச்சி ... ... *
அத்திகிரிநாதாவேதாகமத்தின் ... ... *
பொருளாநாராயணனேவாசுதேவா ... ... *
புண்ணியகோடிக்கிறைவாதேவராசா ... ... *
மருளானவிரணியன்றான்குறித்ததூணில் ... ... *
வந்துதித்தநரசிங்காவரதராசா ... ... *
இருளானதனுகாமனின்றாள்போற்றி ... ... *
யீடேறநினைவளிப்பாயெம்பிரானே. ... ... *

(இ-ள்) அருளாளனே வேகவதியாறுசூழ்ந்த திருக்காஞ்சியில் அஸ்திகிரியின் மேலெழுந்தருளிய சருவசுவாமியே இருக்குமுதலிய வேதங்களாலும் ஸ்ரீபாஞ்சாரத்திரமுதலிய வைதிகாகமங்களாலும் துணியப்படுகின்ற பொருளாகிய நாராயணனே வாசுதேவனே புண்ணியகோடி ஸ்தலத்துக்குத்தலைவனே பிரமாதிதேவர்களுக்கு அரசனேதானே பிரமமென்று மயங்கிநின்ற இரணியன்குறித்த தூணினிடத்தேவந்து அவதரித்த நரசிங்கனே வரதராசனே அஞ்ஞான விருளானது என்னைச்சேராமல் உன்னுடைய சுடரடிகளை வணங்கப்பெற்றுப் பிறவிக்கடலினின்றும் நீங்கிஉய்யும்படி நல்லநினைப்பை எனக்குக் கிருபைசெய்யாய் எம்பிரானே.

பண்ணியிடும்பணிபலவேபொன்னொன்றேயாம் - - *
பாண்டத்தின்பெயர்பலவேமண்ணொன்றேயாம் - -*
வண்ணமுறுபசுபலவேபாலொன்றேயாம் - - - *
வகையேழினுடல்பலவேசீவனொன்றும் - - - *
நண்ணுமறுசமயங்கள்பெயர்வேறல்லால் - - - *
நதாநீயொருவனேயவர்கடம்மை - - - *
எண்ணியேசெயுந்தொண்டர்பூசைக்கெல்லாம் - - *
இரங்கிவரந்தருகின்றாயெம்பிரானே. - - - *

(இ-ள்) செய்யப்படும் ஆபரணங்கள் பலவாயிருப்பினும்
பொன்னொன்றே அவற்றிற்குக்காரணமாகும்பண்டங்களின்பெயர்
பலவாயிருப்பினும் மண்ணொன்றே அவற்றிற்குமுதற்கருவியாகும்
அவைபோலவும்,நானாதிறமமைந்த பசுக்கள் பலவாயிருப்பினும்
அவற்றினிடத்துண்டாகும்பால் நிறஞ்சுவை முதலியவற்றில் ஒரு
தன்மையதாகயிருக்கும்,தேவர்,மக்கள்,விலங்கு பறவை, ஊர்வன
நீர்வாழ்வன,தாவரம்என்னும் எழுவகைப்பிறப்பில் உடல்கள் பல
வாயிருப்பினும் அவற்றினுள் தங்கிய சீவர்கள் பலரும் ஞா
னமுதலியவற்றால் ஒருதன்மைப்பட்டவர்களாகவேயிருப்பார்கள்
அவைபோலவும்.இவ்வுலகினில் வைணவம்,சௌரம்,சைவம், கௌ
மாரம்,காணாபத்தியம்,சாத்தேய மென்றும்,புத்தம்,சமணம்,பாட்
டாசாரியம்,சார்வாகம்.சைவம்,கௌமாரமென்றும், அவ்வாறாகச்
சொல்லப்பட்ட சமயப்பெயர்கள்வேறேயல்லாமல், பரமவைதிக
மார்க்கக் கடவுளாகிய நீயொருவனே 'அந்தச்சமய தேவர்களுக்கு
ள் அந்தரியாமியா யெழுந்தருளியிருந்து, அவர்களுக்குப் பத்தி
யோடு தொண்டர்கள்செய்யும் பூசைக்கெல்லாம் கருணைசுரந்து
வேண்டியதகுந்தவரங்களைத்தந்தருளுகின்றாய் எம்பிரானே -எ-று

கேசவநாராயணமாதவகோவிந்த ... ... *
கிளர்விண்டுமதுசூதகேடிலாத ... ... *
நேசதிரிவிக்கிரமனேவாமனசீர் ... ... *
நிறைந்தருளுஞ்சிதராவிருடிகேசா ... ... *
மாசிலெழில்சேர்பதுமநாபாவெங்கும்... ... ... *
வளர்தாமோதராவெனும்பேர்பன்னிரண்டிற் ... ... *
ஈசனாயெண்டிசையுள்புறம்புகீழ்மேல் ... ... *
இவையிராவிடத்துறைவாயெம்பிரானே. ... ... *

(இ-ள்) கேசவன்,நாராயணன்,மாதவன்,கோவிந்தன், யாவரி
னும் உயர்ந்து விளங்குகின்ற விஷ்ணு:மதுசூதன், அடியார்களிட
த்தில் நீங்காத அன்புடைய திரிவிக்கிரமன்,வாமனன்,உண்மைப்பு
கழையுடைய எங்கும்நிறைந்த சீதரன்,இருடிகேசன்,ஹேய குண
ங்களில்லாமல் அநந்தகலியாண குணங்கள் நிறைந்த பதுமநாப
ன்,எக்காலங்களினும் எவ்விடங்களினும் எப்பொருள்களினும் இரு
க்கின்ற தாமோதரன் என்னும் பன்னிரண்டு திருநாமங்களுக்கும்
தலைவனாகி எட்டுத்திக்கு,அகம்,புறம்,கீழ்,மேல்,இப்பன்னிரண்டிட
த்தும் வசிப்பாய் எம்பிரானே—எ-று. (எ)

சங்கரஷணாவாசுதேவாமுத்தி ... ... *
தரும்பிரத்தியுமனாவநிருத்தாமெய்ச்சீர்த்... ... ... *
துங்கபுருடோத்தமனேயதோட்சசாவெஞ்... ... ... *
சுடர்நாரசிங்கவெழிலச்சுதாநீள் ... ... *

அங்கசனுர்த்தனவுபேந்திரனேமிக்க ... ... *
அரிகிருஷ்ணுவென்றுதிரிசந்திதோறும் ... ... *
எங்குமுள்ளபூசுரர்கள்சந்திபண்ண ... ... *
இருத்திநாராயணனேயெம்பிரானே- - ... ... *

(இ-ள்) எவ்விடங்களிலுமுள்ள பிராமணர்களென்போர் யாவரும் காலை,மாலை,உச்சியென்னும் திரிசந்தியா காலந்தோறும், சங்கரஷிணு,வாசுதேவா,நிரோதுக கடாட்சத்தால் பரமபதத்தைத் தந்தருளுகின்ற பிரத்தியுமனு,அநிருத்தா,உயர்ந்த மெய்ப்புகழையுடைய புருஷோத்தமா. அதோட்சகா, வெப்பமான கிரணங்களை வீசுகின்ற நாரசிங்கா, அழகிய அச்சுதா,பெரிய திருமேனியை உடைய ஜனுர்த்தனு,உபேந்திரா: வெற்றிமிகுதியுமுள்ள ஹரீஇ,கிருஷ்ணுஎன்று உனது திருநாமங்களை உச்சரித்துச் சந்தியாவந்தனக் கடன்களைச்செய்ய,அப்படிச்செய்யு மிடந்தோறு மெழுந்தருளி அந்த வந்தனங்களை அங்கீகரிக்கின்ருய் நாராயணனே எம்பிரானே—எ-று (அ)

அச்சுதனேமாதவனேதேவதேவா... ... ... *
ஆதிபுருடோத்தவனேயரியேமாலே ... ... *
பச்சைநிறக்காகுத்தாவாசுதேவா ... ... *
பரந்தாமனேமுகுந்தாபதுமநாபா ... ... *
நச்சரவின்மிசைநடித்தகோவிந்தாசீர் ... ... *
நாராயணுகேசவாவென்றுன்னே ... ... *
இச்சையுடனினைப்பதுவேயெனக்குப்போதும் - - - - - - *
இறைவநாராயணனேயெம்பிரானே. - - - - - - - - - *

(இ-ள்) என்னுடைய கர்த்தனே அச்சுதா மாதவா சதுர்முக பஞ்ச முகாதிதேவர்களுக்குத் தேவனே ஆதி புருஷோத்தமனே ஹரியே திருமாலே பசுமையாகிய திருமேனியையுடைய காகுத்தனே வாசுதேவனே பரந்தாமனே முகுந்தா பதுமநாபா விஷமுள்ள காளிங்கனென்னும் பாம்பின்மேல் நடனஞ்செய்த கோவிந்தா ஸ்ரீமந்நாராயணனே கேசவாவென்று உனது திருநாமங்களைச்சொல்லி உன்னையன்புடன் தியானம்பண்ணுவதே எனக்குப் போதும்,சகலவண்டங்களுக்கும் அவற்றிலுள்ள உயிர்களுக்குத்தலைவனே நாராயணனே எம்பிரானே—எ-று (கூ)

பரப்பிரமமாமாதிமூலமேநீ - - - - - - - - - - *
படைத்தளித்திட்டழித்துவிளையாடவென்றே - - - - *
திருத்தமுடன்பிரமாவாய்ச்சிருட்டித்தன்றே - - - - - - *
ஸ்ரீபதியாம்விண்டுவாயுயிர்களைக்காத் - - - - - - *
துருத்திரனுயுயிரையெல்லாஞ்சங்கரித்திட் - - - - - - *
டோருருவேமூவுருவாய்மூன்றுமொன்ருய் - - - - *
இருக்குமெழிலச்சுதநின்மகிமைசற்றும் - - - - - ... *
இமையவர்க்குங்காணவரிதெம்பிரானே. - - - - - - *

(இ-ள்) பரப்பிரமமாகிய ஆதிமூலமே நீசிருஷ்டி திதிசங்காரங்களைச்செய்துவிளையாடும்படிபிரத்தியுமனமூர்த்தங்கொண்டுபிரமனுக்குள் ளிருந்து சிருஷ்டித்து,அப்போதே ஸ்ரீயப்பதியாகிய விஷ்ணுவாய் உயிர்களைப்பாலனஞ்செய்து, சங்கரஷண மூர்த்தங் கொண்டு சங்கரனுக்குள் ளெழுந்தருளி எல்லாவுயிர்களையும் சங்காரஞ்செய்து,ஒருதிருவுருவமே மூன்று திருவுருவமாகி அந்தமூவுருவமும் ஒருருவமாகி இராநின்ற அழகிய அச்சுதனே உன்னுடைய ஆச்சரியகுணங்கள் அந்தப்பிரமருத்திரர்களுக்கும் அறிதலருமையாகும்எம்பிரானே—எ-று. (௰)

சிட்டிக்கப்பிரமாவைக் கருணையாலுன் ... ... *
திருநாபிக்கமலத்தே சனிக்கச்செய்தாய் ... ... *
மட்டற்றவுயிர்களெல்லாங் காமத்தாலே ... ... *
வர்த்திக்கமன்மதனை மனத்திற்றந்தாய் ... ... *
நெட்டுற்றவிப்புவியிற்பிறந்தவெல்லாம் ... ... *
நீறுக்கவுருத்திரனைப் பிரமனீந்தான் ... ... *
இட்டத்தேயேகனு யிராமலிங்ஙன்... ... ... *
ஏன்செய்தாயச்சுதனே யெம்பிரானே. ... ... *

(இ-ள்.) சகலாண்ட சராசரங்களையும் சிருட்டிக்கத் திருவுளங் கொண்டு நிர்ஹேதுக்கருணையாலே உனது திருநாபிக்கமலத்தில் பிரமனைப் பிறப்பித்தாய், அளவிடப்படாத தேவர்கள் முதலிய எல்லாவுயிர்களும் புணர்ச்சியினாலே விர்த்தியாகும்படி திருவுளத்தில் மன்மதனையுண்டாக்கினாய்,இந்தப்பெரிய பூமியிலேஉற்பத்தியாகி யயாவற்றையும் அழிக்கும்படி உருத்திரனைப் பிரமன்சிருட்டித்தான், உனதுஇஷ்டத்தின்படி ஏகமூர்த்தியாயிராமல்பிரமன்-மன்மதன்- சிவனென்று மூவரையும் ஏன் உண்டுபண்ணினாய் அழியாதமுதல்வனே எம்பிரானே—எ-று. (௰௧)

பலர்கூடியிருந்தசந்தை கலைந்ததொக்கும் ... ... *
பழுத்தாலிற்பறவைகள்சேர்ந் தகன்றதொக்கும் ... ... *
நலமாகச்சூளையொன்றில் வெந்தபாண்டம் ... ... *
நாற்றிசையும்போயுடைந்து போவதொக்கும் ... ... *
சலமீதின்மிதந்திரண்டு காட்டங்கூடிச் ... ... *
சடக்கெனவேபிரிந்ததொக்குஞ் சமுசாரந்தான் ... ... *
இலதாகத்தெளிந்துனது திருத்தாள்போற்றி ... ... *
ஈடேறநினைவளிப்பா யெம்பிரானே. ... ... *

(இ-ள்) பலபேர்கூடியிருந்து தங்கள்தங்களுக்கு வேண்டிய பண்டங்களை வாங்கியபின்பு,அவ்விடத்திலேநில்லாமல்கலைந்துபோகின்ற சந்தையைப்போலவும்,பழுத்தஆலமரத்தில் கிளிமுதலியபறவைகள் வந்துசேர்ந்து அதிலுள்ள கனிகளைத்தின்றபின்பு கூட்ட

ங்கலைந்து போவதுபோலவும், ஒருசூளையில் நன்றாகவேகும்வரை யில் ஒன்றின்மேலொன்று அடுக்காக இருந்த பாண்டங்கள் வெந் தமாத்திரத்தில்அடுக்குக்கலைந்து நான்குதிக்குகளிலும்போய்உடை ந்துபோவதுபோலவும், நீர்வெள்ளத்தில் மிதந்துகொண் டிருந்த இரண்டுகட்டைகள் காற்றுமோதுதலால் நெருங்கிவந்து ஒன்றோ டொன்று சேர்ந்திருந்து உடனே பிரிந்துபோவதுபோலவும்,தா ய்-தந்தை மனைவி-புத்திரர்-மற்ற பந்துக்கள்என்று சொல்லும்ப டிதாங்கள்செய்த நல்வினைகளினாலேபிறந்து ஒருகுடும்பமாக இரு ந்து இருவினைப்பயன்களையும் அனுபவித்து அவ்வினைக ளற்றமா த்திரத்தில் ஒருவரோடொருவர்சொல்லாமலே இறந்துபோகின்ற சமுசாரவாழ்க்கையானது நிலையில்லாததென்று உண்மையறிந்து உன் னுடையசீர்பாதங்களைவணங்கிப் பிறவிக்கடலினின்றுநீங்கிநித் தியசுகத்தையடையநல்லெண்ணத்தைத்தந்தருளாய்எம்பிரா.(௧௨)

அறக்கொடியபவமெடுத்தா லதினூறாண்டில்.... ... ... *
ஐம்பதுநித்திரைபோமற் றைம்பதாண்டில் ... ... *
சிறுங்குழந்தைபேதையொடு காளையென்றே ... ... *
திரிந்துபசிபிணிமூப்புத் துன்பமெய்தி... ... ... *
கறுத்தமயிர்வெளுத்துடலங் கூனிப்பல்யோய்ந் ... ... *
காதுகெட்டுக்கண்மூடிக் குழறிப்பேசி ... ...*
இறக்கமற்றுக்கிடந்திறக்கும் பிறவிவேண்டேன்... ... ... *
இனிக்கரையேற்றச்சுதனே யெம்பிரானே.... ... *

(இ-ள்) மிகவுங் கொடுமையாகிய மனிதசன்மமெடுத்தால்,அ ந்தச்சனனத்துக்குவிதித்த நூறுவயதுவரையில் ஒருபுருஷ னிருப் பானாகில் ஐம்பதுவயதுநித்திரையில்கழியும், மற்றஐம்பதுவயதில் சிறுகுழந்தையாகவும், பாலனாகவும்,காளையாகவும்வளர்ந்து ஒருப யனும்பெறாமல்திரிந்தும் பசி-பிணி-வயோதிகம்- நானாவித துக்க ம்இவைகளையடைந்தும், கறுத்தமயிர் வெளுத்துப்போய் உடல் வளைந்து பற்களுதிர்ந்து காதுசெவிடாகிக்கண்பார்வைகெட்டுக்கு மூறிக்குழறிப்பேசி அன்னபானாதிகளை உண்பித்தாலும் இறக்கமில் லாமல் படுத்தபடுக்கையிலேயேகிடந்து இறக்கின்ற பிறவியைநா ன்அருவருத்து உன்னைச்சரணமடைந்தேன் இனிப்பிறவிக்கடலினி ன்றும் என்னைக்கரையேற்றுவாய் அழியாத முதற்கடவுளே எம்பி ரானே—எ-று. (௧௩)

பாதத்திற்பிரியாம லிருக்குங்கங்கை ... ... *
பரமேட்டிபிறந்ததுந்தி பதுமத்தண்பூத் ... ... *
தீதற்றகவுத்துவமா மணிபூணாரம் ... ... *
தேசுளபீதாம்பரநீ யுடுக்குங்கூறை ... ... *
வேதத்தைவிரிஞ்சனுக்கு நீபோதித்தாய் ... ... *
விண்ணவர்க்குன்றிருக்கையா லமுதமீந்தாய் ... ... *

ஏதுற்றுநாரணனே யுனைப்பூசிப்பேன் ... ... *
இமையவர்தம்பெருமானே யெம்பிரானே. ... ... *

(இ-ள்) அடியேன் சுத்ததீர்த்தத்தால் உன்னைத் திருமஞ்சனஞ் செய்யலாமென்றால், தன்னிலே மூழ்கினவர்களுக்கு எவ்வகைத்தீவினைகளையும்போக்கிப் பாவனத்தைத் தருகின்ற கங்கையானது, உனது சீர்பாதத்தில்பிரியாமல் தங்கியிருக்கின்றது, அதினிலுஞ்சுத்ததீர்த்தமில்லாமையால் திருமஞ்சனஞ் செய்யாமல் உத்தமமாகிய மலர்களால் அருச்சனைசெய்யலாமென்றால், அண்டங்களையும் அவற்றிலுள்ள உயிர்வருக்கங்களையும் படைத்தபிரமன்உற்பத்தியாயினதாகியகுளிர்ந்ததாமரைப்பூ உனதுதிருவுந்தியாயிருக்கின்றது, அதனிலும் உத்தமமாகிய மலரில்லாமையாலே அருச்சிப்பதை யொழிந்து விலையுயர்ந்த இரத்தினாபரணத்தால் உன்னை அலங்கரிக்கலாமென்றால் யாதொருகுற்றமுமில்லாத தெய்வமணியாகிய கௌஸ்துவமானது உனது திருமார்பில்தரித்த பூஷணமா யிருக்கின்றது, அதனிலும் உயர்ந்த இரத்தினமில்லாமையால் அலங்கரிப்பதைவிட்டு நல்லவஸ்திரத்தை உனக்கு உடுக்கலா மென்றால் மிகுந்த ஒளியுள்ள பீதாம்பரமானது நீ உடுக்கின்றவஸ்திரமாயிருக்கின்றது, அதனிலும் நல்லவஸ்திர மில்லாமையாலே உடுப்பதைத்தவிர்ந்து வேதமந்திரங்களாலே உன்னைத் தோத்திரஞ்செய்யலாமென்றால், அந்த மந்திரங்களைப் பிரதிபாதிக்கின்ற சதுர்வேதங்களும் பிரமனுக்கு நீ உபதேசித்தவைகளா யிருக்கின்றன, அவற்றிலுஞ்சிறந்த மந்திரங்களைச் சொல்லுகின்றநூல்களில்லாமையாலே அம்மந்திரங்களால் தோத்திரிப்பதை நீங்கித் திவ்வியான்னத்தினால் உனக்கு நிவேதிக்கலாமென்றால் கடைகின்றதேவர்களுக்குள்ளும் அசுரர்களுக்குள்ளும் ஒவ்வொருதேவாசுரத் திருவுருவங்கொண்டு கடைந்தும், கூர்மாவதாரமாகி மந்தரமலையைச்சுமந்தும், தன்மந்திரியவதாரஞ்செய்து அமிர்தகலசத்தைத்தாங்கிவந்தும், மற்றும் பற்பலமுயற்சிகள்செய்தும் திருப்பாற்கடலிற்பிறந்தஅமுதத்தை யாவருக்குந்தாயும் நானேவேனென்று தெரிவிப்பதுபோலப்பெரியபிராட்டியாருடைய திருவுருவங்கொண்டு உனது திருக்கரத்தாலேதேவர்களுக்கே தந்தருளினாய், ஆகையால் எதைக்கொண்டு உன்னைப்பூசிப்பேன்நாராயணனே தெய்வநாயகனேஎம்பிரா.(௰௪)

அந்நாதியாமரியே யுனதுநாமம் ... ... *
ஆயிரத்திற்பலவாத லொன்றேயாதல் ... ... *
பன்னுங்கிழ்குலத்தோ ரெண்ணுவாரேல் ... ...*
பாவிருக்குங்கோபாலர் பாண்டமொப்பார் ... ... *
நின்னமமெண்ணுமற் றருங்கம்பேசும் ... ... *
நெறியில்லார்குலம்பார்ப்பாரானக்காலும் ... ... *

இன்னுதகள்ளிருக்கு நவபாண்டத்திற் ... ... *
இணையிதுசத்தியமாகு மெம்பிரானே. ... ... *

(இ-ள்) பலபிறவிகளிலும் சண்டாளகுலத்தில் பிறந்துவந்த நீசர்கள் உன்னுடைய சகஸ்திரநாமங்களில் பலதிருநாமங்களையாவது ஒருதிருநாமத்தையாவது தியானிப்பார்களேயானல் அவர்கள், வேதபுருஷனும் விதிசிவேந்திராதியர்களாலும் அறியப்படாத உன்னை அதிசுலபமாக எடுத்து வளர்க்கப்பெற்ற பெரும்பாக்கியமுள்ள கோபாலர்களது மாளிகைகளிலுள்ள பாற்குடத்தையொப்பாவார்கள், உன்னுடைய திருநாமத்தைத் தியானிக்காமல் உன்மத்தங்கொண்டு நீ பரனல்லனென்று தருக்கமிடுகின்ற அவைதிகமார்க்கத்தார்கள் குலத்தால் பிராமணரானபோதிலும் யாவரும் இகழத்தக்க மதுநிறைந்த புதியபாண்டத்துக்கு ஒப்பாவார்கள் இப்படிச்சொல்லுதல் சத்தியமாகும் பிறப்பிலியாகிய ஹரியே எம்பிரானே—எ-று. (௰௫)

வளைவானபெரும்பல்லு மெரிந்தகண்ணும் ... ...*
மைம்மலைபோற்காத்திரமு முடையகாலன் ... ... *
அளவானபெரும்பாசங் கொண்டேயென்றன் ... ... *
அங்கத்தைப்பிணமாக்கி யாவியென்னும் ... ... *
ஒளிவேறுயாதனு சரீரக்கூட்டில் ... ... *
உறப்பண்ணித்தண்டிக்கு மிடரானுயேன் ... . *
இளையாமலிப்பொழுதே யடிமைகொள்வாய் ... ... *
இறைவாநாராயணனே யெம்பிரானே. ... ... *

(இ-ள்) வளைந்தபெரும்பற்களையும், தீப்பொறிசிந்துகின்றகண்களையும், நீலமலைபோன்ற உடலையுமுடைய யமனுனவன், தான் கொண்டுபோகுஞ் சேதனர்களைக்கட்டுதற்குத்தக்க அளவாகியபெரும்பாசத்தினல் ஆன்மாவென்னும் ஒளியுள்ளபொருள்வேறாகும்படிச்செய்து அந்த ஆன்மாவையாதனு சரீரமாகிய கூட்டிலே புகச்செய்து தண்டிக்கும் நானுவிதஉபத்திரவத் துன்பத்தால் நாயையொத்தநான் அப்போது மெலியாமல் இப்போதே தாசனுக்கிக்கொள் யாவருக்குந்தலைவனே நாராயணனேஎம்பிரானே·(௰௬)

அச்சுதநின்மெய்யடியா ருகந்தேயிட்ட ... ... *
அணுவெனினுமகமேரு வாகக்கொள்வாய் ... ... *
நிச்சயமாயுனைநம்பி யெண்ணுமூடர் ... ... *
நினைந்திடினேர் நூற்றையொற்றாகவுங்கொள்ளாயால் ... *
நச்சிமற்றபிதிர்களுக்குந்தேவருக்கும் ... ... *
நமக்கரித்துப்படைத்தவெல்லா நதியின்வெள்ளம் ... *
எச்சமற்றசமுத்திரத்தே சேருமாபோல் ... ... *
இனிதுநின்பாலடைந்திடுமா வெம்பிரானே. ... ... *

(இ-ள்) ஆலோசிக்குமிடத்துப் பரமவைதிக மார்க்கத்தார்களாகிய உனது மெய்யடியார்கள் உள்ளமுவந்து சமர்ப்பித்தபொருள் அணுவளவாயிருப்பினும் அதனை மகமேருவளவாகக் கொண்டு திருவுள முவப்பாய், நீயே முதற்கடவுளெனத் திடமாக உன்னை நம்பித்தியானஞ்செய்யாத மூடர்கள் சமர்ப்பிக்கும்பொருள்கள் நூறுயிருப்பினும் அந்தநூறுபொருள்களையும்ஒருபொருளாகவாவது அங்கீகரியாய், மழைபெய்ததினால் பெருகியோடும் நதியின் வெள்ளமானது கடலினிடத்தேபோய்ச் சேரும்விதம்போலப் பலர்நேராக உன்னைநமஸ்கரியாமல் மற்றபிறர்தேவதைகளுக்கும்பிரமன்முதலிய தேவர்களுக்கும் நமஸ்காரஞ் செய்து படைக்கும் நிவேதனங்களெல்லாம் மேற்சொன்ன தேவர்களுக்குள் அந்தரியாமியாயெழுந்தருளிய உன்பக்கலே இனிதாகவந்துசேரும் அச்சுதனே எம்பிரானே—எ-று. (௰எ)

தந்தைதாய்தினும்பண்டம்பிள்ளைவாயில்... ... ... *
தானிட்டசேடத்தைக்கேட்டுவாங்கிச் ... ...*
சிந்தைமகிழ்ந்தின்பமுறத்தின்னுமாபோல்... ... ... *
தேவாவுன் னுடைமைநீயடியார்க்கிய ... ...*
அந்தவுன்றன்மெய்யடியார்பத்தியாலே ... ... *
அளித்தகூழமுதினையுண்டேப்பமிட்டே ... ...*
இந்திராக்குமிதுதிட்டங்காட்டித்தொண்டர்... ... ... *
ஏற்றமதைத்தெளியவைத்தாயெம்பிரானே. ... ...*

(இ-ள்.) தங்கள்குழந்தையானது தின்னுதற்குரிய பண்டத்தைத்தின்று மிகுதியாய் எச்சில்பட்டதைத் தாய்தந்தையர்கள் அக்குழந்தையினிடத்தில்யாசித்துவாங்கி மனங்களித்து மிகுந்த இன்பத்தோடு தின்பதுபோல எல்லாப்பொருளுக்கும் இறைவனே உன் சொத்தாகிய உலகப்பொருள்களை அடியார்களுக்குத் தக்கபடி நீகொடுக்க அவற்றைப்பெற்ற உன்னுடைய அந்தமெய்யடியார்கள்பத்தியோடு சமர்ப்பிக்கும் * கூழமுதையும் உண்டருளி ஏப்பமிட்டுச் சீரங்கநாயகியாருக்கும் இந்தத்திட்டத்தைக்காட்டி அடியார்களுடைய பிரபாவத்தையாவருக்குந் தெளியவைத்தாய் எம்பிரானே—எ-று. (௰அ)

* கோயிலில் ஆயர்குலத்திற்பிறந்தராமாநுசவல்லியென்னும்ஒரு பிரபன்னையானவர் கோயிற்பசுக்களைமேய்க்கின்ற அரங்கநாதனென்னும்தமதுபேரனுக்கு வழக்கப்படி கூழமுதுகொண்டு மேய்க்குமிடத்திற்குச்சென்றனர். அப்படிச்செல்கையில் கோயில்நம்பெருமாள் திருவீதிபுறப்பாடாகி மகோச்சவங்கண்டருளுகின்ற உபயவேதபாராயணகோஷித்தையும் வாத்தியவோசையையும் கேட்டு நம்பெருமாளைச்சேவிக்கவேண்டுமென்கிற அவாளவாள் வெ

குபரபரப்புடன்போய் அச்சிறுவனை அங்குகாணமல்ரங்கநாதாரங் கநாதாவென்றுஅவன்பேரிட்டு அழைத்தனர், அவருடைய ஆரா மையைக்கண்டு பக்தவச்சலராகிய அழகியமணவாளர் அச்சிறுவ னைப்போலத் திருவுருக்கொண்டோடிவந்து அக்கூழமுதமுண்டு சென்றருளித் தாம்அமுதுசெய்ததைத் திருவரங்கநாயகியாருக்கு எச்சமிட்டுக்காட்டினர் அதுமுதல்ஒளவாசத்தியென்றுஒருமகோ ச்சவமும்நடக்கத்திருவுளமுகந்தனர், இச்சரிதை ஸ்ரீரங்கமான்மிய த்தில்சுருக்கமொழியைக்காணலாம்

மன்னவராய்வாழ்ந்துசுகித்திருந்தபேரை ... ... *
வறுமையராய்ச்சலித்திரந்துதிரியவைப்பாய்... ... *
அன்னமரிதாயிருந்துதிரிந்தபேரை ... ...*
அதிகராய்வாழ்ந்துசுகித்திருக்கவைப்பாய்... ... ...*
நின்னருளேயல்லாமல்யாவருக்கும் ... ... *
நினைத்தபடிநேரொண்ணுதாகையாலே ... ... *
என்னதிருவிளையாட்டுன்மகிமைசற்றும் ... ...*
இமையவர்க்குந்தாணவரிதெம்பிரானே... ... ...*

(இ-ள்.) அரசர்களாய்வாழ்ந்துசுகமாகஇருந்தவர்களைத் தரித்திர ர்களாகி உடலோடுகூடிவாழ்தலை வெறுத்துக்கொண்டு திரியும்படி வைப்பாய், உண்பதற்கும்உணவுகிடையாமல் யாசித்துத்திரிந்தவ ர்களைச் செல்வத்தில்அதிகர்களாகிவாழ்ந்துசுகமாகயிருக்கவைப்பா ய், உன்னுடைய நிர்ஹேதுககடாட்சத்தாலேயல்லாமல்எவர்களாவது தாங்கள்நினைத்தபிரகாரம் ஒன்றைப்பெறமுடியாது, இப்படிசே தனர்கள் யாவரையும்நடத்துவதினல் இது என்னமாயாசாதுரியத் திருவிளையாட்டாயிருக்கின்றது உனது ஆச்சரிய சேஷ்டிதத்தைச் சிறிதும் பிரமன்முதலியதேவர்களாலும் அறிந்துகொள்வது அறி தாகும்எம்பிரானே—எ-று. (௰௩)

அருளுடன்மீன்பார்த்தக்காற்சினைதான்குஞ்சாம்... ... *
ஆமைமுட்டைதாய்நினைந்தாற்குட்டியாகும் ... ... *
பரிசத்தாற்பறவைமுட்டைகுஞ்சதாகும் ... ... *
படியிலிவைபிற்கடையாக்கிடக்குநாயேன் ... ...*
கருணையினற்குருமூர்த்திபார்த்தாலும் ... ... *
கருத்தாரத்திருவுளத்தேநினைத்தாலும் ... ... *
இருபதத்தைத்தலையில்வைத்தபரிசத்தாலும் ... ... *
இருளறுத்தேனச்சுதனேயெம்பிரானே ... ...*

(இ-ள்.) தாய்மச்சமானது கருணையோடு பார்த்தமாத்திரத்தில் தன்சினையிலுள்ள சிறுமுட்டைகள்குஞ்சுகளாகும், தாயாமையா னது தூரத்தினின்று நினைத்தால் தானிட்டமுட்டைகள் குட்டிகளா கும், தாய்ப்பறவையானது தன் இறகுகளால் அணைத்துக்கொண்

டிருந்தால் தான்பெற்றமுட்டைகள் குஞ்சுகளாகும், இப்பூமியில் இந்தநீர்வாழ்வனவற்றிலும் பறவைகளிலும் கடைப்பட்டவனுகக் கிடக்கும் நாயையொத்த நான் என்னுடைய ஆசாரியர்என்னைக்கருணையோடு கடாக்ஷித்தருளினதினுலும், இவன்உஜ்ஜீவிக்கவேண்டுமென்று பூரணமாகத் திருவுளத்திலேநினைத்ததினுலும், தமது உபயதிருவடிகளை என்தலையில்சூட்டியபரிசத்தினுலும் என்னுடைய பேதைமையிருள்நீங்கி நீயேமுதற்கடவுளென உண்மைஞானமடைந்தேன் அச்சுதனென்னுந்திருநாமமுடையானேஎம்பிரானே —எ-று. (௨௰)

சக்கரஞ்சங்கிருபுயத்திற்பொறித்தபின்பு ... ...*
தயையுடனேபன்னிரண்டுதிருமண்சாத்திச் ... ... *
சிக்கெனவேதாசனென்றுநற்பேரிட்டுச் ... ...*
செவிகுளிரமந்திரமுமுபதேசஞ்செய் ... ... *
தக்கினியிற்செந்துளவக்காட்டங்கூட்டி... ... ...*
ஆவினெய்யாற்புனர்சனனவோமம்பண்ணி ... ... *
இக்கிரிகையைந்தினுற்றிருத்திக்காக்கைக் ... ...*
செழிற்குருவாயுதித்தனையேயெம்பிரானே ... ... *

(இ-ள்.) தயையுடனேவலத்தோளில் திதரிசனத்தையும் இடத்தோளில் பாஞ்சசன்னியத்தையும் அங்கிதஞ்செய்து பின்பு நெற்றிமுதலியபன்னிரண்டுதானங்களில் திருமண்குறியிட்டு வேறொருவருக்குச்சேஷிபூதன் நீயல்லை ஸ்ரீசர்வேசுரனுக்கே தாசனென்றுநல்லதிருநாமமிட்டுச் செவிகுளிரமந்திரராஜத்தையும் துவயத்தையும் சாமசுலோகத்தையும் உபதேசித்து அக்கினியில் செந்துளவச்சமித்தைகள் சேர்த்துப் பசுநெய்யால் புனர்ஜனனவோமம்பண்ணி இந்தக் கிரியைகளைந்தினுலும் அடியேனைத்திருந்தச்செய்துகாக்கும்பொருட்டு நூல்களில்சொல்லியசதாசாரியலட்சணமமைந்த ஆசாரியராய் எழுந்தருளினையே எம்பிரானே—எ-று. (௨௧)

மணிபிசைக்கவந்திடுமொன்செவியான்மாயும் - - - *
மகிழ்புணர்ச்சிக்காகவிபமணின்சிக்கும் - - - *
கணின்விளக்கைக்கண்டுவிட்டில்வீழ்ந்துபொன்றும் - - *
கடுத்தூண்டில்கவ்விமச்சம்வாயான்மாளும் - - *
அணுகியளிநாசியிற்சண்பகமோந்தோயும் - - - *
ஐம்பொறியுமுடையநானலைந்திடாமல் - - - *
இணையிலுபதேசத்தாற்றிருத்திக்காக்கைக் - - - *
கெழிற்குருவாயுதித்தனையேயெம்பிரானே - - - *

(இ-ள்.) வெண்கலமணியொலிக்க அவ்வோசைகேட்கவந்துஆநந்தித்து மெய்ம்மறந்தமானனது அச்சமயத்தில் வேடுவர் பற்றிக்கொள்வதினுலே செவிப்புலனுல்மாய்கின்றது, மகிழ்ச்சியாகிய

றீரப்புணர்ச்சிக்காகப் பெண்யானையானது தன்னை ஆண்யானைபுணர்ந்தபின் எடாமற்போமேயானல் கிடந்தகிடக்கையில்கிடந்து இறக்கின்றது கண்ணாலேவிளக்கைக்கண்டு விட்டிலானது அவ்விளக்கில்வீழ்ந்திறக்கின்றது, கொடியதூண்டிலினுள்ள உணவைக்கவ்வி மீனானது வாய்ப்புலனால்சாகின்றது, வண்டானது சண்பகமலரைச்சேர்ந்து மணத்தைமுகர்ந்து நாசிப்புலனால் இளைத்து மரணமடைகின்றது, அந்தஐம்புலவாசைகளையுமொருமிக்கவுடைய நான் அவற்றைப்போலஅலைந்துஅழியாமல் ஒப்பில்லாததிருமந்திரோபதேசத்தால் என்னைத்திருந்தச்செய்து காக்கும்படி அழகிய ஆசாரியமூர்த்தமாய்வந்து எழுந்தருளினையே எம்பிரானே—எ-று. (உஉ)

ஆகாரநித்திரைமைதுனம்பயந்தான் - - - - - *
அனைத்துயிர்க்குமுண்டுநரர்க்கதிகஞானம் - - - *
சேகாருநல்வினைதீவினையிரண்டால் - - - - *
சுற்றின்பேபேரின்பாச்சேர்ந்திடாமல் - - - *
நாகாரிவாகனனேகேசவாநின் - - - - - - *
நற்பதங்கண்டேடேறக்குருவுரைக்கும் - - - *
ஏகாந்தவுபதேசப்பொருளைநம்பி - - - - - *
எண்ணமெஞ்ஞானந்தருவாயெம்பிரானே. - - *

(இ-ள்.) எல்லாச்சேதனர்களுக்கும்ஆகாரம்-நித்திரை, புணர்ச்சி, பயம் சாதாரணமாயுண்டு. அவர்களுள் மனிதப்பிறப்பினர்களுக்குஅதிகஞானவுணர்ச்சியுண்டு, அப்பிறப்பினர்களில் ஒருவனாகிய நான் விட்டொழியாது நிற்கின்ற நல்வினையால்கிடைத்த நசுரமாகியஇகபோகமே நித்தியானந்தமென்றுகருதித் தீவினையால் மதிமருண்டு அதில்அழுந்திக்கெடாமல் உன்னுடைய சீர்பாதங்களைக்கண்டு ஈடேறும்படி ஆசாரியர் திருவாய்மலர்ந்தருளியதனியிடத்தினின்றுசிந்திக்கத்தக்க திருமந்திரார்த்தத்தை உண்மையெனக்கருதிச்சிந்திக்கும்படியான மெய்ஞ்ஞானத்தைத்தந்தருளாய் வேதசுரூபியாகிய பெரியதிருவடிகளை வாகனமாகவுடையானே பிரமனும்உருத்திரனும் உன்னிடத்தில்பிறந்தகாரணத்தாலே கேசவனென்னுந் திருநாமத்தையுடையானே எம்பிரானே—எ-று. (உ௩)

பெருத்திருந்தபூசினிப்பூவின்கிழ்க்கொட்டை - - - *
பெருந்துயர்ந்துகாயாம்பூத்தேய்ந்துற்றுப்போல் - *
கருத்திலுறுநல்லறிவைவீறெட்டாமல் - - - *
கபடமுறுபுல்லறிவுமேலிட்டந்நாள் - - *
குருப்பகருமுபதேசப்பொருளைநம்பக் - - - - *
குறைவறவேயுருவேறத்திருவுமேறி - - - *
இருட்பறந்துமெய்ஞ்ஞானம்விளங்கச்செய்தாய் - - *
இறைவாநாராயணனேயெம்பிரானே. - - *

(இ-ள்.) பெரியதாயிருந்த பூசினிப்பூவின்கீழிருந்தபிஞ்சானது

நாளுக்குநாள்வளர்ந்து காயாகவே மேல்நின்றபூக்குறைந்து சிறுப்பதுபோல உள்ளத்தில் பொருந்தியஞானத்தைப்பெருகவொட்டாமல் கபடத்தோடுகூடிய அற்புத்தியானது அதிகவிருத்தியாகி மேவிட்டநாளில் ஆசாரியர்உபதேசித்ததிருமந்திரத்தின்பொருளை உண்மையெனக்கொண்டு அநுட்டானத்தில் யாதொரு குறைவுமில்லாமல் உருப்போடுவதினால் அறிவின்செல்வம்வளர்ந்து அஞ்ஞானவிருள்பறந்து நினக்கே தாசனென்னும் மெஞ்ஞானம் விளங்கும்படி என்னைத்திருத்திக்கொண்டாய் இறைவனே நாராயணனே எம்பிரானே — எ-று. (௨௪)

உப்புததிதேனுததிகருப்பஞ்சாற்றின் ... ... *
உத்திநெய்யினுததிதயிருததியுன்றன் ... ...*
வைப்பெனும்பாலுததிநன்னீருததியென்னும் ... ... *
வளைகடலேழுண்டாக்கித்தீவுண்டாக்கிக் ... ... *
கப்பலுடன்சோங்குமரக் கலமுண்டாக்கிக் ... ... *
கடலோடிக்கரையேறக் கற்பித்தாப்போல் ... ... *
இப்பிறவிக்கடலேழுங் கடந்தேயுய்கைக்... ... ... *
கெழிற்குருவாயுதித்தனையே யெம்பிரானே ... ...*

(இ-ள்.) உப்புக்கடல், தேன்கடல், கருப்பஞ்சாற்றுக்கடல், நெய்க்கடல், தயிர்க்கடல், நீ அறிதுயிலமர்ந்த திருப்பாற்கடல், நன்னீர்க்கடல், என்னும் ஏழுகடல்களைச்சிருட்டித்து அவற்றினிடையிடையே தீவுகளுண்டாக்கி அவ்விடங்களுக்குச்செல்ல விரும்பினவர்கள் கப்பல்சோங்குஓடங்களைச் செய்துகொண்டு கடலின்மேற்சென்று கரையேறக்கற்பித்ததுபோலத் தேவப்பிறப்புமுதலிய எழுவகைப் பிறப்புக்கடலைக்கடந்துஅடியேன்உய்யும்படி அழகியகுருமூர்த்தமாய்எழுந்தருளினையே எம்பிரானே எ-று. (௨௫)

ஸ்ரீராமாவென்றொருகா லுரைத்தாலுன்றன் ... ... *
திருநாமமாயிரத்துக்கிணையாமென்றே ... ...*
நீராருஞ்சடையான்பாகத்துமைக்கு ... ... *
நிகழ்த்திடினம்மந்திரத்துக்கிணையொன்றுண்டோ ... ...*
பாராருமதுதனையுச்சரித்திடேறப் ... ... *
பத்துருவிலிராமனென்றேமுக்கால்வந்த ... *
ஏராரும்பரசுராமாஸ்ரீராமா ... ... *
எழிற்பலபத்திரராமாவெம்பிரானே. ... ...*

(இ-ள்.) ஸ்ரீராமாவென்று ஒருமுறைஉச்சரித்தால் அத்தாரகமந்திரவாச்சியனாகிய உன்னுடைய மற்றதிருநாமங்களை ஆயிரமுறை உச்சரிப்பதினால் பெறக்கூடியமேலானபயன் பெறக்கூடுமென்று கங்கையைத்தாங்கிய சடாபாரத்தையுடையசிவனார் தமது இடப்

பாகத்தில்தங்கிய உமாதேவிக்குஉபதேசித்தனர், மெய்ஞ்ஞானச் செல்வராகிய ஸ்ரீருத்திரபகவான் அப்படிச்சொல்லினுல் அந்தத் தாரகமந்திரத்துக்கு ஒப்பாகிய ஒருமந்திரமும்உண்டோ, உலகத்திலுள்ளவர்களும் அம்மந்திரத்தை உச்சரித்து உஜ்ஜீவிக்கும்படி தசாவதாரங்களுக்குள் ராமனென்று மூன்றவதாரங்களைச்செய்த தவத்தினழகு மிகுத்தபரசுராமா ஸ்ரீராமா அழகியபலராமாஎம்பிரானே எ-று. (௨௬)

ஸ்ரீஹரியேநின்கோயிற்றுவாரபாலர் ... ...*
செயவிசயரிருவருநின்னேவலாகும் ... ...*
காரணத்தாலிரணியனோடிரணியாக்கன் ... ... *
கடியராவணனுடனேகும்பகன்னன் ... ... - *
மாசிநிகர்சிசுபாலனுடனேதந்த ... ...*
வக்கிரனுமாகமுக்கால்வதைத்துமீண்டும் ... *
ஈரமுடன்பண்டையினுஞ்சாரூபந்தந் ... ... - *
தேற்றமுறவைத்தனையேயெம்பிரானே. ... ... *

(இ-ள்.) ஸ்ரீவைகுந்தத்தில் உன்னுடைய திருக்கோயிலினது துவாரபாலர்களாகிய ஜெயவிஜயர்களிருவரும், உனது அடியாராகிய துருவாசமுனிவர் பக்கல்செய்த அபசாரத்துக்காக இட்ட உனது கட்டளையே காரணமாக அவ்விருவரும், கிருதயுகத்தில் இரணியன்-இரணியாட்சசனென்றும் திரோதாயுகத்தில் கொடிய இராவணன், கும்பகருணனென்றும், துவாபரயுகத்தில் சாதுக்களுக்குநோயையொத்த தந்தவக்கிரன், சிசுபாலனென்றும் வந்துபிறக்க அம்மூன்றுமுறையும் அவர்களைவதைசெய்து மறுபடியும்அன்போடு உனதுசாரூபத்தைத்தந்தருளி முன்னையினும் பெருமையாகவைத்தாய் எம்பிரானே—எ-று. (௨௭)

கரியுன்னிமூலமேயென்றமட்டில் ... ...*
கராவைவதைத்தொருநொடியிற்கரியைக்காத்தாய்... *
உரிகின்றதுகில்வளரக்கண்ணாவென்றே ... ... - *
உரைத்தளவிற்றிரௌபதைக்குமானங்காத்தாய் ... - *
அரியெங்குமுளனென்றோர்பாலன்சொல்ல ... ... -*
அக்கணத்திற்றூணினரசிங்கமானாய் ... ... - *
எரிகின்றபெருந்தணலையவனுக்கன்றே ... ... *
இமசலமாக்கினையரியேயெம்பிரானே. ... ... -*

(இ-ள்.) கஜேந்திராழ்வானென்னும் யானையரசானது தியானித்து ஆதிமூலமேயென்றழைத்தமட்டில்முதலையைக்கொலைசெய்து ஒருநொடிப்பொழுதில் அந்தயானை யரசைக்காத்தாய். அரசர்சபையில் உரிகின்றவஸ்திரத்தினிமித்தம் ஸ்ரீகிருஷ்ணாவென்று கைகளைக்குவித்துச்சொன்னமாத்திரத்தில் திரௌபதைக்குவஸ்திரங்கள்

ஒன்றின்மேலொன்றுவளரச்செய்து மானத்தைக்காத்தாய் ஸ்ரீஹரி எங்குமுளனென்று சிறுகுழந்தையாகிய ஸ்ரீபிரகலாதாழ்வான் சொல்ல அந்தட்சணத்திலே தூணினின்றும் நரசிங்கத் திருவுருக் கொண்டுவெளிப்பட்டாய், இதுவுமன்றி எரிகின்ற பெருநெருப்பை அப்பிரகலாதாழ்வானுக்குஅக்காலத்தில்பனிச்சலத்தைப்போலக்குளிரவைத்தாய் எம்பிரானே—எ-று. (உஅ)

திருமணிட்டுநீறுமிட்டுவேதமார்க்கச் ... ... *
சீர்பெரியவயிட்டிணவர்சைவபுத்தர் ... ...*
அருகர்பாற்கரர்துருக்கர்கருத்தனுண்டென் ... ... *
அறுசமயத்தோர்களுக்குமிறைவனீயே ... ... *
தருமநெறிபதிவிரதமறையொழுக்கம் ... ... *
தயைசமஞ்சத்தியமொடுருளுடையபோக்கே ... ... *
இருளறுத்துமெய்ஞ்ஞானம்விளங்கச்செய்வாய் ... *
எங்கணாராயணனேயெம்பிரானே ... ... *

(இ-ள்.) ஊர்த்துவபுண்டரந்தரித்துப் பரமவைதிகமார்க்கத்தார்களாகிய பெரியசீர்வைணவர்களும், திரியக்குப்புண்டரந்தரித்தச்சைவர்களும், புத்தர்களும், சமணர்களும், பாஸ்காரர்களும், துருக்கர்களுமாகியகடவுளுண்டென்கிற அறுசமயத்தார்களுக்கும்பலப்பிரதனானதேவனீயேயாம், அப்படியிருந்தும்பரமவைதிகமார்க்கமும், அந்தமார்க்கநூல்களாற்சொல்லப்பட்ட தருமவழியும், உன்னையன்றித் தேவதாந்தரங்களைத்தொழாமையும் சேதனர்களிடத்தில்தயையும், சமபுத்தியும், யதார்த்தமும், வைராக்கியமுமுடையவர்களுக்கே அஞ்ஞானாந்தகாரத்தையொழித்துந் தத்துவஞானத்தை விளங்கச்செய்வாய் எங்களுடைய நாராயணனே எம்பிரானே—எ-று. (உகூ)

திருக்கச்சிநம்பியுனைநம்பிச்செம்பொற் ... ... *
றிருவாலவட்டக்கைங்கரியஞ்செய்து ... ... *
பெருக்கமகிழ்ந்தேதிருவாய்மலர்ந்துபேசிப் ... ... *
பேதமற்றுத்திட்டமாயிருக்கவோர்நாள் ... ... *
கருக்கவினிவருளாளன்மறைவிற்றூங்கக் ... ... *
காணுமலருளாளாவென்னநீவந் ... ... *
திரக்கமுடன்கைவிளக்குப்பிடித்துச்சென்றாய் ... *
இயல்சக்கராயுதனேயெம்பிரானே. ... ... *

(இ-ள்.) திருக்கச்சிநம்பிகள் நீயேமுதற்கடவுளென்று உன்னை நம்பிச்செம்பொன்னாற்செய்த திருவாலவட்டக்கைங்கரியஞ்செய்ய நீஅவர்செய்யுங்கைங்கரியத்துக்கு மிகவுந்திருவுளமுகந்து நீ சுவாமியென்றும் அவர்தொண்டரென்றும் பேதமில்லாமல் திருவாய் மலர்ந்து வார்த்தையாடிக்கொண்டு இந்தமுறையாக நடந்துவருகையில்ஒருநாள் தம்மோடுவந்த அருளாளனென்கிற சிறுவன் மி

குந்த இருளடர்ந்த நடுராத்திரிப்பொழுதில் மறைவான ஓரிடத்தி
ல் நித்திரைசெய்ய, அஃதறியாமல் அருளாளா அருளாளாவென்று
அழைத்தபோது நீ அச்சிறுவனைப்போல உருக்கொண்டோடிவந்
து மிக்ககருணையோடு அந்தத்திருக்கச்சிநம்பிகளுக்குக்கைவிளக்கு
ப்பிடித்துக்கொண்டு முன்னடந்தாய் நின்னடியார்பக்கலில் அப
சாரப்படுகின்ற துஷ்டசனங்களைத்தேடித்திரிகின்றசுதரிசனமென்
னும்சக்கராயுதத்தையுடையானே எம்பிரானே—எ-று. (௫0)

திறத்தபொய்கையார்பூதத்தார்பேயாழ்வார் ... ... *
திருமழிசையார்வில்லிபுத்தூராழ்வார் ... ... - *
அறிக்கைமிகுங்குலசேகராழ்வார்ஞான ... ... *
ஆரணத்தைத்தமிழ்செயுநம்மாழ்வார்பத்தி ... *
குறைச்சலிலாத்தொண்டரடிப்பொடியாழ்வார்பண் ... - *
குனிர்ந்தசொல்லாலிசைபாடுந்திருப்பாணழ்வார் ...- *
இறக்கவெட்டிப்பறித்ததிருமங்கையாழ்வார் ... ... *
இவர்பதின்மர்க்கருளினையேயெம்பிரானே ... *

(இ-ள்.) மெய்ஞ்ஞானத்திதம்பெற்ற பொய்கையார், பூதத்தா
ர், பேயார், திருமழிசையார், வில்லிபுத்தூரார், தமதுசேஷித்து
வத்தைவிண்ணப்பஞ்செய்தருளிய குலசேகரர், ஞானபாகமாகிய
தமிழ்வேதத்தைவெளியிட்டருளிய சடகோபர், பூரணபக்தியுடை
யதொண்டரடிப்பொடியார், குளிர்ந்த இசையமைத்த பாசுரங்க
ளால் உன்னைப்பாடிய திருப்பாணர், எதிர்ப்பட்டவர்களுக்குப்பி
றவிப்பிணி அகலநீக்கி அவர்களிடத்துள்ளபொருள்களைப்பறித்து
த்திருவரங்கம் பெரியகோயிற்கைங்கரியஞ்செய்ததிருங்கைமன்ன
ர்ஆகிய ஆர்த்தருபப்பிரபத்திநிஷ்டர்கள் பதின்மர்களுக்கும் உன
துகருணையைப்பாலித்தாயே எம்பிரானே—எ-று. (௫க)

பத்துப்பேராழ்வார்கடமினம்மாழ்வார் ... ... *
பாதாரவிந்தத்தைப்பணிந்துபாடி ... ... *
முத்திபெறவருமதுரகவியாழ்வாரும் ... ... - *
மூதறிவாலுயர்வேதப்பொருளைக்கொண்டே ... ... *
உத்தமமாம்பாமாலையொடுபூமாலை ... ... - *
உகந்துனக்குத்தருங்கோதையாருங்கூட ... ... - *
இத்தலத்திற்பன்னிரண்டுபேராழ்வாரொன் ... ... - *
றெண்ணமுறவைத்தனையேயெம்பிரானே ... - *

(இ-ள்.) முனிவர்களிலும் பெருமையாகிய பத்தாழ்வார்களில்
நம்மாழ்வாருடைய திருவடித்தாமரைகளைவணங்கி அவரையேபா
டிப் பரமபதத்தைஅடைய அவதரித்தமதுரகவியாழ்வாரும், மு
திர்ந்தஞானத்தால் உயர்ந்தவேதப்பொருளையமைத்து உத்தமமா
கிய பாமாலையோடு பூமாலையைப்பரிசியாக உனக்குத்தந்தருடிக்

கொடுத்தநாச்சியாரும் ஆகிய ஆசாரியாபிமானநிஷ்டர்களிருவர்களோடுஇத்தப்பூமியில்ஆழ்வார்கள்பன்னிருவர்களென்று பரமவைதிகமார்க்கத்தார்கள்சிந்திக்கும்படிவைத்தாய் எம்பிரானே—எ-று

அருள்பெருகுபொய்கையாருறங்கப்பூதத் ... ...*
தாழ்வார்வந்திருவராயிருக்கப்பேயார்... ... ... *
சொரிமழையிற்போய்மூவராகிநிற்கச் ... ...*
சுரர்க்கரியநீநாலாம்பேராத்தோன்றி ... ... *
கருணையுடனம்மூவர்பாடல்கேட்டுக் ... ...*
கமலமலர்த்திருமங்கைமார்பின்மேவ ... ... *
இருளறவேகோவலூராயனுமொன் ... ...*
றிடைகழியினின்றனையேயெம்பிரானே. ... ... *

(இ ள்.) ஸ்ரீசர்வேசுரனாகிய உன்னையடைந்து உஜ்ஜீவியாத அதமர்கள் உஜ்ஜீவிக்கும்படி அவர்களிடத்துக் கருணைபெருகுகின்ற பொய்கையாழ்வார், உன்னுடைய மாயாசாதுரியத்தால் மகாந்தகாரமும் பெய்கின்றபெருமழையுமுண்டாகவே ஒரு ஸ்ரீவைஷ்ணவருடைய இடைகழித்திண்ணையில்சயனித்து நித்திரைசெய்தருள பூதத்தாழ்வார் அங்கேயெழுந்தருளி அடியேன்சயனிக்கஇடமுண்டோவென்ன, சுவாமீ இங்குஒருவர்படுக்கலாம், இருவரிருக்கலாம் தேவரெழுந்தருளிஇருக்கலாமென்று விண்ணப்பஞ்செய்ய, இருவருமாயிருந்தார்கள், பின்புபேயாழ்வாரும் இடந்தேடி அத்திருமாளிகைக்கேவந்துசயனிக்க இடமுண்டோவென்று கேட்டருள, முன்னெழுந்தருளியிருந்தஇருவர்களும் இந்தத்திண்ணை ஒருவர்படுக்கலாம் இருவரிருக்கலாம், மூவர்நிற்கலாமென்றுசொல்லியருள இருவரும் உள்ளேசென்றருளி மூவருமாய்நின்றுகொண்டு ஒருவனாயொருவர் விசாரித்துப் பகவத்சம்பந்திகளா யிருக்கையைக்கண்டு சந்துஷ்டர்களாயிருக்கையில் தேவர்களுஞ் சொல்லுதலரிய நீஇவர்கள் சேர்த்தியைக்கடாட்சித்து இப்போதே காரியங்கொள்ளவேண்டுமென்று அந்தப்பரமயோகிகளுக்கு இடையே நாலாம்பேராகத்தோன்றி நெருக்கமுண்டாக்க, முதலாழ்வார்கள்மூவரும் முன்னில்லாதநெருக்கம் இப்போதுண்டானதென்னென்றுநினைத்தருளிப் பொய்கையார் கண்ணிருள்கெடச் சூரியதீபத்தை ஏற்றிப்பார்க்க பூதத்தார் ஞானதீபத்தையேற்றிப்பார்க்க, பேயார் இந்த இரண்டுபகல்விளக்காலும் இராவிளக்காலும்களவுசெய்யினும் ஒளிக்கவொண்ணாத பெரியபிராட்டியரோடு உனது திவ்வியமங்களவிக்கிரகத்தைத அக்கண்களால் சேவித்தனுபவித்து அவ்வனுபவத்தைச்சாதுஜனங்களறிந்து உஜ்ஜீவிக்கும்படி பொய்கையாழ்வார் வையந்தகளியாவென்கிற முதல்திருவந்தாதியையும் பூதத்தாழ்வார் அன்பேதகளியாவென்கிற இரண்டாந்திருவந்தாதியையும், பேயாழ்

வார் திருக்கண்டேனென்கிற மூன்றாந்திருவந்தாதியையும் திருவாய்மலர்ந்தளக் கருணையுடன் அந்தமூவருடைய அருளிச்செயல்களையுங்கேட்டு தாமரைபுஷ்பத்திலெழுந்தருளிய திருமங்கையார்திருமார்பில்விளங்க உலகத்தினதஞ்ஞானவிருள்நீங்கும்படி கோவலூராயனாறொன்றுஇடைகழியில்நின்றாய் எம்பிரானே—எ-று (௩௩)

வெயிற்காயுமாதித்தன்கனகத்தேர்க்கு ... ... *
விடநாகம்வடஞ்சகடொன்றேழுவாசி ... ...*
சயத்தாலாகாயத்திற்றேர்நடாத்தும் ... ... *
சாரதிகாலிரண்டுமிலாமுடவனுன்றன் ... ... *
மயத்தான்மாமேருவைத்தேர்சுற்றியாங்கு ... ... *
மறைந்துதிப்பதேதினமாநின்வேதத்தின்... ... ... *
இயற்சேரும்பிரமகற்பங்கிராணநன்னாள் ... ... *
இதிற்றேன்றவைத்தனையேயெம்பிரானே. ... ...*

(இ-ள்.) வெயிலைவீசுகின்றசூரியனுடைய பொன்மயமாகியதேர்க்கு விஷமுள்ளசர்ப்பம்வடம், சக்கரம்ஒன்று, அதையிழுக்குங்குதிரைஏழு, வந்தெதிர்க்கிறஅசுரர்களைவெற்றிகொண்டு ஆகாயத்தில் அத்தேரைநடத்துகின்றசாரதி இரண்டுகாலுமில்லாத முடவன் உன்னுடைய அருளால்மகமேருவை அந்தத்தேர்சுற்றுகையில்அங்கேமறைந்து உதயஞ்செய்வதே தினமாகும், உன்னையேமுதற்கடவுளெனப்பிரதிபாதிக்கின்றவேதங்களிலும்அவ்வேதத்தோடொத்தநூல்களிலும் சொல்லப்பட்ட பிரமகற்பமும், கிரகணமும் மற்றுஞ்சுபதினங்களும் அத்தினங்களினாலே உண்டாகும்படி கற்பித்துவைத்தாய் எம்பிரானே—எ-று. (௩௪)

உதித்துவரும்போதுமத்தியானப்போதும் ... ... *
உயரத்தமலைவாயில்புகுமப்போதும் ... ...*
மதித்தசுரருக்கலைத்தேர்நடத்தொட்டாமல் ... ... *
வளைந்துபொரத்திருநாபிக்கமலம்வந்த ... ...*
விதிக்கடவுளுரைத்ததிருமந்திரத்தால் ... ... *
விப்பிரர்கள்யாவருமுச்சந்திதோறும் ... ...*
எதிர்த்திறைத்தநீர்க்கணையாலசுரர்கிழ்பட் ... ... *
டெதிர்நடக்கப்பண்ணுகின்றாயெம்பிரானே.... ... ...*

(இ-ள்.) உதயஞ்செய்துவருகிறகாலத்திலும், மத்தியானகாலத்திலும், அஸ்தமனமலையில் சேருகிறகாலத்திலும், யுத்தச்செருக்குக்கொண்டு அசுரர்கள் சூரியனைத் தேர்நடத்தவொட்டாமல்வளைந்து போர்செய்யாநிற்க, உன்னுடைய திருநாபிக்கமலத்தில்உதித்தபிரமதேவன்சொல்லியருளிய சிறந்தமந்திரத்தினால் பிராமணர்கள்யாவரும் மூன்றுசந்திகாலத்திலும் எதிரேநின்று இரண்டுகைகளினாலும் இறைக்கின்றநீராகிய அம்புகளினாலே அந்தஅசுரர்கள் அப

சயப்படச்சூரியன்தேர் நேராகப்போகச்செய்கின்றாய் எம்பிரானே—எ-று. (௫௫)

திண்ணமுடன்பாண்டுவுக்குச்சாபமுற்றும் ... ... *
திறற்றருமனுற்பவித்தானென்றமட்டில் ... ... *
கண்ணிலாத்திருதராட்டிரன்றன்றேவி... ... ... *
காந்தாரிகருப்பம்விழப்புடைத்துக்கொள்ள ... ... *
மண்ணிலதுபொன்றாமுன்முனிவியாசன் ... ... *
வந்தெடுத்துப்பலகலசத்தடைத்துநின்பேர் ... ...*
எண்ணவதுநூற்றுவராய்ப்பிறக்கச்செய்தாய் ... ... *
இறைவாநாராயணனேயெம்பிரானே. ... ... *

(இ-ள்.) பாண்டுமகாராஜனுக்குக் கிந்தமனென்னும்முனிவரால் உறுதியானசாபம் சம்பவித்திருந்தும் பாவத்தை வெற்றிகொண்ட தருமராசன் பிறந்தானென்றுகேள்விப்பட்டமாத்திரத்தில் பார்வையில்லாததிருதராட்டிரனுடைய மனைவியாகியகாந்தாரியானவள்தன்வயிற்றிலுள்ளகருப்பமானதுகலங்கிவிழும்படிகல்லால்மோதியடித்துக்கொள்ள அதனால் கலங்கிவீழ்ந்த கருப்பவுதிரமானது வீணேயழிந்துபோகாமல் நூறுகலசங்களிலும்மீதியை மற்றொரு கலசத்திலும் அடைத்துவைத்து வியாசமுனிவர் உனதுதிருநாமத்தைத் தியானிக்க அந்தவுதிரம் துரியோதனன்முதலிய நூறுபேராகவும் துச்சளையென்கிற ஒருபெண்ணாகவும் பிறக்கச்செய்தாய் எம்பிரானே—எ-று. (௫௬)

விண்ணுலகுமண்ணுலகுமசுரர்மிஞ்சி ... ... *
வேதமற்றுவேள்வியற்றுநீதியற்றாண் ... ...*
பெண்ணென்னுங்குலமாண்டும்வரம்புகெட்டுப் ... ... *
பிரமாவும்படைப்பொழிந்திட்டிருந்தநாளில் ... ...*
திண்ணமுடன்கருடவாகனமீதேறித் ... ... *
திறலசுரரனைவரையுங்கொன்றுதேவர் ... ... *
எண்ணவுலகிரேழும்படியச்செய்தாய் ... ...*
இறைவாநாராயணனேயெம்பிரானே. ... ... *

(இ-ள்.) சுவர்க்கத்திலும் பூமியிலும் அவைதிகமார்க்கானுசாரர்களாகியஅசுரர்கள் பெருகிமிகுந்தகொடுமைசெய்ததினாலே வேதபாராயணம்ஒழிந்து உன்னைக்குறித்துச்செய்யும்யாகங்கள் அற்றுப்போய் மநுநீதிமுறைகெட்டுப் புருஷர்கள் ஸ்திரீகளென்கிற வரம்ப சிறிதுமில்லாமற்போக இவ்விபரீதத்தைக்கண்டு பிரமனும் சிருட்டித்தொழிலை நடத்தாமல் இருந்தநாளில் தர்மஸ்தாபனார்த்தமாக நீபெரியதிருவடிகளின்மேலெழுந்தருளி தேவர்முதலானோர்களை வெற்றிகொண்டிருந்த அசுரர்கள்யாவரையுஞ்சங்கரித்துத் தேவர்கள்முதலானோர்கள் உன்னைத்தியானிக்கும்படிச் சதுர்த்தசபு

வனங்களையும் வேதநெறிப்படி அடங்கிநடக்கச்செய்தாய் இறைவனேஎம்பிரானே—எ-று. (கள)

வன்னியினன்புகழ்விசுவதேவன்சுத்த ... ... *
வருணனன் வயிஷ்காரணியனிந்திரன்சீர் ... ...*
நன்னெறிசேர்தேவமுனியேகபாதன் ... ... *
நமன்வாயுவுமைபிதிர்கடனகுபேரன் ... ...*
சொன்னமருஞ்சங்கரனுர்விதியாமென்னும் ... ... *
குறைவிலாவிவர்கள்பதினைந்துபேரும்... ... ...*
இன்னமுதமதிக்கலையைத்தினமொன்ருக ... ... *
என்றுமுண்ணவைத்தனையேயெம்பிரானே. ... ...*

(இ-ள்.) அக்கினி, சூரியன், புகழ்மிகுந்தவிசுவதேன், பரிசுத்தமாகிய வருணன், வயிஷ்காரணியன், இந்திரன், சிறந்த நன்னெறியைச்சேர்ந்த தேவமுனி, ஏகபாதன், எமன், வாயு, உமை, பிதிர்த்தேவதைகள், தனத்தில்மிகுந்தகுபேரன், பெருமைதங்கிய சிவன், பிரமன்என்கிற குற்றமில்லாத இப்பதினைந்துபேரும் இனிமையாகிய அமிர்தகிரணங்களையுடைய சந்திரனதுகலைகளைத் தினம் ஒன்ருக எந்நாளுமுண்ணும்படிக்கற்பித்தாயேஎம்பிரானே—எ-று. ()

முதற்பிறையாமென்னுமோர்கலையிற்கூடி ... ... *
மூவைந்தும்வளர்ந்துகலைபதினருகும் ... ...*
மதிக்கலையிற்பதினைந்தைச்சுரருண்டென்று ... ... *
வந்திதனைக்கூடுமமாவாசைநாளில்... ... ... *
கதிர்ப்பரிதிபசும்பயிர்புல்கன்மரத்தில் ... ...*
கலந்தணைந்துபசுவிடத்தேவந்துகூட ... ... *
இதிற்பஞ்சகௌவியத்தாற்பணுமோமத்தால் ... ...*
இந்துதிக்கப்பண்ணுகின்ருயெம்பிரானே. ... *

(இ-ள்) முதற்பிறையாகிய ஒருகலையோடுகூடிப்பதினைந்து கலைகளும் வளர்ந்து கலைகள்பதினருகும், அச்சந்திரனது கலைகளிலே பதினைந்துகலைகளைத் தேவர்களுண்டு மீதியாயுள்ள கலையைச் சூரியன்வந்து சேருகின்ற அமாவாசைநாளில் கிரணவளப்பமுள்ள சூரியன் உன்கலையினமிர்தமானது அவனதுகிரணத்தின்வழியாகப் பசுமையாகிய பயிர், புல், கல், மரம் இவற்றில் கலந்துசேர்ந்து பசுக்களிடத்தே வந்துசேர அப்பசுவினிடத்தே உண்டாகும் கோசலம், கோமயம், பால், தயிர், வெண்ணெய்ஆகியபஞ்சகௌவியத்தாலேசெய்யும் ஓமாக்கினியால்மறுபடியும் சந்திரனுடைய கலைகள் நிரம்பக்கற்பிக்கின்ருய் எம்பிரானே-எ-று. (கக)

காமனுநவிலிபுரவிகிளிதேர்காற்றுக் ... ...*
கடன்முரசங்குயில்காளஞ்சேனைமின்ஞர்... ... *

மாமகரங்கொடிகரும்பு சிலைநாண்வண்டு ... ...*
மலர்கணைகளிவைகொண்டே மதனாய்விறிப் ... ...*
பூமியுயர்வானமெங்குஞ் சஞ்சரித்துப் ... ...*
பூங்கணையெய்தாண் பெண்ணைப்பொருத்திக்கூட்டி... ...*
ஏமநிறத்தயன்படைப்பு மிவனால்வர்த்தித் ... ...*
தேற்றமுறவைத்தனையே யெம்பிரானே ... ...*

(இ-ள்) நீமனத்தில்ஜனிக்கச்செய்த மன்மதன் உருவமில்லாதவன், குதிரைகள்-கிளி-தேர்-தென்றற்காற்று, பேரி-கடல், காளம்-குயில்கள்-படை-மின்னல்போலு முருவமுள்ளமங்கையர்கள், கொடி-மகரமீன், வில் கரும்பு, நாணிவண்டுகள், அம்பு தாமரைமுதலியமலர்கள், இவைகளைக்கொண்டு மிகவும்செருக்குடையவனாகிவிதிசிவாதி சமஸ்தசேதனர்களையும்தன து ஆணைக் குட்படுத்தித்திரிலோகத்திலும் சஞ்சரித்துப்பூவாகிய அம்புகளையெய்வதினால்ஆண்பெண்ணோடு புணரச்செய்யப் பொன்னிறமுள்ள பிரமனுடைய சிருட்டியும் இம்மன்மதனால் விருத்தியாகிப்பல்கும்படிகற்பித்தாய் எம்பிரானே—எ று (சய)

பட்டமற்றுப்பதினாலாண்டடவியுற்றுப் ... ...*
பத்தினியுஞ்சிறைபோய்ப் பின்னோனுநீயும் ... ...*
மட்டறவேசலித்திருக்கச் சுக்கிரீவன் ... ...*
வந்துதவக்கவித்திரளாற் சேதுக்கட்டித் ... ...*
துட்டனெனும்ராவணனைக் கொன்றுதேவர் ... ...*
தோத்தரிக்கவீட்ணற்குப் பட்டங்கட்டி ... ...*
இட்டமுடனுலகாண்ட ஸ்ரீராமாவென் ... ...*
றெண்ணவிருளறுக்கின்றாய் யெம்பிரானே ... ...*

(இ-ள்)தேவர்களுடைய வேண்டுகோளால் பட்டாபிஷேகம் நீங்கிப்பதினான்குவருஷம் ஆரணியத்தில் எழுந்தருளியிருந்து, கணப்பொழுதும் அகலகில்லாதமகேஸ்வரியாகிய சானகிபிராட்டியாரும் இலங்காநகரத்தில் சிறையிருக்க, இளையபெருமாளும்நீயும்அதிவிசனாக்கிராந்தர்களாயிருக்கும்போது, சுக்கிரீவமகாராஜாவந்து உதவிசெய்ய வானரசேனைகளைக் கொண்டு சமுத்திரத்திலே திருவணைகட்டி, வேதபாகியசார துஷ்டனாகிய ராவணனைச் சங்கரித்துஎல்லாத்தேவர்களும் துதிசெய்ய ஸ்ரீவிபீஷணாழ்வானுக்குப்பட்டங்கட்டிமீண்டு திருவயோத்தியாபுரிவந்துசேர்ந்து அன்போடுஉலகத்தையாண்ட ஸ்ரீராமாவென்று தியானிக்குமவர்களுடைய பிறவியிருளை நீக்கி யருள்செய்கின்றாய் எம்பிரானே—எ-று. (சுக)

மீதானமச்சகந்திமகன்செத்தில்லாள் ... ...*
வியாசமுனிக்குப்பெற்ற பாண்டுதந்தை ... ...*

மாதாக்கள்குந்தியுமத்திரையென்பாளும் ... ...*
மந்திரத்தாலவருக்கை வரையும்பெற்றார் ... ... *
சூதாடிப்பொய்யுரைத்துக் குருவைக்கொன்றார் ... ...*
துரோபதையைபஞ்சவர்க்குத் தேவியானாள் ... ...*
ஈதாரணப்பொருட்பாரதாமாமென்றே ... ...*
எண்ணவிருளறுக்கின்ற யெம்பிரானே ... ...*

(இ-ள்) மிகுதியாகிய புலவுநாற்றம்உடலில்வீசுகின்ற மச்சகந்தியினுடைய புத்திரனாகியவிசித்திரவீரியனிறந்துபோகவே, சந்ததிவிர்த்தியாகும்படி அந்த அரசனுடைய மனையாள் அம்பாலிகைஸ்ரீவியாசமுனிக்குப்பெற்ற பாண்டுமகாராசன் பிதா, மந்திரத்தாலே யமன், வாயு, இந்திரன், மருத்துவர்களிருவருமாகிய ஐவர்களுக்குத் தங்களைவரையும்பெற்ற குந்தியும் மாத்திரையும் தாய்மார்கள், இந்தப்பாண்டவர்களைவரும் துரியோதனாதிகளும் சூதாடியும், பொய்பேசியும், குருவாகிய துரோணரைக் கொலைசெய்தார்கள் திரௌபதையொருத்தியும் பாண்டவர்களைவருக்கும் தேவியானாள், இந்தச்சரித்திரம் வேதப்பொருளோடொத்த பஞ்சமவேதமாகிய ஸ்ரீமகாபாரதமாமென்று பிராமணர் முதலியோர்பாராயணஞ்செய்து சிந்திக்க அவர்களுடைய அக்கியானாந்தகாரத்தை ஒழிக்கின்றாய் எம்பிரானே—எ-று. (சஉ)

நண்ணியொருபாகவதன் வறுமைதன்னால் ... ...*
நாகரசன்பாற்சென்று நலிவுகூற ... ...*
மண்ணிலவனிருபதாண்டினுக்குச் செல்லும் ?... ... ...*
மனைவர்த்திக்கிந்தபின்னும் வாவென்றோதத் ... ...*
கண்ணதனுற்கானகத்திற் பசித்தவேங்கை ... ...*
கண்டவனுங்கலங்கியந்தக் கலக்கந்தீர ... ...*
எண்ணரியேயெனக்கேட்டே புலிக்குமுத்தி ... ... *
ஈந்தனைவேங்கடத்தரியே யெம்பிரானே ... .*

(இ-ள்) ஒருபாகவதர் வறுமையடைந்து நாகராஜனிடத்தில்சென்றுதமது மெலிவைச்சொல்ல, பூமியையாளுகின்ற அந்தஅரசன் இருபதுவருஷத்துக்குப்போதுமான மனைவர்த்திச் செலவுக்குப்பொன்னைக்கொடுத்துச்செலவழிந்தபின்னும் வாருங்கோளென்று சொல்ல, அப்படியே அவர்சென்று பொன்செலவழிந்தபின் அரசனிடம் மீண்டுவரும்போதுகாட்டில் பசியோடு தம்மெதிரேவருகின்ற வேங்கைப்புலியைத் தமதுகண்களாரக்கண்டு கலங்கி அந்தக்கலக்கந்தீரும்படி, யாவரும் சிந்திக்கின்ற ஹரியேயென்று உச்சரிக்க அம்மந்திரத்தைக் கேட்டபுலிக்கும் ஸ்ரீவைகுந்தத்லைத தந்தருளினாய்திருமலையிலெழுந்தருளியஸ்ரீஹரியேஎம்பிரானேஎ-று()

அறுசமயத்துறைகளுக்கு மிறைவனீயென் ... ... *
றறியாமற்பாண்டியன்முன் தருக்கத்துற்றவ் ... ...*

விறல்ரசன்பொற்கிழியை யுயரக்கட்டி ... ...*
விழப்பாடிக்கொடுபோமின் பெரியோரொன்ன ... ...*
மறைகளொன்றுமோதறியாப் பெரியாழ்வாரை ... ... *
மாமறைநீயோதுவித்துக் கிழியறக்கண் ... ...*
டிறைவணங்கிப் பட்டர்பிரான் வந்தானென்றே ... ...*
எண்ணவிருளறுத்தனையே யெம்பிரானே ... ...*

(இ-ள்) அறுசமயத் துறைகளுக்கும் நாதன் நீதானென்றறியாமல் பாண்டியராசன் முன்பலசமயிகளோடும் வாதுசெய்துபரம்பொருள் இன்னதெனவிளங்காமல், அந்தவெற்றியுள்ள பாண்டியன் பொற்கிழியை உயரக்கட்டி, எந்தச்சமயக்கடவுள் பரம்பொருளோ அதை நிருபித்து அக்கிழியறுத்துவிழப்பாடி அதனைக்கொண்டு போங்கோளென்று தெரிவிக்க, வேதங்களிலொன்றையும் ஓதவும் அறியாதபெரியாழ்வாருக்குச் சமஸ்தவேதங்களையும் வேதார்த்தங்களையும் விளங்கச்செய்து நீபரம்பொருளாயிருக்கும் உண்மையை மற்றசமயிகளும் அறிந்து கொள்ளும்படி அப்பெரியாழ்வாரைக்கொண்டு சொல்வித்துக்கிழியறச்செய்ய, அதுகண்டுபாண்டியன் நமஸ்காரஞ்செய்து பட்டர்பிரான் வந்தானென்று அவனையெண்ணி உபசரிக்க அவனுக்குப்பேதைமையிருளை நீக்கினாய்—எ-று

நந்தவனங்கொத்தநிலத் தெழுந்தபெண்ணை... ... ... *
நன்குவிண்டுசித்தரன்பாய் வளர்த்தநாளில் ... .*
சிந்தைமகிழ்ந்துனக்காழ்வார் கட்டிவைத்த ... .*
திருமாலையவள்சூடி நிழல்பார்த்திய ... ... *
உன்றனக்குமற்புதமாத் தினமுஞ்சார்த்தி ... ... *
உகந்துசூடிக்கொடுத்த நாச்சியாரென் ... ... *
றிந்நிலாக்குமிதுதிட்டங் காட்டித்தொண்டர் ... ... *
இருதயத்திலிருக்கின்று யெம்பிரானே ... ... *

(இ-ள்) நந்தவனத்தைக் கொத்தாநிற்கையில் அந்தநிலத்தில் அவதரித்தகோதையாரைப் பெரியாழ்வார் அன்போடு நன்றாகவளர்த்துவந்தநாளில் உள்ளன்போடு உனக்கு ஆழ்வாரானவர் கட்டிவைத்த திருமாலையை அந்தக்கோதையார் கண்ணாடி பார்த்துச்சூடி அழகமைந்த மாலைகளை உனக்குக்கொடுக்க, அந்தமாலைகளையே நீயும் அற்புதமாகச்சார்த்தித்திருவுளமுகந்து அக்கோலதையலைச் சூடிக்கொடுத்த நாச்சியாரென்றுகூறிப் பெரியபிராட்டியாருக்கும் இந்த அன்பைத்தெரிவித்து மெய்யடியார்களுடையஇருதயத்திலெழுந்தருளி யிருக்கின்றாய் எம்பிரானே—எ-று. (சரு)

மச்சகூர்மவராகநாரசிங்க ... ...*
வாமனமூவிராமபுத்தகர்க்கியாம்பத் ... ... *
தச்சுதவுன்னவதாரமாகுமென்றே ... ...*
அகிலாண்டந்தெளியுமிவற் றிரண்டாம்ராமன் ... ... *

கைச்சமராடக் குறுகப்பரசுராமன் ... ... *
கைச்சிலையைவாங்கியே நாறியேறிட் ... ...*
டிச்சகத்திலெப்பொழுது மழுவாளன்முன் ... ...*
இருக்குமுறைசெய்திட்டா யெம்பிரானே ... ...*

(இ-ள்) வேதங்களைக் கவர்ந்துகொண்டு கடலிலொளித்த சோமுகனை வதஞ்செய்ய மச்சமும், திருப்பாற்கடலைக்கடைந்த மந்திரமலையைத்தாங்கக் கூர்மமும், பூமியையெடுத்துச்சென்ற இரணியாட்சனைக்கொல்லப் புருஷவராகமும். சர்வதேவர் வணக்கத்தையும் அவர்களுக்கு இறைவனாகிய உன்வணக்கத்தையும் விலக்கின இரணியனைக்கொல்லநாரசிங்கமும், மாபலியினுடையகர்வத்தையடக்கவாமனமும், பரமவைதிகமார்க்கானுசாரிகளாகிய அந்தணர்களை அவமதித்த அரசர்களைக்கொல்லப் பரசுராமனும், வேதநெறியிற்றவறி நடந்து தேவர்முதலானோர்க்கு இடுக்கண்செய்த ராவணன்முதலிய இராக்கதர்களைக்கொல்ல ஸ்ரீராமனும், பிரலம்பன்முதலிய அசுரராம் சராசர்களைக்கொல்லப் பலபத்திரனும், உருத்திரன்திரிபுரத்தை அம்பாலெய்தெரித்து வெற்றிபெறும்படி அச்சங்கரபகவானுக்குத் தந்த வரத்தின்பொருட்டு அந்தத்திரிபுர அசுரர்களை வஞ்சிப்பதற்காகப்புத்தனும், தயைசாந்திமுதலிய நற்குணங்களைவிட்டுவேதங்களிடத்தில் அப்பிரமாணபுத்திபண்ணிச் சதுர்வேதபிரதிபாத்திய பரஞ்சுடராகிய உன்னிடத்திலும் பரமவைதிக மார்க்கத்தைப் பற்றியொழுகுகின்ற உன்னடியார்களிடத்திலும் துவேஷித்துத் திரியுமவர்களைச்சங்கரித்துத் தர்மஸ்தாபனஞ் செய்யும்பொருட்டுக்கற்கியுமாக அவதரித்தஅவதாரம் பத்தென்று இவ்வண்டத்திலுள்ளோர்கள் யாவர்களுந்தெளிகின்ற இவற்றுள்உன்னுடையஆவேசாவதாரமின்னதென்று தெரிந்துகொள்ளும்படி இரண்டாம் ராமாவதாரமாகிய பரசுராமன் வில்வித்தையில்தேர்ந்த கர்வத்தாலே போர்செய்யும்படி நெருங்கிவர அம்மழுவாளியினுடைய கைவில்லைவளைத்து நாணேறிட்டு அவனுடைய தவத்தை அபகரித்து இந்தப்பூமியில் சிரஞ்சீவியாயிருக்குமுறையைச்செய்தாய் அச்சுதனே எம்பிரானே—என்று, (௯௧)

பிறக்குமுன்னே வயிற்றுக்குட்கருவிறந்து ... ...*
பிணத்தைப்பெற்றழுதுசிலர் புரளவைப்பாய் ... ...*
குறுக்குப்பட்டேவயிற்றிற் பிணமாவீங்கிக் ... .*
கூற்றுவனாய்ச்சிலதாயர்க் கொல்லச்செய்வாய் ... ...*
இறக்கமற்றுமகப்பெற்று முன்னஞ்செய்த ... ...*
இருவினையையனுபவித்திட் டிறக்கச்செய்வாய் ... ...*
இறக்குமிடர்பிறக்குமிட ரிரண்டும்வேண்டேன் ... ...*
இனிக்கணாயேற்றச்சுதனே யெம்பிரானே ... ...*

(இ-ள்) பிறப்பதற்குமுன்னே வயிற்றிலேதானே கருவானதுஇறந்து அப்பிணத்தைப்பெற்றுச்சிலர்புரண்டழும்படி வைப்பாய் சிசுக்கள் குறுக்காகக்கிடந்து வயிற்றிலேயே பிணமாகப்பெருத்துயமனுருகிநின்றுசிலதாய்மார்களைக் கொல்லும்படிசெய்வாய் இப்படியிறவாமல் பிள்ளைகளைப்பெற்றுமுன்செய்த இருவினைப்பயன்களாகிய சுகதுக்கங்களை அனுபவித்து இறக்கும்படிசெய்வாய், மரணதுக்கத்தையும் சனனதுக்கத்தையும் வேண்டமாட்டேன் இனிப்பிறவிக்கடலினின்றும் கரையேற்றுஅச்சுதனே எம்பிரானே ()

ஆவணிரோகிணிநாளிலபரபக்கத் ... ...*
தட்டமியிற்சசியுதிக்கும்வேளைதன்னில் ... ...*
தேவர்தொழவடமதுரா புரியிற்றோன்றிச் ... ...*
சிசுவடிவாய்வசுதேவன் கைம்மீதேறி ... ...*
நீவரலுஞ்சயந்திநாள் வனத்துக்காளி ... ...*
நேயமுடன்கனிகடர வுகந்துகொண்டே ... ...*
யாவருக்குமரியபதங்காளிக்கீந்தாய் ... ...*
இறைவாநாராயணனே யெம்பிரானே ... ...*

(இ-ள்) ஆவணிமாதத்துஉரோகணித்திருநட்சத்திரங்கூடிய அபரபட்சத்து அஷ்டமிதிதியில் சந்திரோதயகாலத்தில் பிரமருத்திரேந்திராதிதேவர்கள் உனது சௌலப்பியகுணத்தைத் துதிசெய்து வணங்க வடமதுராபுரியில் திருவவதரித்து ஸ்ரீ வசுதேவருடைய கைகளின்மேல் சிசுரூபமாக எழுந்தருளி நீ வருதலும், அந்தஸ்ரீசயந்திநாளில், அவ்வழியிலுள்ள வனத்துக்காளிதேவியானவள் அதிபக்தியோடு நல்ல மதுரகனிகளை உனக்குச்சமர்ப்பிக்க நீயும் அக்கனிகளை உகந்தருளி எவர்களுக்கும் பெறுதலரியபதத்தை அந்தக்காளிக்குத்தந்தருளினாய் எம்பிரானே—எ-று. (சஅ)

அரிதிவசமாமேகா தசிநன்னாளை ... ...*
அருஷ்டித்தருக்குமாங்கதனைக்கண்டம் ... ...*
விரதமனுஷ்டித்தளவிலாதபேர்கள் ... ...*
மிக்ககதிசெருக்கையாற் சுரர்சோதிக்க ... ...*
உருவமிருமோகினியை விடுத்தமட்டில் ... ...*
உறுதியாத்தன்மகனை வெட்டுங்கூர்வாள் - - ...*
இருபுயத்திற்பூந்தொடையாவிழவைகுந்தத் - - - ...*
தினத்தோடும்வைத்தனையே யெம்பிரானே - - ...*

(இ-ள்) அரிதிவசமென்றுசொல்லும் ஏகாதசியாகிய நல்ல நாள் விரதத்தை அனுஷ்டித்துவந்த ருக்குமாங்கத மகாராசனுடையவிரதசீலத்தைக்கண்டு அளவில்லாத சாதுஜனங்கள்தாங்களும்அரிவாசரவிரதத்தை அநுஷ்டித்துஎல்லாவுலகங்களிலும் மேற்பட்டதாகிய ஸ்ரீவைகுந்தத்தைச் சேர்வதினாலே அந்தருக்குமாங்கத மகாரா

னுடைய விரதநிச்சயத்தைச் சோதிக்கும்படி தேவர்கள் அழகு மிகுந்த மோகினியை அவர்பக்கம்விடுக்க, அவள் அவனையடுத்து ப்புணர்ந்து சுகித்திருக்கும் நாள்களிலொருநாள் அந்தஅரசன்அவர் என்னையணையவேண்டுமென்றனள், மனங்கலங்கி அரசன் உனக்கு வேண்டிய பொன்னிலம் முதலியவற்றைக் கொடுக்கிறேனென்று சொல்லவும் இணங்காமல், உனதுபட்டத்துக்குரிய குமாரனைவெ ட்டுவாயாகில் நான்சம்மதிப்பேனென்றனள். அப்படியே பரம பகவானாகிய அரசர்தமதுமகனை நிற்கச்செய்து வாள்கொண்டுவீ சுதலும் அதுபூமாலைபோல அச்சிறுவன் கழுத்தில்விழச்செய்து நீபெரியதிருவடிகளின்மேலெழுந்தருளிச் சேவைசாதித்து ஸ்ரீரு க்குமாங்கதரோடு அங்குள்ள சாதுசனங்கள் யாவர்களையும்ஸ்ரீவை குந்தத்தையடையச் செய்தருளினாய் எம்பிரானே—எ-று (சங)

பத்தியுடன்துவாதசியன் றம்பரீடன் - - - - ...*
பாரணைசெய்வதுதவிர்ப்பான் தூருவாசன் - - ...*
குத்திரமாவந்தொளிக்கவுண்ணவஞ்சிக- - - - ...*
கோவிந்தாவென்றுனது தீர்த்தங்கொண்டான் - ...*
உத்தமமென்றெண்ணுமற் கிருத்தியேவ - - - ...*
உயர்முனியைத்துரந்தண்டத் துறவொட்டாமல் - ...*
இத்தலத்திலம்பரிட நீயேகாவென் - - - - ...*
திரந்துடையப்பண்ணினையே யெம்பிரானே - - ...*

(இ-ள்) அம்பரிஷனென்னும் ராஜரிஷியானவர் பக்தியோடு து வாதசியினன்றுபாரணைசெய்யும் விரதத்தைத்தவிர்க்கும்படி தூரு வாசமுனி அவர்பக்கல் வஞ்சனையாக வந்து இன்றுஉன்மனையில்பி ட்சைக்குவருவோமென்று சொல்லிப்போயொளித்துநிற்க,அந்த ராஜரிஷியானவர் பாரணைப்பொழுது போகிறதே மேலும் அதி தியுமில்லாமல் உண்ணலாகாதேயென்று கிலேசங்கொண்டுஉண்ண ப்பயந்து கோவிந்தாவென்று பாரணைப்பொழுது தவறாமல் உன் னுடைய தீர்த்தம் உட்கொண்டு அம்முனியின் வரவுக்காகஎதிர்பா ர்த்திருந்தனர், உடனே தூருவாசமுனிவந்து, தீர்த்தப்பிரசாதங் கொண்டது உத்தமமென்று எண்ணாமல் அதிகோபிஷ்டராய்த் த மது சடையிலொன்றைப்பறித்து எறிய அதில்நின்றும் ஒரு பூத ம்புறப்பட்டு அம்பரீஷிமுனிவர்பக்கல் செல்ல, அவர் கரங்களைகு வித்துக்கொண்டு உமக்குச்சரணாகதிசெய்துகொண்டுநிற்க, பக்தவ ற்சலனாகியநீ ஸ்ரீசுதரிசனப்பிரானையேவ, அவ்வாயுத ராஜனானவர் தமது சுவாலையாலே பூதத்தைச் சாம்பலாயெரித்துவிட்டுத் தூரு வாசமுனிமேல்சென்று துரத்தியருள, அம்முனியும் சத்தியலோ கம் சிவலோகம் இந்திரலோகமுதலிய இறையவர் பாதங்களிலும் சென்று தன்னைக்காப்பாரில்லாமையைக்கண்டு ஸ்ரீ வைகுந்தத்தில்

உன்னையும் சரணாகதஞ்செய்ய, அடியார்கள்பக்கல் செய்தகுற்றத்தை அடியார்களே க்ஷமிப்பார்கள் நம்மாலாகாதென்ன, விரைந்தோடிவந்து இப்பூமியில் அம்பரீஷமுனிவரோ நீரோ என்னைக்காக்கவேண்டுமென்று யாசித்து அடைக்கலம் புகச்செய்தாய் எம்பிரானே—எ-று. (௩௰)

பாதக்கண்டாகன்னனெனு மரக்கன் - - - ...*
பத்தியற்றுன்பெரும்புகழைக் கேளேனென்று - ...*
காதிரண்டிற்சத்தமிகு மணியைக்கட்டிக் - - - ...*
கணப்பொழுதுமோயாம லசைத்திருக்கத் - - ...*
தீதுநினைந்தானென்றும் மனத்தெண்ணமல் - - ...*
சிந்தையினன்மறவாமற் றியானித்தானென் - - ...*
றேமறவவனுக்குமவன்றம்பிக்கும் - - - - ...*
இரங்கிமுத்தியளித்தனையே யெம்பிரானே - - ...*

(இ-ள்) பாதகனாகியகண்டா கர்னனென்னும் இராட்சதன் முதற்கடவுளாகிய உன்னிடத்தில் பத்தியில்லாதவனாகிஉனதுபெருமையாகிய கீர்த்தியைக் கேளேனென்று தனதிரண்டுகாதிலும் மிகுந்த ஒலியையுண்டாக்காநின்ற மணிகளைக்... ...ப்பொழுது மோயாமல் - அசைத்துக்கொண்டு, சிவன்பால் பத்திசெய்து வருகிறநாளில் ஒருநாள், கைலாயத்துக்குப்போய் ஓ சிவமூர்த்தியே எனக்கு அழியாமுத்திதரவேண்டுமென்றுகேட்க, அந்தஉமேசர் மீளாக்கதி ஒன்றுதவிர மற்றெந்தப் பதவிகளையாவது ஐசுவரியங்களையாவது கொடுக்க என்னாலாகும் நித்திய வின்பத்ததாகிய மோட்சம் வேண்டுமேயானால், ஸ்ரீசர்வேசுரனே தரவேண்டுமென்று சொல்லுதலும், காதுகளிற்கட்டியிருந்த மணிகளை - எறிந்துவிட்டு உன்னைச்சரணாகதிசெய்ய, நீநம்முடையதிருநாமத்தையுங் கேளாதவனென்று குற்றமாகத் திருவுளத்தே நினையாமல் துவேஷத்தினாலாவது சிறிதுபொழுதும் மறவாமல் தியானித்தானென்று கருணைசுரந்து, முன்செய்த பிரமகத்தியாதி பாவங்களையும் ஒழித்து அந்தக்கண்டாகர்னனுக்கும் அவன்தம்பிமார்னம் பெற்ற அவன்றம்பிக்கும் ஸ்ரீவைகுந்தத்தை - அருள்செய்தாயே எம்பிரானே —எ-று. (௩௧)

கடிக்கினிரதித்தமாங்கனியைமீளக் - - - ...*
கடியாமற்கல்லையில்வைத்தினக்காமென்றே - - ...*
படைத்துவைத்தவேடுவெச்சி சபரிநெஞ்சில் - - - ...*
பரிவுகண்டுரகுராம வவதாரத்தில் ... - - ...*
சடக்கெனவேமுன்னின்ற சனியைத்தானே - - ...*
தக்கவிதிப்படிபடைத்ததாகவுட்கொண் - - ...*
டுடுக்கணறச்சாரூபஞ்பசரிக்கிந்தாங் - - - ...*
கிடேற்றிவிட்டனையே யெம்பிரானே - -- *

(இ-ள்) கடித்துருசி பார்க்கையில் மதுரமாயுள்ள மாங்கனியை மறுபடியுங்கடியாமல்உனக்குயோக்கியமாகுமென்றுஇலைப் பாத்திரத்தில் வைத்து நிவேதனஞ் செய்துவைத்த வேடுவச்சியாகிய சபரியினது உள்ளன்பைக்கண்டு, ஸ்ரீராமாவதாரத்தில் - அச்சபரிமுன்கடித்தெச்சிற்பட்ட கனிகளைவேதநூலின் விதிப்படி நிவேதனஞ்செய்த நிவேதனம்போல அதிவிரைவாக அமுதுசெய்து அவளுடைய பிறவித்துன்பங்கள் நீங்கும்படி மீளாக்கதியை அவளுக்கு அங்குதானேதந்து ஈடேற்றினாய் எம்பிரானே—எ று. (௫௨)

திண்ணமுடன்கோபாலர்மனையில்வெண்ணெய - - *
திருடினதைக்கண்டவர்க டுரத்தும்போது - - *
கண்ணில்லாத்ததிபாண்டன் மனையிற்புக்குக் - - *
கண்கொடுத்தோர்சாடியிற்போந் தொளித்துக்கொள்ளப் *
புண்ணிகராங்கண்வேண்டேன் கதிதாடல்லால் - - *
போகவிடேனெனச்சாடி மூடிக்கொள்ள - - *
எண்ணரியபரமபத மவனுக்கீந்தாய் - -- - *
இறைவாநாராயணனே யெம்பிரானே - - - *

(இ-ள்) [illegible]ால் ஆயர்களுடைய திருமாளிகைகளில்நீ வெண்ணெ[illegible]வும்செய்ததைக்கண்டு அவர்கள் உன்னைத்துரத்தும்போது, ததிபாண்டனுடைய திருமாளிகையிலே ஒரு பெருஞ்சாடியில் புகுந்து உன்னுடைய திவ்யமங்கள விக்கிரக ஸ்வரூப சௌந்தரியத்தைச் சேவிக்கும்படி அவனுக்கு நேத்திரங்களைக் கொடுத்து ஒளித்துக்கொள்ள, ஸ்ரீ கண்ணபிரானே இதுவரையில் உன்னைக்காணப் பெறுமையால் புண்ணுக்கொப்பாகிய இந்தமாமிச கட்கள் எனக்குவேண்டியதில்லை, எனக்கு மீளாக்கதியைத் தர அல்லாவிடில் உன்னை இந்தச்சாடியினின்றும் புறத்தேபோக விடேனென்று சொல்லிச் சாடியின்வாயை மூடிக்கொள்ள, சர்வ பரிபூரணனாகிய நீ வெளியேவரச் சக்தியில்லாதாப்போலஅதிலே அடங்கி நின்று அத்ததிபாண்டனுக்கும் - அத்தயிர்த்தாழிக்கும் சிந்தைக்கும் மொழிக்கும் எட்டப்படாத பரமபதத்தை அங்கேதந்தருளினாய் எம்பிரானே—எ-று, (௫௩)

மிடித்தில்லாள்பசித்திருக்கக் குசேலனென்னும் - - *
விப்பிரன்முன்னஞ்சியுன்றன் பதிக்குண்மேவ - - *
அடுத்தசினேகன்வந்தானென் றேசிந்தித் - - - - *
தறிந்தழைத்தேன்கொடுவந்தாய்தருதியென்ன - - *
மடிக்கணுறுபொரியவலா மதனைநோக்கி - - - - *
மகிழ்ந்துவிரலாலள்ளி யிருகாலுட்கொண் - - *
டிடுக்கணறச்சம்பத்து முத்திவீடும் - - - *
இரங்கியவற்றளித்தனையே யெம்பிரானே - - *

(இ-ள்) பெண்சாதியானவள் அதிகதாரித்திரியத்தினால் உணவில்லாமல் நொந்து வெறுத்துக்கொண்டதன்மேல், அதற்குப்பயந்து குசேலனென்னும் பிராமணன் நீஎழுந்தருளியிருக்கும் துவாரகாநகர்த்துக்கு வரவே இவன் நெருங்கிய சிநேகன் நம்மிடமே வந்தானென்று எண்ணி அர்க்கபாத்திய முதலிய உபசாரங்களைச் செய்து அழைத்துவந்து ஓராசனத்தில் இருக்கச்செய்து, சர்வக்கியனாகிய நீ அவ்வேதியனைக் கடாட்சித்து என்ன கொண்டுவந்தாய் எனக்குத்தாவென்றுகேட்டு அவன் மடியிலிருந்த பொரி யவலைப் பார்த்துக்களித்து விரல்களா லள்ளி இரண்டுமுறை அமுது செய்து இம்மையில் அவனது தரித்திரவியாதியறச் சம்பத்தையும்மறுமையில்சனனவியாதியறப் பரமபதத்தையும்திருவுள மிரங்கி அக்குசேலனுக்குத்தந்தருளினாய் எம்பிரானே—எ-று (நச)

நந்தகோபன்வாழுந் திருவாய்ப்பாடி ... ...*
நகர்மீதுபடையெடுத்து மண்டலீகர் ... ...*
வந்திடினப்பகைவரொல்லா மடிவரொன்றே ... ...*
வரங்கொடுத்துப்பின்னகரங் கற்பித்தாயால் ... ...*
அந்தவரத்தாற்கஞ்சன் வரவேயஞ்சி ... ...*
அசுரர்களிற்பலரைவிடுத் துன்னைக்கொல்லற் ... ...*
கெந்தவகைதொடுத்தாலுஞ் சயித்தநேக ... ...*
விராக்கதரைவதைத்தனையே யெம்பிரானே ... ...*

(இ-ள்) ஸ்ரீநந்தகோபன் வாழ்கின்ற திருவாய்ப்பாடி நகரத்தின்மேல் அசுராம்சராசர்கள் படையெடுத்துவாந்தால் இனிமடிவார்களென்று வரத்தைத் தயைசெய்து பிறகுஒருதிருவாய்ப்பாடியை நூதனமாகக் கற்பித்துவைத்தாய், அந்தவரத்தினாலே கஞ்சனுனவன் திருவாய்ப்பாடிக்குவரப் பயந்து தன்துன்மதியினால் பலஅசுரர்களை அனுப்பி உன்னைக்கொல்லுதற்கு எந்தவகை செய்தபோதினும் வந்தஅசுரர்களையும் இராக்கதர்களையும் வதைத்தாய் எம்பிரானே—எ-று. (நரு)

உக்கிரசேனன் றனைப்போல் வடிவுகொண்டே ... .*
உத்தமியையோரசுரன் வந்துகூட ... ... *
அக்கிரமக்கஞ்சனுதித்தசுரனுகி ... ... *
அசுரனாக்கூட்டிக்கொண்டே பிதாவைத்தள்ளித் ... ...*
திக்கெல்லாமவனாள மதுரைக்கேகித் ... ...*
திரளுடனேகஞ்சனைக்கொன்றவன்பிதாவை ... ...*
இக்குவலயம்புரக்கப் பண்ணுவித்தாய் ... ...*
இறைவாநாராயணனே யெம்பிரானே ... ...*

(இ-ள்) உகிகிரசேன மகாராசனைப்போல உருவங்கொண்டுஒரசுரனுனவன் உத்தமியாகிய அவர் பெண்சாதியைப் புணர்ந்து சுக

த்தையனுபவித்துப்போக, அதுகாரணமாக அக்கிரமமுள்ள கஞ்சன்பிறந்து அசுரச்செய்கையை யுடையவனாகி அசுரர்களைச் சிநேகங்கொண்டு சிங்காதனத்தினின்றும் பிதாவைநீக்கித் தளையிட்டுச்சிறைப்படுத்தி எல்லாத்தேயங்களையும் ஆண்டு கொண்டிருக்கும் முறையில்லாமையைத் தர்மஸ்தாபனார்த்தமாக அவதரித்தநீயறிந்து வடமதுராபுரிக்குப்போய்க் கஞ்சனையும் அவனுக்குச் சகாயபூதர்களாய் வந்தவர்களையும் கொலைபுரிந்து அவன் பிதாவாகிய உக்கிரசேனமகாராசனுக்குப் பட்டங்கட்டி இந்தப் பூமண்டலத்தையாளும்படிசெய்வித்தாய் எம்பிரானே—எ-று. (௫௬)

நின்னினைவானித்திரையைத் துர்க்கையாக்கி ... .*
நிகரினந்தகோபனுக்குத் தநயையாக்கி ... ...*
அந்நிசியினீயுதித்து மயங்கப்பண்ணி ... ...*
அருளுடனேவசுதேவன்கைம்மீதேறி ... ...*
நன்னெறிசேர்திருவாயர்பாடிபுக்கு ... ... *
நந்தனுக்குமகவான துர்க்கைப்பெண்ணை ... ...*
இன்னிசையிற்றேவகியார் பெற்றதென்றே ... .*
இனிதுரைக்கப்பண்ணினையே யெம்பிரானே ... ...*

(இ-ள்) உனதுசங்கற்பத்தினால் நித்திராதேவியைத் துர்க்கையாகச்சிருஷ்டித்து ஒப்பில்லாத ஸ்ரீ நந்தகோபருக்குப் புத்திரியாகப்பிறக்கச்செய்து அந்தராத்திரியில் நீ அவதரித்து எல்லாச்சேதனர்களையும் மயங்கச்செய்து மிகுந்தகருணையோடு ஸ்ரீவசுதேவருடையதிருக்கரங்களின்மேலெழுந்தருளி நல்லொழுக்கம் அமைந்ததிருவாய்ப்பாடியிற்புகுந்து, ஸ்ரீ நந்தகோபருக்குப் புத்திரியாகப்பிறந்திருக்கும் துர்க்காதேவியை இனிமையான கீர்த்தியையுடையஸ்ரீதேவகிபிராட்டியார் பெற்றதென்று வடமதுரையிலுள்ளோர்கள் நன்றாய்ச்சொல்லும்படி செய்வித்தாய் எம்பிரானே—எ-று.)

கடியகாத்தபாசுரனுஞ்சத்தமாகக் ... ...*
கத்துவதுகேட்டளவிற்கஞ்சனஞ்சிப் ... ...*
படையெடுத்துகவசந்தொட் டநேகரோடும் ... ...*
பதலமாய்வந்திடத்தே வகியார்கண்டே ... ...*
திடமுடையானன்றுபெண்ணே யென்றபோது ... ...*
சீக்கிரமாகக்கல்லிலடித்திடவேயோங்க ... ...*
இடியிடித்தாப்போன்மார்பி லுதைத்தேதுர்க்கை ... ...*
ஏகநினைத்தருளினையே யெம்பிரானே ... ...*

(இ-ள்) குரூரமனமுள்ள கர்த்தபஅசுரனும் பேரோசையாகக்கத்துவதைக் கேட்டமாத்திரத்தில் கஞ்சனென்பவன் அதிபயங்கொண்டு கையில் வாளைப்பிடித்துக் கவசத்தைப்பூட்டி அநேக அசுரரோடு சாக்கிரதையாகக் காராகிருகத் தலைவாசலண்டை ஸ்ரீதேவகிபி

ராட்டியார் மனோதைரியமுள்ள ஆண்பிள்ளையல்ல பிறந்தது பெண்பிள்ளையேயென்று சொல்லும்போதும் சிறிதும் இரக்கமில்லாமல் சீக்கிரமாகவாங்கிக் கல்லின்மேல் அறையும்படி இரண்டுகாலையும்பிடித்துக்கொண்டு ஓங்கியபோது, அவன்கையிலுள்ள துர்க்காதேவியானவள் இடியிடித்தாப்போல அந்தக்கொடியோனுடைய மார்பில் உதைத்துவிட்டு அந்தரமார்க்கத்தில் நின்று, உன்னைக்கொல்லவந்து அவதரித்த பரம்பொருளானவன் ஆயர்பாடியில் வளர்கின்றானென்று தெரிவித்துப்போகத் திருவுளங்கொண்டாய்எம்பிரானே—எ-று. (௫௮)

முலையில்விடமருத்தியுனைக்கொல்லவெண்ணி ... ...*
மோகினியாய்வந்த பூதகியென்பாளோர் ... ... *
மலையெனவீழ்ந்திடமுலையினஞ்சும்பாலும் ... .*
வல்லுயிருந்திருப்பவள வாயாலுண்டே ... ... *
கொலைசெய்யவந்தவுடன் பகையெண்ணாமல் ... ...*
கொடுத்தனைசாயுச்சிய வீடென்னிற்போற்றும் ... ...*
இலகியமெய்த்தொண்டருக்குக்கதிதானீவ ... ...*
தெளிதுனக்குச்சிரறியே யெம்பிரானே ... ...*

(இ-ள்) கஞ்சனுடைய கட்டளையாலே தனதிரண்டுமுலைகளிலும் தடவிய விஷத்தைஉண்பித்து உன்னைக் கொல்லநினைத்து, யாவரும் விரும்பத்தக்க உருவமுடையவளாகிஸ்ரீயசோதாபிராட்டியாருடைய திருமாளிகையில்வந்து உனக்குமுலைகொடுக்க, உலகமுண்டதிருப்பவளவாயால் தடவிவந்தவிஷத்தையும் முலைப்பாலையும் அவளுடையவலிய உயிரையும் ஒருசேரவுறிஞ்சியுண்டு, உன்னைக்கொலைசெய்யக் கருதிவந்த அந்தப்பூதகியினுடைய பகைமையைப்பாராட்டாமல்ஸ்ரீவைகுந்தத்தைக்கொடுத்தாயென்றால் உனதுகலியாண குணங்களை அனுபவிக்கும் சுஞ்ஞானமுடைய நிஜபத்தர்களுக்குப் பரமபதத்தைக்கொடுப்பது உனக்கு எளிதாயிருக்கும்அநந்தகலியாணகுணநிலயமாகிய ஸ்ரீஹரியேஎம்பிரானே—எ-று ()

குறைச்சலறக்கனிக்கரிசி யள்ளிமுடிக் ... ...*
குதித்துவரமோதிரத்தின்வழியாற்சிந்தி ... ...*
முறத்திலிடவெறுங்கையைத் திகைத்துநிற்க ... ...*
முகம்பார்த்துதிங்கனிகொளப்பாவென்ன ... ...*
நிறத்தநவமணிகள்கனிவிற்பாள்கூடை ... ...*
நிறையவவளஞ்சிறந்த கோபனென்னும் ... ...*
இறைக்குறைக்கவுனதுசொம்மே கொடுபோவம்மா ... ...*
என்றுரைக்கப்பண்ணினையே யெம்பிரானே ... ...*

(இ-ள்) கனிவாங்கும்பொருட்டுத் திருக்கரநிரம்ப அரிசியைஅள்ளிமுடிக்கொண்டு குருகலத்தோடுகுதித்து ஓடிவரவே விரலிலணிந்தமோதிரத்தின் வழியாலே அந்தஅரிசிஎல்லாம்சிந்திப்போக, அ

து தெரியாதவனைப்போல மூடிய திருக்கையை அங்காடிக்காரியி
னுடைய முச்சில்விரித்து வெறுங்கையையுடையாயாகித் திகைத்
துநிற்க, பழம்விற்பவள் உனது திருமுத்தைப்பார்த்து என்னப்ப
னே மாதுரியகனிகளை உனக்கு வேண்டியமட்டும் வாரிக்கொள்
ளென்று சொல்ல அவளுடைய பிரீதியாகிய வார்த்தையின்படி உ
னது ஸ்ரீஹஸ்தத்தால் வாரிக்கொள்ளுதலும், கனிவிற்பவளுடைய
கூடையில்நிரம்பியுள்ள கனிகள்யாவும் நவரத்தினங்களாகிவிடவே
அவள்பயந்து திருவாய்ப்பாடி அரசராகிய ஸ்ரீ நந்தகோபருக்கு
இச்செய்தியைத்தெரிவிக்க, அவர் இந்தரத்தினங்கள் உனதுசொத்
தே, அம்மா நீயே கொண்டுபோவென்று சொல்லும்படி திருவி
ளையாட்டுச்செய்தாயேஎம்பிரானே—எ-று. (௬௰)

மன்னனைப்பாடாமத் போகின்றநீயும் ... ...*
வாவரியேவென்றழைத்தபுலவன்பின்னே ... ...*
பன்னகப்பாம்பணைசுருட்டிக் கொண்டேயேகிப் ... ...*
படுத்துக்கொள்ளென்றமட்டிற் படுத்துக்கொண்டாய் ...*
சொன்னவண்ணஞ்செய்தபெரு மாளாவென்று ... ...*
சுரர்துதிக்கக்கச்சியினி லிருக்கின்றாயால் ... ...*
என்னுயிருமென்னுணர்வு மெல்லாநீயே ... ...*
இறைவாநாராயணனே யெம்பிரானே ... .*

(இ-ள்) காஞ்சிமண்டலத்தரசனைப் பாடாமல் என்னைச்சாந்திரு
க்குங் கணிகண்ணன் போகின்றான் நானும் அவனோடுபோகின்றே
ன் ஸ்ரீஹரியே நீயும் எம்மோடுவாவென்ற பொருளமைந்த, கணி
கண்ணன்போகின்றான் காமரூபங்கச்சி- மணிவண்ணா நீ யிருத்தல்
வேண்டா- துணிவொன்றிச் செந்நாப்புலவ னிதோசெல்கின்றே
னீயுநின்-பைந்நாகப்பாய்சுருட்டிக்கொள், என்னும்பாடலைச்சொ
ல்லித் திருமழிசைப்பிரான் அழைக்கஅவர்பின்னே நீ சேஷசயன
த்தைச் சுருட்டிக்கொண்டு சென்று அவர்ஓரிடத்தைக் குறித்துக்
காட்டிச் சயனித்துக்கொள்ளென்று சொன்னமட்டிலே சயனித்
துக்கொண்டாய், இதுகாரணத்தாலே. வடமொழியில் யதோத்கா
ரியென்றும் தென்மொழியில் சொன்னவண்ணஞ் செய்த பெரு
மாளென்றும், தேவர்கள்யாவரும் துதிக்கும்படி திருக்காஞ்சிபுர
த்தி லெழுந்தருளியிருக்கின்றாய் என்னுடையஉயிரும், என்னுடை
ஞானமும், என்னுடையசெய்கையுமாகிய இவையெல்லாம்நீயே
யாம், எல்லாப்பொருள்களுக்குந்தலைவனேஎம்பிரானே—எ று()

கருதலர்க்குத் தோலாதவரத்தால்வந்த ... ... *
காலயவநன்போரிற் பின்னிட்டோடி ... ...*
வறைமுழையிற்றனையுறக்க மெழுப்பும்பேர்கள் ... ...*
மடிவரொன்றேமுசுகுந்தன் வரத்தாற்றுஞ்சும் ... ...*

பரிமளிக்குமிடத்தொளிக்கத் துயிலுவானைப் ... - *
　　பதறிநீயென்றுதைக்க முசுகுந்தக்கோன் - - *
இருகண்விழித்திடக்காலயவநனீறாய் - - - *
　　இறக்கவகையிட்டனையே யெம்பிரானே - - ...*

(இ-ள்) சத்துருக்களுக்குத் தோற்காதவரம் பெற்றுவந்த காலயவநனுக்குப் போரில்தோற்றவனைப்போல நீகபடமாகநடித்து ஓட்டங்காட்டி, மலையினது குகையில் தன்னைத்தூக்க மெழுப்புவோர்கள் சாவார்களென்று தேவர்கள் பால்வரம்பெற்று முசுகுந்தசக்கரவர்த்தி நித்திரிக்கின்ற தேன்பரிமளிக்கு இடத்திற் போயொளித்துக்கொள்ளவே, உன்னைப் பின்தொடர்ந்துவந்த காலயவநன் அந்தமுசுகுந்தசக்கிரவர்த்தியை நீயென்றுநினைத்து ஆதுரப்பட்டுஉதைத்தபோது அவர்இருவிழிகளையும் விழித்துப்பார்க்க எதிரோநின்ற அவன்சாம்பலாகி இறக்கு முறைமையைச் செய்தாய் எம்பிரானே—எ-று. (௯௨)

சயிந்தவனையிப்பகலே கொல்வேன்றப்பின் - - *
　　தழலிறப்பேனெனவிஜயன் சபதங்கூறப் - - *
பயந்தவன்பேழைக்குளுறச் சக்கரத்தால் - - - *
　　பகலைமறைத்திரவாக்கித் தருமன்சேனை - - *
மயங்கியிடச்சயிந்தவனு மொளிப்புநீங்கி - - *
　　வரவிரவைப்பகலாக்கி விசயாவெய்யென் - - *
றியம்பியந்தச்சயிந்தவனை வதைத்துப்பார்த்தன் - - *
　　இறவாமற்காத்தனையே யெம்பிரானே - - *

(இ-ள்) அபிமன்னுவைக்கொலைசெய்தசயிந்தவனை இன்றுபொழுதுபோகுமுன்னே கொல்வேன் இச்சொல் தப்புமேயானால்தீயில்வீழ்ந்திறப்பேனென்று அருச்சுனன் சபதஞ்செய்ததை அச்சயிந்தவன் கேள்வியுற்றுப்பயந்து ஒருபெரும்பேழையில் ஒளித்துக்கொள்ளவே, முற்றுமுணரவல்ல நீ கோடிசூரிய பிரகாசமுள்ள சுதரிசனமூர்த்திக்கு ஒளிமழுங்கச்செய்து, அம்மூர்த்தியினால் சூரியனைமறைத்து இராவையுண்டாக்க இனி அருச்சுனன் தீயில்விழுந்து இறப்பான் அதனால் மற்ற பாண்டவர்களும் இறப்பார்களென்று தருமநந்தனருடைய சேனை மயங்கிக்கொண்டிருக்கையில் அருச்சுனன் தீப் பாய்வதைப் பார்க்கும்படி ஒளிப்பிடத்தை விட்டுச் சயிந்தவனும் மற்ற துரியோதனாதியர்களும் வந்துநிற்க உடனேசக்கரப்பிரானையழைப்பித்துஇராவைப் பகலாகச்செய்து அருச்சுனனே சயிந்தவன்மேல் பாணம் பிரயோகஞ் செய்யென்றுசொல்லிச் சயிந்தவனைக்கொல்வித்து, அருச்சுன னிறவாமற் காத்தாய் எம்பிரானே—எ-று. (௯௩)

மைந்தனெனுஞ்செயத்திரதன் சிரத்தையிந்த - - ...*
　　மண்ணில்விழச்செய்தவர்கண்மடிகவென்றே ... ...*

சிந்துபதிதவசுபண்ணி யிருக்கப்பார்த்தன் ... - ...*
செயத்திரதன்றலையறவேயெய்தபாணம் - - ...*
சந்திபண்ணுங்கையிற் சிரத்தைக்கொடுபோய்வைக்கத் ...*
தரையிலிட்டுசிந்துபதி தானேசாக - - ...*
இந்தவகைதொடுப்பித்து மன்றுபார்த்தன் - - ...*
இறவாமற்காத்தனையே யெம்பிரானே - - ...*

(இ-ள்) புத்திரனாகிய சயிந்தவனது சிரத்தை இந்தப்பூமியில் விழச்செய்தவர்கள் சாகக்கடவார்களென்று சிந்துபதிதவஞ்செய்துக்கொண்டிருக்க, அருச்சுனன் சயத்திரதனுடையதலையற்றுப்போக எய்தபாணமானது தலையைச்சிந்துபதி சந்தியாவந்தனஞ்செய்ய விரித்தகைகளின்மேற் கொண்டுபோய்வைக்க அதை அவன் அறியாமல் பூமியில்விழவிட்டு, தானேஇறந்தனன் இந்தவகைஅம்பைத்தொடுக்கச்செய்தும் அந்நாளில் அருச்சுனன் இறக்காமற்காத்தாய் எம்பிரானே—எ-று (சுசு)

கன்னனெய்யுங்கடுநாகக் கணையாற்பார்த்தன் - - ...*
கழுத்தறுந்துமாயாமற் றேரைத்தாழ்த்த - - ...*
மின்னுமணிமுடியிலக்காச் சென்றுசர்ப்பம் - - ...*
மிகவெட்கித்தனைமீண்டுந் தொடுக்கச்சொல்ல - ...*
உன்னருளான் முன்னளிற்குந்திதேவிக் - - ...*
குரைத்தசொற்காத்தொடுத்தகணை யினித்தொடேன்போ ...*
என்னவந்தப்பாம்புதலை யடித்துக்கொண்டே - - ...*
இரக்கவகையிட்டனையே யெம்பிரானே - - ...*

(இ-ள்) கர்னனனவன் எய்த நாகக்கணையாலே அருச்சுனன்கழுத்துத்துணிந் திறக்காமல் நீ தேரைப்பூமியில் தாழச்செய்யவே அந்தநாகமானது பிரகாசியாநின்றரத்தினகிரீடம்குறியாகச்சென்று நாணத்தோடு மீண்டுவந்து தன்னைமறுபடியும் தொடுத்து எய்யும்படி கர்னனைக்கேட்டுக்கொள்ள, உன்னுடைய அருளுப் பாட்டாலேசென்ற குந்திதேவிக்குக் கொடுத்த வாக்கைக் கருதிக்கொண்டு தொடுத்தகணையை இனித் தொடுக்கமாட்டேன் போவென்றுசொல்ல அந்தப்பாம்புதலையைத் தேர்ச்சக்கரத்தில் மோதிக்கொண்டு இறக்கும்வகையைச் செய்துவைத்தாய் எம்பிரானே—எ-று ()

தினம்பன்னீராயிரங் கோதானம்பண்ணும் - - ...*
திறலரசன்முன்னைநா ளீந்தவோராத் - - ...*
தனதுகிதாரத்திற்சேரத்தேரான் - - - - ...*
தானுமொருவர்க்களித்த சாபத்தாலே - - ...*
மனநடுங்கிகிணற்றினிற்பச்சோந்தியாகி - . ...*
மயங்கியுயநீயெடுக்கச் சாபநீங்கி - - ...*
இன்னிறஞ்யுலகமெல்லாம் புரக்கவைத்தாய் - - ...*
இறைவாநாராயணனே யெம்பிரானே - - ...*

(இ-ள்) தினமும்பன்னீராயிரம்பசுக்களைத்தானஞ்செய்துகொ
ண்டுவந்த வெற்றியையுடைய நிருகுமகாராஜன் முன்னைநாள்தான
ஞ்செய்த ஒருபசு தானம்வாங்கின பிராமணனிடத்தினின்றுதப்பி
ஓடிவந்து தன்னுடையகொட்டாரத்திலுள்ள பசுக்களோடு சேர்ந்
துகொண்டது. அதை அந்த நிருகுமகாராசன் அறியாமல் தானும்
வேறொருபிராமணனுக்குத் தானஞ்செய்ய, அதைஅவன் ஓட்டிக்
கொண்டுபோகையில், முன் தானம்வாங்கின பிராமணன்கண்டு இ
துஎன்னுடைய பசுவென்று அவனோடு போரிட்டு அரசனிடத்து
வந்து சொல்லிக்கொள்ள, அரசன் வேறுபசு கொடுக்கிறேனென்
ன அதற்குச்சம்மதியாமல் கொடுத்த சாபத்தாலே அரசன் உள்ள
ங்கலங்கி ஒருபெரும்பாழ்ங்கிணற்றில் தன்னுருவமாறிப் பச்சைஓ
ணானாகி நெடுநாளாகக்கிடக்க? அதுகண்ட யாதவப்புத்திரர்கள் உ
னதுசந்நிதியில் தெரிவித்தமாத்திரத்தில், நீ சென்றுஎடுக்க, அவன்
முன்னையசாபம் நீங்கிச்சூரியனைப்போலத் தேககாந்தியினையுடை
யவனாகி உலகமுழுமையும் ஆண்டுசுவர்க்கத்தையடையச் செய்தா
ய் எம்பிரானே—எ-று. (௬௬)

வரத்திலரனுங்கணமும் வாயல்காக்க - - - ...*
மதத்தவாணாசுரன்மே னியெதிர்க்க - - - ...*
உருத்திரனக்கினிவிட நீகுளிரையேவ - - - ...*
உறுப்பமவிந்தான் முற்றுமோய்ந்தகாலை - - ...*
கரத்திரளிற்படையெடுத்தே யெதிர்த்தவாணன் - - ...*
கைகளோராயிரத்தி லிரண்டுகையை - - ...*
இருத்திமற்றைக்கரங்களெல்லாந் துணித்துக்காத்தாய் ...*
இலகுசக்கராயுதனே யெம்பிரானே - - ...*

(இ-ள்) தான்கொடுத்தவரத்தினாலே சிவனும், கணபதி, சுப்பிரம
ணியன், வீரபத்திரன், காளி, முதலியபிரமத கணங்களும், கோபு
ரத்துவாரங்காத்துக்கொண்டிருப்பதினாலே அதிக உன்மத்தனாகிச்
சாதுஜனங்களை நலிந்துகொண்டிருந்த வாணாசுரன்மேல், ஸ்ரீகண்
ணனவதாரத்தில் நீ படையெடுத்துவந்து பாணப்பிரயோகஞ்செ
ய்யச்சகிக்கச் சக்தியில்லாதவர்களாய் ஐங்கரன்முதலிய பிரமத க
ணத்தார் முறிபட்டோட அதற்குமேல் சங்கரன் சைவசுரத்தைப்
பிரயோகிக்க அதுகண்டு நீ உருத்திரனுக்குப் பிராணாபகாரஞ்செ
ய்யாதபடி நியமித்து வைஷ்ணவசுரத்தைப் பிரயோகிக்கவே சிவ
ன் மூர்ச்சித்துவிழச் சைவசுரமானது தோற்று நீயேபரம்பொரு
ளென அறிந்து துதித்துமறைந்தது, கடைசியில் தன்னுடையஆயி
ரங்கைகளிலும் ஆயுதங்களைத்தாங்கி வந்தெதிர்த்த வாணனுடைய
கைகளைச் சக்கரப்பிரானால் அறுத்துத்தள்ளுங்கையில் உமேசன்வந்
து அடியேன்பொருட்டு இந்தவாணன்செய்த அபசாரத்தை மன்
னித்தருள வேண்டுமென்று உன்னைவேண்டித், துதிக்க ஆயிரத்தில்

இரண்டொழிய மற்றகரங்களையெல்லாம் துண்டித்துக் காத்தாய் பிரகாசியாநின்றசுதரிசனப்பிரானையுடையானேஎம்பிரானே-எ-று

பொன்னுலகைச்செயித்த நரகாசுரன்முன் - - ...*
பூதலத்திற்கொடுவந்து வைத்துதூய - - ...*
கன்னியர்கள்பதினாறுயிரம்பேர்தம்மைக் - - ...*
கலியாணமுகூர்த்தமொன்றிற் பண்ணிக்கொண்டே ...*
நன்னெறிசேரவரவர்க்கோர்புருடனாகி - - ...*
நாடோறுமவரவர்க ளுடனேகூடி - - ...*
என்னகத்திலேயிருப்பாரெங்கும்பேர்கார் - - ...*
எண்ணவுற்றாய்மாயவனே யெம்பிரானே - -...*

(இ ள்)சுவர்க்கலோக முழுமையும் வெற்றிகொண்ட நரகாசுரன் பூமியிலுள்ள உத்தமக்ஷத்திரியர்களையும் வென்று தான் சிறைகொண்டுவந்துவைத்த பரிசுத்த ஹிருதய சுபாங்கனைகளாகிய பதினாறுயிரங் கன்னியர்களையும் ஓரேசுபமுகூர்த்தத்தில் பதினாறுயிர மணவாளக்கோலங்கொண்டு திருமணம்புணர்ந்து, பதிவிரதாதருமத்தில் சிறிதும் பிசகாதநல்லொழுக்கம் வாய்ந்தஅந்தவநிதாரத்தினங்களில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருபிரியநாயகனாகித் தினந்தோறும் ஒருவனையும்விட்டுப்பிரியாமல், என்வீட்டிலேயிருக்கிறார் என்வீட்டிலேயிருக்கிறார் என்னைப் பிரிவதேயில்லையென்று அவர்களொவ்வொருவரும் எண்ணும்படி திருவிளையாட்டுச்செய்தாய் அதிமானுஷியசேஷ்டிதத்தையுடையானேஎம்பிரானே—எ-று. ()

உருக்குமணிக்கொருபூநீயளித்ததாலே - - ...*
உன்னுடன்சத்தியபாமை யூடல்கொள்ளத் - ...*
தருக்கொடுவந்துன்க்களிப்பே னென்றுசொல்லி - ...*
சயக்கருடன்மீதேறி வானுக்கேகி - - ...*
மருக்கமழும்பாரிசாதங்கொள்போது - - - ...*
மறித்தசுரராஜன் விழச்சங்கமூதி - - ...*
இரக்கமொடுதருக்கொணர்ந்து மனைவிக்கீந்தாய் - -...*
இறைவாநாராயணனே யெம்பிரானே - - ...*

(இ ள்) ஸ்ரீ ருக்குமணிபிராட்டியாருக்கு ஒரு திவ்விய பாரிசாதமலரைக்கொடுத்தமையாலே உன்னோடு ஸ்ரீசத்தியபாமைபிராட்டியார் ஊடிக்கொள்ள, அதுகண்டு பாரிசாதவிருட்சத்தையே உனக்குக்கொண்டுவந்து கொடுப்பேனென்று ஸ்ரீசத்தியபாமைபிராட்டியாருக்குத் திருவாய்மலர்ந்தருளி, நகங்களினாலும் மூக்கினாலும் சிறைகளினாலும் வேதவிரோத அசுரஜனங்களையும், ராட்சஜனங்களையும் சின்னபின்னஞ்செய்யும் வெற்றியுள்ள கருடன்மேல் ஆரோகணித்தருளிச் சுவர்க்க லோகத்துக்குப் போய்ப் பரிமளத்தைவீசுகின்ற பாரிசாதவிருட்சமொன்றுநீ கொண்டுவரும்போது

உன்னையறியாதவர்களாய் வந்தெதிர்த்த தேவர்களும் இந்திரனும் மூர்ச்சித்து விழும்படி கருணையோடு பாஞ்சசன்னியத்தைத் திருப்பவளத்தில் வைத் தூதி அர்ந்தத்தருவைக்கொண்டுவந்து ஸ்ரீ சத்தியபாமை பிராட்டியாருடைய சிங்காரவநத்தில்நாட்டினாய் யாவர்களுக்கும் நியாமகனே எம்பிரானே—எ-று. (சுசு)

பயிர்க்கிறைத்துக்காலில்வருங் கிணற்றுநீரைப் ... ...*
பாகவதன்கைச்செம்பான் முகந்துகொண்டு ... ...*
வெயில்சுடுகால்குளிரவேநனைத்துக்கொள்ள ... ...*
வேளாளனிறக்கயம தூதர்பாசக் ... ...*
கயிற்றினிற்கட்டொட்டாமன் முகுந்தாவுன்றன் ... ...*
கணநாதராதரவா யழைத்துவந்தே ... ...*
இயற்சுருதிமுழங்கியசீர் வைகுந்தத்தில் ... ...*
இனத்தொடுவைத்திடச்செய்தா யெம்பிரானே ... ...*

(இ-ள் ஒருவேளாளனால் தன்பயிருக்காக இறைக்கப்பட்டு வாய்க்காலின்வழியே வருகின்ற கிணற்றுநீரை ஒரு பாகவதர், தமது கையிலுள்ள செம்பால் மொண்டுக்கொண்டு, வெயில்சுடுகின்ற கால்களைக்குளிர நனைத்துக்கொண்டுசெல்ல, அந்த நீரிறைத்த வேளாளன் விதிப்படி ஆயுள்முடிந்து இறக்க, யமதூதர்கள் அவனுடைய ஆன்மாவைப் பாசக்கயிற்றால் கட்டவொட்டாமல்முகுந்தனே உன்கணநாதர்கள் அன்போடழைத்துக் கொண்டுபோய் அபௌருஷேயமாகிய தென்மொழி வேதமும் வடமொழிவேதமுங்கோஷிக்கின்ற சிறந்த ஸ்ரீவைகுந்தத்தில் நித்தமுத்தர்களோடு வைக்கும்படிச்செய்தாய் எம்பிரானே—எ-று. (எஎ)

பாதகவெஞ்சினமுடைய கிராதன்முன்முன் ... ...*
பதியிழந்தவிதவையைப்பெண் டாக்கிக்கொண்டே... ...*
பாதையினிற்குடில்கட்டி யிருக்கவோர்நாள் ... ...*
பாகவதர்க்கமுதளிக்கும் பொருட்டாலுச்சிப் ... ...*
போதொரடியவனவன்பந்திலிலேநின்று ... ... *
போகவடியார்க்குநிழ லீந்தானென்றே ... ...*
ஏதமறவிவனேடுஞ் சாலோகத்தில் ... ...*
ஏற்றமுறவைத்தனையே யெம்பிரானே ... ...*

(இ-ள்) பாதகத்தைவிளைக்காநின்ற வெவ்விய கோபமுள்ள வேடன்போலக் கொடுந்தொழிலைச்செய்யும் ஒருபாவியானவன், நாயகனையிழந்த ஒரு விதவையைத்தனக்குப்பெண்டாக வைத்துக்கொண்டு, வழியிலேஒருகுடிசைவேய்ந்து அதில்வாசஞ்செய்ய, ததியாராதனைசெய்வதற்காக ஒருமெய்யடியார் நெடுந்தூரஞ்சென்று உச்சிப்போதில், அந்தப்பாவியினுடைய குடிசையி னிழலிலேநின்று சற்றுஇளைப்பாறிப்போக, மகாபாதகனாயினபோதிலும் என்ன

டியானுக்கு ஒதுங்க நிழல்கொடுத்தானென்று அவனுடைய பாப ங்களைஒழித்து இந்தமெய்யடியாரோடு அவனையும் ஸ்ரீ வைகுந்தத் தில் பெருமையாகவைத்தாய் எம்பிரானே—எ-று. (எக)

அடவிதனிலரிதாச னெறியேசெல்ல ... ...*
அறியாமற்பறிக்கவந்தோர் கள்ளன்கிட்டப் ... ...*
படைவிற்கொண்டோர்வேடன் கூடியத்தால் - ... ...*
பறியாக்கள்ளன்றலையவூர்போய்ச்சேர்ந்தே ... ...*
திடமுற்றபத்தியினு லுன்னைப்போற்றத் ... ...*
திருவாராதனஞ்செய்ய வேடனுலே ... ...*
இடரற்றுனென்றவனை வைகுந்தத்தே ... ...*
எண்ணமுறவைத்தனையே யெம்பிரானே - - ...*

(இ-ள்) ஒருபாகவதர் காட்டின்வழியேசெல்ல, அவரறியாதபடிப் பதிவிருந்து பறிக்கும்படி ஒரு கள்ளன்வந்து நெருங்கினவுடனே, அக்காட்டில்வசிக்கின்ற வேடனொருவன் வில்லைக் கையிற்கொண்டு அந்தப்பாகவதருக்குச் சமீபமாக வந்ததைக் கள்ளனறிந்து ஒன்றும்பறிக்காமல் தொலைந்துபோனான். அவர்ஊரோபோய்ச்சேர்ந்து திடமானபக்தியோடு உன்னை நமஸ்கரித்துத் திருவாராதனஞ்செய்தனர் அவன்சமீபமாக வந்ததினாலேயல்லவா என்னடியானுக்கு யாதொருதுன்பமுமில்லாமற் போயிற்றென்று வேடனை ஸ்ரீவைகுந்தத்தில் முனிவர் முதலாயினோரும் இப்பேறு நமக்கில்லையேயென்று எண்ணும்படிவைத்தாய் எம்பிரானே—எ-று(எஉ)

உன்றமமாயிரத்தி லொருபேர்சொல்லான் - - - ...*
உனதடியார்க்கொருநாளும் வணங்கிப்பேசான் ... ...*
சொன்னாலும்பெரியோர்கள் புத்திகேளான் ... ...*
சொல்வதெல்லாம்பொய்கொலையுங்களவுஞ்செய்வான் ...*
அந்நீசன்றிருவடிவந்தே திருவரங்கத் ... ...*
தரிசியென்றுவிற்றதனு லவனுக்காவந் ... ...*
தென்னூரின்பேர்சொன்னானென்பேர்சொன்னான் ... ...*
என்றுமுத்தியளித்தனையே யெம்பிரானே ... ...*

(இ-ள்) உனது சகஸ்திரநாமங்களில் ஒரு திருநாமத்தையாவது வாயாலுச்சரித்து அறியான், உன்னுடைய அடியார்களைக்கண்டொருநாளாவது வணக்கமாயுபசரித்தறியான், பெரியோர்கள் நல்லபுத்திகளைப் போதித்தாலும் சிறிதாவது காதுகொடுத்துக்கேளான், பேசுவதெல்லாம் பொய்யேயாம், செய்கையெல்லாம் கொலையுங் களவுமேயாம், அப்படிப்பட்ட நீசன் திருடிக்கொண்டுவந்து திருவரங்கத்தரிசியென்று விற்றதனாலே மரணதசையில் அவனுக்காகவந்து என்னூரின்பேரைச்சொன்னான் என்பேரைச்சொன்னானென்று ஸ்ரீவைகுந்தத்தை அவனுக்கு அருள்செய்தாய் எம்பிரானே.()

தாயாய்நற்றந்தையாய்க் குருவாய்த்தேவாய்த் ... ...*
தாரமாய்ப்புத்திரரா யுறவாய்நானுப் ... ...*

நீயாகியெள்ளிலெண்ணெய் போலேயெங்கும் ... ...*
நிறைந்துபரிபூரணமாய் நிற்குஞ்சோதி - - ...*
மாயாகண்ணாவரதாவாசுதேவா - ... - - *
மாதவாவென்றுசுரர் வணங்கிப்போற்ற ... - -...*
ஏயாவென்றேயாமல் வேயால்வாயால் - - ...*
இசையூதி நின்றனையே யெம்பிரானே ... ...*

(இ-ள்) தாயாகி, நல்லதந்தையாகி, ஆசாரியனாகி, தெய்வமாகி, மனையாளாகி,புத்திரராகி, பந்துவாகி, 'எனக்குள் அந்தரியாமியாய்நிற்குங் காரணத்தாலே நானாகி, உன்னுடமையாகிய எம்போலியனைக்காக்கும் சுவாமியாகி எள்ளிலெண்ணெய் வியாபித் திருப்பதுபோல் அண்டங்களிலும் அணுக்களிலும் பரிபூரணமாக நிறைந்து இருக்கின்றபரஞ்சுடரே, மாயனேகண்ணனே வாதனே வாசுதேவனே மாதவனேயென்று ஸ்ரீவைகுந்தத்தில் நித்தமுத்தர்கள்வணங்கி நமஸ்கரிக்க: உன்னுடையசௌலப்பிய குணாதிசயத்தால்அஞ்ஞானந்தகா நிறைந்தபூமியி லவதரித்துப்பசுக்களை உனது திருவாயால் ஏயாவென்று சொல்லி மேய்த்தும் அந்திப்போதில் வேய்ங்குழலால் ஓயாமல்கானஞ்செய்து கூட்ச்செய்தும் ஓரிடைச்சிறுவனைப்போலநின்றாய் இதென்னகருணைஎம்பிரானே-எ-று. (௭௪)

கன்றுடனேகோபாலரனேகம்பேரைக் - - ...*
கமலவயனபகரித்துக் கொடுபோய்வைக்க - ...*
வென்றியுடனந்தந்தவடிவமாகி ... ...*
வேற்றுமையற்றனைத்துமுற விளையாட்டுற்றாய் ... ...*
ஆன்றிருந்துமற்றநாட் பிரமன்றான்வந் ... ...*
தனைத்துமூறக்கண்டஞ்சித் தண்டன்பண்ணி ... ...*
இன்றடியேன்செய்தபிழை பொறுத்துக்காவென் ... ... *
றேத்தவளித்தனையரியே யெம்பிரானே ... ...* ...*

(இ-ள்) கன்றுகளையும், மேய்த்துக்கொண்டிருந்த ஆயர் சிறுவர்கள் பலரையும், பிரமனானவன் உனக்குத்தெரியாமற்கொண்டுபோய் ஒளித்துவைக்க, அதற்காகச்சிறிதும்மனந்தளராமல்வெற்றியோடு அந்தக்கன்றுகளைப்போலவும், கோபாலர்களைப்போலவும் உருவங்கொண்டு குணஞ்செய்கையாவும் எவ்வளவும் பேதப்படாமலிருக்க ஒருவருஷம் திருவிளையாடல்செய்தாய் பின்பு பிரமன்தேவதினமென்னப்படும் ஒருவருஷம் பொறுத்திருந்து மறுவருஷம்வந்து உன்னுடைய இத் திருவிளையாட்டை முற்றுங்கண்டுபயந்து தண்டனிட்டு இன்று அடியேன் தெளிவில்லாமையாற்செய்த பிழையைப்பொறுத்துக் காத்தருளென்று துதிக்க அவனுக்குக் கருணை செய்தாய் எம்பிரானே—எ-று. (௭௫)

பலவிசயசராசந்தனுன்றன்மீது - ... ...*
படையெடுக்குமுறிந்தோடிப் பின்பொருர்கால் ... ... *

மலைமிசைநீயேறந்தீ மூட்டிநீதான் ... ...*
மடிந்தனையென்றெண்ணிதென்றி தனதென்றேக - ...*
அலைவின்றிநீயுதித்து மாறுபாகம் ... - - ...*
ஆகவொருதுரும்பினைத்தான் பிளந்தெறிந்தே - -...*
இலகுபலமுளவீம சேனன்கையால் - - - ... -*
இருபிளவாக்கினையரியே யெம்பிரானே - - ...*

(இ-ள்) வல்லமையும், வெற்றியுமுடைய ஜராசந்தனுனவன்உன் மேல் படையெடுத்துவர, அவனுக்குத்தோற்று ஓடுவதைப்போல ஓடி, பின்பொருநாள் அவன்படையெடுத்து வந்தபோது ஒரு மலையின்மேல் நீயேற அந்தமலையைச்சுற்றிலுந் தீயைமூட்டி நீ இறந்தாயென்றெண்ணிச் செயம் தன்னுடையதென்று அவன்போக, தீயினால்யாதொருதுன்பமு மில்லாமல் நீ இறங்கிவந்து சிலநாள்கழிந்தபின் அவனோடு பீமனை உயுத்தம் பண்ணுவித்து, அந்தப்போரில் பீமசேனன் ஜராசந்தனைப் பலமுறை பிளந்தெறிய, அப்பிளவுகளிரண்டும் ஒன்றாய்க்கூடி உயுத்தம்பண்ணிக்கொண்டு வருவதினால் ஆயாசமுற்ற வாயுபுத்திரனுக் கெதிரேநின்று ஒரு துரும்பைச் சரிப்பங்காய்ப்பிளந்து மாறாகஎறியவே அதைஅறிந்துகொண்ட மிகுந்தபலசாலியாகிய பீமசேனனுடையகையால் அந்த ஜராசந்தனை இரண்டுபிளவாகச்செய்வித்தாய்ஸ்ரீஹரியேஎம்பிரானே.()

திருவாணத்துடன்குளித்துப் பனைகள்போல ... ...*
நின்றமையாற்சுரர்கண்முனி சாபத்தாலே - - *
மருதாகிநிற்குமிடத் துன்னையாய்ச்சி - - ... ...*
மதியாமல்வெண்ணெய்க்கா யுரலிற்கட்ட - -...*
வெருமாவாலேதவழ்ந்து மருதைக்கிட்டி - - - ...*
விறற்றிகிரியாவுரலா விறுத்துவீழ்த்தி - - - ...*
இருளானசாபந்தீர்த்தவனாப்பண்டை ... ... - ...*
ஏற்றமுறவைத்தனையே யெம்பிரானே - - - ...*

(இ-ள்) அநேகதேவதாஸ்திரி ஜனங்களோடு திருவாணமாகத் தடாகத்தில் சலக்கிரீடைசெய்து, பலஸ்திரிகள் வெட்கப்பட்டுக் கரைமேல்வந்து தங்கள் வஸ்திரங்களை யுடுத்திக் கொள்ளச் சிலரைப் போகவொட்டாமல் தடுத்து அவர்களோடு அம்மணமாய்ப் பனைமரங்கள்போலநின்ற நளகூபரன் மணிக்கிரீவன்என்னும்யக்ஷர்கள் ஸ்ரீமந் நாரதபகவானுடைய சாபத்தாலே மருதமரங்களாகி நிற்கிறகாலத்தில் ஸ்ரீயசோதாபிராட்டியானவள்நீ வெண்ணெய்களவுசெய்ததற்காக உன்னைத் தேவதேவநாயகனென் றுணராமல் உரலோடுசேர்த்துக்கட்ட, நீ அதற்கு அஞ்சாமல் அந்தஉரலோடு தவழ்ந்துகொண்டு அம்மருதமரங்களுக்குஇடையேசென்றுவெற்றிபொருந்திய சக்கராயுதத்தை யுடையவனே உன் பின்னே உருண்டுவருகின்ற உரலினாலேஅம்மரங்கள் முறிந்துவிழச்செய்து,இருள்போ

லக்கவிந்து நிற்றசாபத்தை நிவர்த்திசெய்து அந்தநளகூபரமணிக்கிரீவர்களைப்பழையவுருவத்தையடையச்செய்தாயெம்பிரானே)

நிலமாதுமோகித்தே யுனக்குப்பெற்ற ... ... *
நிருதநரகாசுரனையும்பார்க்காநீ ... ...*
கொலவேண்டிவந்துபொர வவன்விடுத்த ... ...*
கொடுங்கணைநின்னெற்றியிற்பட்டு திரத்தாற்கண் ... ...*
மலர்மூடிக்கொள்ளுகையினின் கரத்திலுற்ற - ... ...*
வரிசிலையிற்சத்தியபாமைப் பெண்ணெய்ய ... ...*
இலகாழியெய்தாப்போன் றரக்கன்மேற்பட் ... ...*
டிளைக்கநினைத்தனையரியே யெம்பிரானே ... ...*

(இ-ள்) ஸ்ரீ பூமிபிராட்டியார் ஸ்ரீவராகவதாரத்தில் உனது திவ்வியமங்கள விக்கிரக சௌந்தரியத்தைக்கண்டு மோகித்து, உனக்குப்பெற்ற, இராட்சதச்செய்கையுள்ள நரகாசுரனைத் தேவர்களுடைய நன்மையின் பொருட்டுக்கொல்லத்திருவுளங்கொண்டு அவனோடு போர்செய்யாநிற்கையில், அந்த அசுரன்எய்த கொடியகணையானது உனது நெற்றியில்தைத்துப் பெருகிய உதிரத்தாலே நீதிருக்கண்மலர்களை மூடிக்கொண்டபோது, உனது ஸ்ரீஹஸ்தத்திலிருந்த தனுசைவாங்கி ஸ்ரீசத்தியபாமை பிராட்டியார் புங்காநு புங்கமாக எய்தபாண பரம்பரைகள் அந்த நரகாசுரனுடைய உடல்முழுமையும், விளங்குகின்ற சக்கரப்பிரானை எய்தாப்போலத் தைத்துருவியதனால் அவனைத்திகைத்து நிற்கும்படிநினைத்தாய் எம்பிரானே—எ-று. (எஅ)

சயமிகுத்தசாம்பவனைப் பொருதுவென்றே - - ...*
சாம்பவதிப்பெண்மணியைக் கொண்டவந்நாள் - ...*
நயமுடனேசிமந்தகமா மணியுங்கொண்டே - - ...*
நாடனைத்தும்போற்றவெழி லாகவந்தாய் - - -...*
அயனையளித்துலகனைத்தும் படைக்கப்பண்ணும் - - ...*
அச்சுதனேயென்றமரர் முனிவரெல்லாம் - - ...*
இயலிசைசேர்வேதத்தாற்றுதிக்கவேவீற் - - - ...*
றிருக்குநாராயணனே யெம்பிரானே - - -...*

(இ-ள்) ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தில்- அசுரர்களைக்கொலைசெய்துவெற்றிமிகுந்த சாம்பவனைப் போர்செய்துவென்று அவருடையதிருக்குமாரத்தியாகிய சாம்பவதிதேவியை நீ அங்கீகரித்த அந்தநாளில், அன்போடு சிமந்தக மணிமாலையையுங் கொண்டு நாட்டிலுள்ளோர்யாவரும் துதிசெய்யும்படி அலங்காரமாக வந்தாய், பிரமனைப்பெற்றுச் சகலாண்டங்களையும் சிருட்டிக்கச்செய்த அழிவில்லாத முதற்கடவுளேயென்று எல்லாநித்தர்களும், முத்தர்களும்இலக்கணமும் இசையும் அமைந்திருக்கின்ற உபய வேதங்களாலும் துதிக்கத் திருவநந்தாழ்வான்மேல் வீற்றிருக்கின்ற ஸ்ரீபரமபதநா

தனே எம்பிரானே—எ-று. (௭௯)

திட்டமுடனுயரில்லில் வெண்ணெய்நெய்பால் - -...*
திருடுகைக்காக்கண்டபெண்க ளுனைக்கயிற்றால் - *
கட்டிவைத்துநந்தன்மனை தன்னிற்சென்றே - - ...*
கைதொழுதசோதையுடன் முறையிட்டம்பொன் - *
தொட்டிலிலேபார்க்கமிகக் கொறுக்கைவிட்டே - ...*
தூங்குதல்கண்டஞ்சியந்தப் பெண்கள்தெண்டன்- - ...*
இட்டறியாதேசொன்னோம் பொறுமாதாவே - - ...*
என்றுரைக்கப்பண்ணினையே யெம்பிரானே - ...*

(இ-ள்) சமயம்பார்த்து ஆயர்களுடைய திருமாளிகைகளிலுள்ள வெண்ணெயையும் பாலையும்நீகளவுசெய்ததற்காக, அந்தக்கோபால ஸ்திரீகள் உன்னைத் தாம்பினால்கட்டிவைத்து ஸ்ரீ நந்தகோபருடைய திருமாளிகைக்குப்போய்க் கைகளால் தண்டனிட்டுஸ்ரீயசோதைபிராட்டியாருடனே எம்முடைய தாயே உம்முடையபுத்திரன் எமதுகிரகத்திலுள்ள வெண்ணெய் பால் திருடியதற்காகக் கட்டிவைத்திருக்கிறோம் வந்துபார்க்கக் கடவீரென்றுசொல்ல,அதுகேட்டு ஸ்ரீயசோதை பிராட்டியார் நகைத்து எம்முடைய புத்திரனைத்தினம் அழகிய பொன் தொட்டிலில் தூங்குகின்றானே யென்றுகாட்டக் கண்டு, அந்தமங்கையர்கள்யாவர்களும்பயந்து தண்டனிட்டு எங்களுடைய அறியாமையால் குற்றஞ்சொன்னோம் எங்கள்தாயே பொறுத்தருள்வீரென்று சொல்லும்படி செய்தாய் எம்பிரானே—எ-று (௮௰)

மகரத்திற்சூரியன்வந் துதிக்குநாளில் ... - - ...*
வர்த்திக்கவிந்திரனை நோக்கிப்பொங்கல் - - ...*
மிகவிட்டுக்கயிலைமலை போலேவைக்க - ... ...*
விளையாட்டாயத்தனையு நீயேயுண்ணக் - - - ...*
ககனத்திலிந்திரனும் வந்துபார்த்துக் ... - - ...*
கனமழையைநிலமீதில் விடுத்தமட்டில்... ... ... *
இகபரத்துக்கிறையவனே நிரைக்காக்குன்றை ... ...*
எடுத்துமழைதடுத்தனையே யெம்பிரானே ... ...*

(இ-ள்) மகரத்திலே சூரியன்வந்து உதிக்கின்றநாளில் திருவாய்ப்பாடியிலுள்ளயாவரும், மற்றுங்கிராமங்களிலுள்ளவர்களும்வர்த்திக்கவேண்டுமென்று தேவேந்திரனைக்குறித்து மிகுதியாகப்பொங்கலிட்டு வெள்ளிமலைபோலக் குவித்துவைக்க, அவ்வளவுபொங்கலையும் திருவிளையாட்டாக நீயே அமுதுசெய்தருளியதை ஆகாயமார்க்கத்தே இந்திரனும் வந்துபார்த்துக் கனத்தமழையைப் பூமியில்பெய்யும்படி மேகங்களை விட்டமாத்திரத்தில், இகத்துக்கும் பரத்துக்கும் நாயகனே நீ ஆயர்முதலானவர்களையும் பசுக்கூட்டங்களையும் காக்கும்படி மலையைஎடுத்து அந்தப் பெருமழையைத்

தடுத்தாய் எம்பிரானே—எ-று. (அக)

தீமையினான்மகன்பழிக்காக் கண்ணில்லாத ... ...*
திரிதராட்டிரன் வீமற்கொல்லவெண்ண ... ...*
வீமனைப்போல்வல்விரும்பாற் சமைப்பித்தந்த ... ...*
விழியிலான்முன்னிருத்தி வீமன்பேச ... ...*
மாயிடுக்காற்கைந்நெருக்கவிருப்புவீமன் ... ...*
வலியதலைநெறித்துயரப் பறக்கவேகண்... ... ...*
டேமமுடன்வீமனையாள் கண்ணாவென்றே ... ...*
எல்லோருந்தொழவிருந்தா யெம்பிரானே... ... ...*

(இ-ள்) செய்த தீமையின்பொருட்டுத் தன்மகனைக்கொன்ற பழிக்காக நேத்திரங்களில்லாத திரிதராட்டிரன் வீமனைக்கொல்லவெண்ணங்கொண்டு அதைப்புறத்தே காட்டாமல் மறைத்துப் பிரீதியைக்காட்டித் தழுவவேண்டுமென்று அழைத்தபோது, முற்றமுணரவல்ல நீ வீமனைப்போல் வலியவிரும்பால் ஒருருவஞ்செய்வித்து அந்தக்குருடன்முன்னே நிறுத்த வீமன்பின்னேநின்றுபேச, மிகுந்ததனது வலியினாலே கைகளைநெருக்கித்தழுவவே இரும்பாற்செய்த வீமனது வலியதலைநெறித்து உயரப்பறக்கக்கண்டு அங்கிருந்தபாண்டவர்கள் முதலான எல்லோரும்சுகமாக வீமனைக்காத்த கண்ணபிரானே யென்று தொழும்படி யிருந்தாய் எம்பிரானே—எ-று. (அக)

உலகங்களேழுங் கற்பாந்தத்தில் ... ...*
ஒருங்கவேயோர்கணத்தி லெளிதாயுட்கொண் ... ...*
டலைவின்றிக்கற்பாந்த வெள்ளந்தன்னில் ... ...*
ஆலிலைமேற்குழவியாய்த் துயின்றவந்நாள் ... ... *
சலிலமறமதுகைடவரையுண்டாக்கிச் ... ... *
சக்கரத்தாற்பிளந்துடலாற் சலத்தைமூடி ... ... *
இலகமுனுண்டருளுலகை யுமிழ்ந்தேபண்டை ... ...*
ஏற்றமுறவைத்தனையே யெம்பிரானே ... ... *

(இ-ள்) சதுர்த்தசபுவனங்களையும் பிரமகல்பமுடிவில் ஒருகணப்பொழுதில் ஒருமிக்கச் சுலபமாகஉண்டு அப் புவனங்களுக்கும் அப்புவனங்களிலுள்ள பிரமருத்திராதி சமஸ்த சேதனர்களுக்கும் யாதொருதுன்பமுமில்லாமல் கற்பாந்தவெள்ளத்தில் ஆலிலையின் மேல் சிறுகுழந்தையாய் நித்திரிக்கின்ற அந்தநாளில் எங்கும் கோத்துநின்ற சலமானது வற்றிப்போக, மறுபடியும் சிருட்டிதிதிசங்காரங்களைச்செய்ய முன் உண்டருளிய உலகங்களை உமிழ்ந்து தேவர்களைச் சிருட்டித்து அத்தேவர்கள் கர்வித்தபோது அவர்களுடைய கர்வத்தையடக்குகிற நிமித்தம் மதுகைடவர்களையுண்டாக்கி, அவர்களால் வருத்தப்பட்ட தேவர்களுடைய பிரார்த்தனையின் பொருட்டு அந்தமதுகைடவர்களைச் சக்கரத்தாலே பிளந்து அவ

ர்களது உடலாற்சமுத்திரநீரை மூடச்செய்துபழையபடிஉலகங்க ளைப்பெருமையுறச்செய்தாய் எம்பிரானே—எ-று. (அரு)

அருமுறைகொளிருக்கெசுர் சாமத்தினேடும் ... ...*
அதர்வணமாகியசதுவேதங்கடம்மைத் ... ...*
திருவடியெடுத்துக்கொண்டே யுத்திசேரும் - - *
தியனுக்காமச்சாவ தாரமாகி ... ...*
ஒருசெலுவிற்சமுத்திரத்தைச் சுருக்கியேவைத் ... ...*
துக்கிரத்தாற்சோமுகாசுரனைக்கொன்றிட் ... ...*
டிருளறவேவிதிபடைக்க வவ்வேதத்தை ... ...*
இரங்கியளித்தனையரியே யெம்பிரானே ... - ...*

(இ-ள்) அருமையாகியவிதிவிலக்குகளைச்சொல்லுகின்ற இருக்கு-எசுர்- சாமம்-அதர்வணம் ஆகிய சதுர்வேதங்களையும் பிரமனிடத்தினின்றும் கவர்ந்துகொண்டு சமுத்திரத்தி லொளித்துக்கொண்ட துஷ்ட சோமுகாசுரனுக்காக மச்சாவதாரமாகி அத்திருமேனியிலுள்ள பலசெலுவுகளில் ஒருசெலுவிலே சமுத்திர சலத்தை அடக்கிக் கோபத்தோடு அந்தச்சோமுகனைக்கொலைசெய்து அஞ்ஞானவிருளொழியப் பிரமன்முன் பெற்றிருந்த அவ்வேதங்களைக் கருணையோடுஅச்சதுர்முகனுக்கே கொடுத்தாய் எம்பிரானே ()

மந்தாமத்தமிழ்ந்தாமற் பாற்கடற்குள் ... ...*
வளர்ந்தாதிகூருமமாய்மலையைத்தாங்கிச் ... ...*
சுந்தரவாசுகியை வடமாகச்சுற்றி - - ...*
சுரரசுரர்கணின்றமுதங்கடைந்தவந்நாள் - - ...*
ஐந்தருசிந்தாமணிநன்னிதிகள்வெள்ளை - - ...*
யானைபரிமூதேவி தாரைதேனு ...*
இந்திரைபொற்கௌத்துவமாமணியோடாலம் - - ...*
இளம்பிறையுந்தந்தனையே யெம்பிரானே - ...*

(இ-ள்) மந்தரமலையாகிய மத்துஅமிழ்ந்து போகாமல் திருப்பாற்கடற்குள் ஆதிகூர்மவதாரமாகி அம்மந்தரமலையைத் தாங்கி, அழகிய வாசுகியை வடமாகச்சுற்றித் தேவர்களும் அசுரர்களும் நின்று அமுதமுண்டாகக்கடைந்த அந்நாளில் பஞ்சதருக்கள், சிந்தாமணி, நல்லசங்கநிதி, பதுமநிதி, ஐராவதயானை, உச்சைச்சிரவம், சேஷ்டாதேவி, தாரைமுதலியதெய்வப்பெண்கள், காமதேனு திருமகள், கௌத்துவம், விஷம், பிறைச்சந்திரன் தோன்றும்படி செய்தாய் எம்பிரானே—எ-று. (அ௬)

புண்ணியந்தெய்வதமுஞ்சேர் பூலோகத்தைப் - - *
புற்பாய்போற்சுருட்டிக்கொண்டே பாதாளம் - *
நண்ணிரணியாட்சனைப்பின் றொடர்ந்தேயேகி - - *
நலமுடனேயாதிவராகத்தேவாகி - - - *
மண்ணுலகமனைத்துமிடந் தெடுத்தோர்கோட்டில் - - *
வைத்துவரவவன்மறிக்க வதைத்துத்தேவர் - - *

எண்ணவுலகிரோழும் படியச்செய்தாய் - - - *
இறைவாநாராயணனே யெம்பிரானே - - - *

(இ-ள்) யாகமுதலிய சத்கிரியைகளும், பலதெய்வங்களும் சேர்ந்திருக்கின்ற பூலோகத்தைப் புற்பாயைப்போலச்சுருட்டிக்கொண்டு பாதாளலோகமேபோய்ச் சேர்கின்ற இரணியாட்சனை உன்னுடையசொத்தாகிய சேதனுசேதன சம்ரட்சணார்த்தமாகப் பின்தொடர்ந்து சென்று உன்இச்சையாலே புருஷவராக தெய்வ வுருவங்கொண்டு அந்தப்பூலோகத்தை ஊடுருவிச்சென்று அதை ஒரு கொம்பிலேவைத்து வருகையில் அக்கொடியோன் வந்தெதிர்க்கவும் அவனைவதைசெய்து தேவர்களெல்லாம் தியானிக்கும்படி பதினன்குஉலகங்களையும் முறைப்படி வைத்தருளினாய் இறைவனே நாராயணனே எம்பிரானே—எ-று. (அசு)

நலமருவுமிளஞ்சிறுவ னிரணியாய - - - *
நமவென்றுசுக்கிரனன் ஞேதச்சொல்ல - - *
அலைவின்றியரிகரிநாராயணுவென் - - - *
றறிந்துரைக்கப்பிதாச்சுதனைக்கொல்லவிட்ட - - *
பலமல்லர்மதகரிபாம்பன்னீர்வெற்புப் - - - *
படுபடைகண்மித்துருவாக்காகப்பண்ணி - - *
இலகியபொற்றூணினர சிங்கமாய்வந் - - - *
திரணியனைவதைத்தனையே யெம்பிரானே - - *

(இ-ள்) உபாத்தியாயனுகிய சுக்கிரன் இரணியாய நமவென்று சொல்ல, உன்னுடைய திரோதுக கடாட்சத்தால் மெய்ஞ்ஞானம் பெற்ற இளஞ்சிறுபிள்ளையாகிய ஸ்ரீபிரகலாதாழ்வான் சிறிதும்சலனமில்லாமல் அரிகரி நாராயணுவென்று உண்மையைத் தெரிந்து சொல்லவும், அதுகாரணத்தால் பிதாவாகிய இரணியன் தன் துன்மதியினுல் அவரைக்கொல்லும்படிவிட்ட பலமல்லர்களையும், மதங்கொண்டயானையையும். திக்குநாகங்களையும், தீயையும், கடலையும், மலையையும்? கொடியபடைகளையும், அவருக்கு யாதொருஉபத்திரமுஞ்செய்யாமல் நன்மையைத் தருவனவாகச்செய்து, மணிகளிழைத்துப் பிரகாசியாநின்ற பொன்றூணில் நரசிங்கமாய்த்திருவுருவங்கொண்டு அந்தஇரணியனைவதைசெய்தாய்எம்பிரானே)

சுரரசுரர்முனிவர்நரர்கையிற்பாரில் - - - *
சுடர்வானிற்பகலிரவிலுள்புறம்பில் - - *
பொருபடையிற்சாகா விரணியன்றன்னைப் - - *
பொருவிலான்றர்க்கித்துண்டென்றதூணில் - - *
நரகரியாய்ப்பொழுதுபுகு நேரந்தனில் - - - *
நாடியுதித்துயர்வாசற்படிமீதேறி - - - *

இரணியனைத்தொடைமிசைவைத் துகிரினாலே - - *
இருபிளவாக்கினையரியே யெம்பிரானே - - *

(இ-ள்) தேவர்கள், அசுரர்கள், முனிவர்கள், மனிதர்கள், இவர்கள் கையினாலும், போர்செய்தற்குரிய ஆயுதங்களினாலும், பூமியிலும், சூரியன்முதலிய கிரகங்கள் உலாவுகின்ற ஆகாயத்திலும், பகலிலும், இராவிலும் ஓரிடத்துக்கு உள்ளிடத்திலும், புறத்திடத்திலும், சாகாதவரம்பெற்ற இரணியனை, ஒப்பில்லாத மெய்ஞ்ஞானச்செல்வராகிய ஸ்ரீபிரகலா தாழ்வான்யான்தொழுகிறபரம்பொருளானவனது திருநாமமே வேதங்களுக்கு ஆதியில்அந்தணர்கள் யாவரும் சொல்வார்கள்; அவன்பிரமருத்திராதிகளை யுண்டாக்கிஅவர்களுக்குள் தானொருவனாகவும், அவர்களுக்கு அந்தரியாமியாகவிருந்து சிருட்டிசங்காரங்களைச் செய்பவனாகவும்இருப்பவனென்று இன்னம்பலபலவாறாகஉண்மைகளைஎடுத்துச்சொல்லி உண்டென்று சொன்னதூணில் நாரசிங்கவுருவமாய் அந்திநேரத்தில் திருவவதரித்து உயர்ந்தவாசற்படியி லெழுந்தருளி இரணியனைத்தொடையின்மேல்வைத்து நகங்களினாலே இருபிளவாகப் பிளந்தாய் ஸ்ரீஹரியே எம்பிரானே—எ-று. (அஅ)

திமையினான்மாபலிதான் வாழ்நாளந்தத் - - ...*
தேவர்செய்யும்வேள்வியைத்தான் செய்கையாலே ...*
வாமனனாய்மூவடிமண்டாரையேற்று - - - ...*
வானிலயன்பூசிக்க ஒருதாணீட்டிப் ... - - *
பூமியோரடியாக்கித் தாரைவார்த்த - - ... ...*
பூதானக்குறையடியுந் தந்துபோவென் - - ...*
றேமவுலகிற்சுகமாப்பாதாளத்தில் ... - - ...*
எழிற்பலியைச்சிறையில்வைத்தா யெம்பிரானே ... ...*

(இ-ள்) மாபலியானவன் உலகங்களையெல்லாம் தன் சுவாதீனப்படுத்திக்கொண்டு வாழ்கின்றநாளில் தனது துர்ப்புத்தியினால் தேவர்கள்செய்யும் யாகங்களைச்செய்யத் தொடங்கியதினாலே அந்தத்தேவர்களுக்கு இதத்தின்பொருட்டு வாமனமூர்த்தமாகச் சென்று எனக்கு மூன்றடிமண் கொடுவென்றுஇரந்து அந்தப் பலிவார்த்ததாரையைஏற்று, சூரியன்உன்திருவடியின் விரலிலணிந்த மோதிரத்தின் மணியைப்போல விளங்கும்படிவளர்ந்து, பிரமன் கண்டு பூசிக்கும்படி ஒருதிருவடியைநீட்டித் தெய்வலோகத்தையும், நின்றதிருவடியால் பூமியையும்அளந்து மாபலியே நீதானஞ்செய்த மற்றோரடியுங்கொடுத்துப் போவென்றுகேட்டு அதற்காக, சுவர்க்கத்திலிருந்து சுகத்தை யநுபவிப்பதுபோலச் சுகமாகப்பாதாளலோகத்தில் அந்தஅழகிய மாபலியைச் சிறையில்வைத்தாய்எம்பிரானே—எ-று, (அகூ)

உலகளந்தபோதுவளர்ந் தண்டகோளத் ... ...*
துளைந்ததிருவடியையயன் விளக்குநன்னீர் ... ...*

பலமுகமாயாகாய கங்கையாகிப் ... ...*
பகிரதன்மெய்த்தவத்தாற் பார்க்கிறங்குங்காலே ... ...*
சலமிருந்தவரன்சடையிற் றங்கியந்தச் ... ...*
சங்கரனைச்சிவனுக்கி யிழிந்ததீர்த்தம் ... ...*
இலகுபுகழ்க்காசியிலே கங்கையாய்வந் ... ...*
திடர்தீர்க்கப்பண்ணினையே யெம்பிரானே ... ...*

(இ-ள்) உலகத்தை அளக்கும்போது வளர்ந்து அண்டகோளத்தை உதைந்ததிருவடியைப் பிரமதேவன் திருமஞ்சனஞ்செய்த நல்லநீரானது பல கால்களாகஓடிவந்துசுவர்க்கத்தில்மந்தாகினியென்றழைக்கும் ஆகாயகங்கையாகிப்பகீரதமகாராஜன்செய்தமெய்த்தவத்தினாலே பூமியில் இறங்குங்காலத்தில், தாமசகுணமுள்ள அரனுடைய சடையிலேதங்கி அந்தச்சங்கரனை நன்மையுள்ளோனென்று பொருள்கொள்ளும் சிவனென்னும் பெயரையுடையவனாகச்செய்து அவன்சடையினின் றிழிந்து பெருகியதீர்த்தமானதுவிளங்கிய புகழையுடைய காசியிலே கங்கையென்னும் பெயரையுடையதாகிவந்து தன்னிலேமுழுகுவோர்களுடைய தீவினைகளைத்தீர்க்கப்பண்ணினாய் எம்பிரானே—எ-று. (கூய)

தசரதன்பாலுதித்துமுனி யாகமுற்றித் ... ...*
தாட்டுகளாற்கல்லைப்பெண் ணாக்கியார்க்கும் ... ...*
வசமிலாத்தியம்பகத்தைக் குனித்தொடித்து ... ...*
மனமகிழச்சீதையைநன் மணமுஞ்செய்து ... ...*
குசலமியற்றிக்கவியாற் சேதுகட்டிக் ... ...*
கொடியராவணகும்ப கருணனைக்கொன் ... ...*
றிசைபெறவேவீடணற்குப் பட்டங்கட்டி ... ...*
ஏற்றமுறவைத்தனையே யெம்பிரானே ... ...*

(இ-ள்) ஸ்ரீ தசரதசக்கரவர்த்தியாரிடத்து அவதரித்துத்தாடகையைச்சங்கரித்து விசுவாமித்திர முனியினுடைய யாகத்தை நிறைவேற்றித் திருவடித்துகளினாலே கல்லினைப்பெண்ணுருவமாகச்செய்து ஒருவராலும் வளைக்கப்படாத திரியம்பகமென்னும் வில்லினைவளைத்தொடித்துச் சநகமகாராஜன் முதலானோர்மனமகிழும்படி ஸ்ரீ சீதாபிராட்டியாரை நல்லதிருமணஞ்செய்து, கைகையினுடைய கட்டளையால் காட்டுக்குச் சென்றவிடத்தில் பிராட்டியார் பக்கலிலும் நின்னடியார்களாகிய தேவர்கள் முனிவர்கள் பக்கலிலும் அபசாரப்பட்ட ராவணனைக் கொலைசெய்யும்படி தெற்குநோக்கிச்சென்று வாலியைக்கொன்று ஸ்ரீ சுக்கிரீவமகாராஜருக்குப்பட்டங்கட்டி அவருடைய வானரசேனைகளைக்கொண்டு சமுத்திரத்தைத் திருவணைசெய்து துஷ்டர்களாகிய தசக்கிரீவனையும் கும்பகருணனையும் மற்ற கொடியராட்சதர்களையும் வதஞ்செய்து நல்லகீர்த்தியையடையும்படி ஸ்ரீவிபீஷிணாழ்வானுக்குப் பட்டங்கட்டிச்சிரஞ்

சீவியாயிருக்கும்படிவைத்தாய் எம்பிரானே—எ-று, (௯௧)

வசுதேவன்சுதரா றுபேரைக்கஞ்சன் ... ...*
வதைத்தபின்னேழாங்கருவாய் வழுவிச்சென்றே ... *
அசரீரியாவந்தநந்தகோபன் ... ...*
அடைங்கலமாமுரோகிணியார் வயிற்றிற்புக்குச் ... ...*
சசிவடிவச்சங்கருட ணுகிவந்தே ... ...*
தக்கதிறற்கண்ணனுக்குத் தமையனுகி ... ...*
இசைவாகவலாயுதத்தா லுலகைக்காத்தாய் ... ...*
எழிற்பலபத்திரராமா வெம்பிரானே ... ...*

(இ-ள்) ஸ்ரீவசுதேவருடைய புத்திரர்க ளாறுபேரையும் வதைத்தபின்பு ஏழாவது கருவாகிநின்ற நீ அக்கருவைவிட்டுச்சென்று ஸ்ரீநந்தகோபருடைய திருமாளிகையி லெழுந்தருளியிருந்த ஸ்ரீரோகிணி பிராட்டியாருடைய கர்ப்பத்தில் பிரவேசித்துச் சந்திரனைப்போல வெள்ளைத்திருமேனியையுடைய ஸ்ரீசங்கர்ஷிணபிரானுக வவதரித்து வேதமுறைமைக்குத்தக்க வெற்றியையுடைய ஸ்ரீ கண்ணபிரானுக்குத் திருத்தமையராகித் தகுந்தபடி கலப்பைப்படையால் துஷ்டர்களைச்சேதித்துச் சிஷ்டர்களைக்காத்தாய் அழகியஸ்ரீ பலபத்திரராமாஎம்பிரானே—எ று, (௯௨)

வசுதேவனிடத்துதித்து நந்தகோபன் - - - ...*
மகவாகிச்சுரர்பணிந்து போற்றவீறி - - ...*
அசுரேசரநேகருடன் கஞ்சனைக்கொன் - - ...*
றைவருக்காப்பாரதப்போர் பொருதுவென்று - ...*
சிசுபாலன்வசைகேட்டுப் பொருதுசாபம் - - ...*
தீர்த்தருளிவைகுந்த மவனுக்கிந்தே - ...*
இசையாகத்திருவிளையாட் டநேகஞ்செய்தாய் ... - *
ஏற்றமுள்ளகோவிந்தா வெம்பிரானே - ...*

(இ-ள்) ஸ்ரீ வசுதேவருடையதிருக்குமாரராகவவதரித்து ஸ்ரீநந்தகோபருடைய புத்திரராகித் தேவர்கள்யாவர்களும் வணங்கித்துதிக்க வளர்ந்து அநேக அசுரசிரேஷ்டர்களையும் கஞ்சனையும் கொலைபுரிந்து பாண்டவர்களுக்காகப் பாரதயுத்தத்தைநடத்திச் செயங்கொண்டு, சிசுபாலன்சொல்லியவசைக்கேட்டுச் சங்கரித்துப் பழையசாபத்தைத்தீர்த்து ஸ்ரீவைகுந்தத்தை அவனுக்குக் கொடுத்து அடியோங்கள் உஜ்ஜீவிக்கும்படி துதிக்கத்தக்க கீர்த்திவளர அநேகத்திருவிளையாட்டுகளைச் செய்தாய் அநந்தகலியாணகுண நிலயமாகிய கோவிந்தா எம்பிரானே—எ-று. (௯௩)

நம்பியமெய்க்குருராமா நுஜனைப்போற்றும் - ... ...*
நலமுடனேகச்சியில்வாழ் கடாம்பியாச்சான் - - ...*
தும்பையூர்க்கொண்டியென்பா ணவபாண்டத்தில் - ......*
தோய்த்ததயிர்விலைபேசிக் கொண்டுவந்தே - - ...*

உம்பர்தொழுமுனக்கேற்றித் [illegible]ண்ண - - ...*
உளத்திருள்போய்த்தயிர்க்குவிலை [illegible]க்காக்கொண்டிக்- ...*
செம்பரமனுச்சான்சொற் கேட்டுமுத்தி - ... ...*
ஈந்திட்டாயச்சுதனே யெம்பிரானே - - ...*

(இ-ள்) ஸ்ரீமத் பரமவைதிகமார்க்கத்தார்கள் யாவர்களும் ஆத்மோஜ்ஜீவனமாக நம்பிய யதார்த்தகுருராயராகிய ஸ்ரீராமாநுஜாசாரியனைப் போற்றுகின்ற நற்குணத்தோடு திருக்கச்சியில்வாழ்கின்ற ஸ்ரீமத்கடாம்பியாச்சானென்பவர், தும்பையூரிலுள்ளகொண்டியென்பவள், புதுப்பாண்டத்தில் தோய்த்ததயிரை விலைபேசிக் கொண்டுவந்து தேவர்களெல்லாம் வணங்குகின்ற உனக்கு நிவேதித்துத் தாமும் அமுதுசெய்யவே, உள்ளத்திலுள்ள அந்தகாரம் நீங்கித் தயிர்க்குவிலை வேண்டாமென்ற கொண்டிக்கு அடியேங்களுடைய சுவாமியாகிய ஸ்ரீமத்கடாம்பியாச்சானுடைய விண்ணப்பத்தைக்கேட்டுப் பரமபதத்தைத் தந்தருளினாய் அச்சுதனே எம்பிரானே—எ-று. (௬௪)

பாகவதகிருட்டினவையங்கார்நின்பால் ... - - ...*
பத்திகொடுகீர்த்தனமிலட்சம்பாட - - ...*
நீகருணைகூர்ந்துதிருப் பதிநூற்றெட்டும் ... - - ...*
நிமிடத்தினேசமுடன் றேன்றவைத்தாய் - - ...*
மோகமுடனெடுத்தவரை விழுங்கிக்காட்டி - - ...*
முடியிலவர்தரித்தபட்டும் வாயிற்காட்டி - - ...*
ஏகமறநின்னுட்கூடியதுங்காட்டி ... - - ... ...*
எல்லாருமறியவைத்தா யெம்பிரானே ... - ...*

(இ-ள்) ஸ்ரீ பாகவதராகிய கிருஷ்ணையங்காரென்பவர் உன்னிடத்தில் அதிகபக்திகொண்டு லட்சங் கீர்த்தனங்களைப்பாடி நூற்றெட்டுத் திருப்பதிகளையுஞ் சேவிக்கவேண்டுமென்று ஆவல்கொள்ள, அஃதறிந்து நீ கருணைகூர்ந்து நூற்றெட்டுத் திவ்வியதேசங்களையும் ஒருகணப்பொழுதில் நேசத்தோடு பிரத்தியட்சமாகும்படி செய்தாய், மற்றொருகாலத்தில் அவருடைய கீர்த்தனத்தைக்கேட்டு மோகத்தோடு அவரையெடுத்து விழுங்கிக்காட்டி அவர்முடியிலே தரித்திருந்த பட்டுவஸ்திரத்தையுங்காட்டி ஆண்டானும் அடியானுமென்னும்படி உன்னோடுகூடியதையுங் காட்டி எல்லாரும் அறியவைத்தாய் எம்பிரானே—எ-று. (௬௫)

சக்கரஞ்சங்குயர்கதைவா ளுனுவோடைந்தும் - - ...*
தரித்தபுருடோத்தமனே கமலக்கண்ணு - ... ...*
மிக்கபராபரமூர்த்தி துளபத்தாமா ... - - ...*
விறலுடனேமண்ணளந்துண் டிருக்குஞ்சோசி - - ...*
அக்கரமைம்பத்தொன்றாய்ச் சொல்லாய்ச்சொல்லின் ... ...*
அருத்தமுமாயெட்டெழுத்தின் வடிவமாகி ... ...*

எக்கணினுமணுவுக்குமணுவாய்நின்றும் ... ... *
எழிற்குருவாயுதிக்கின்ற யெம்பிரானே ... - ... *

(இ-ள்) சுதரிசனமென்னுஞ் சக்கரமும், பாஞ்சசன்னியமென்னுஞ் சங்கமும், உயர்வாகியகௌமோதகியென்னுங் கதாயுதமும் நாந்தகமென்னும் வாளும், சாரங்கமென்னும் வில்லும், ஆகியபஞ்சாயுதங்களையுந்தாங்கிய புருஷோத்தமனே கமலமலர்போன்ற திருநேத்திரங்களை யுடையானே மேலாகநின்றபராபரமூர்த்தியே துளபமாலிகாபரணனே விக்கிரமத்தோடு பூமியைத்திருவடியாலளந்தும் வாயாலுண்டும் எழுந்தருளியிருக்கின்ற பரஞ்சோதியே, ஐம்பத்தோ ரெழுத்தாகி, அந்த எழுத்துகளாலாகிய பதங்களாகி அப்பதங்களுக்குப் பரமார்த்தமுமாகி, அப்பதங்களில்சிறந்த அட்டாட்சரவுருவமாகி, அவற்றின்பொருளுமாகி, எவ்விடத்திலும் அணுவுக்கும் அணுவாயுள்ளேநின்றும் எமக்குஆசாரியனாகவும்வருகின்றாய் எம்பிரானே—எ-று. (௯௬)

திருமாதுநிலமாது பத்தியாலே ... ... *
திருவடிகள்வருடியிடவிழித்துறங்கும் ... ... *
கருணாகராமுத்தி வீடாவெங்கும் ... ... *
கலந்துருவாயருவாகி யிருந்குமாயா ... ... *
அருளாளாவுயர்சனகன் சனக்குமாரன் ... ... *
அமுதவிசைநாரதன்வியாசனென்றும் - - ... *
இருள்சோராமார்க்கண்டன் பிருகுபோற்ற - - - ... *
இருக்கின்றாய்நாராயணனே யெம்பிரானே - - ... *

(இ-ள்) ஸ்ரீ தேவிபாரும் பூமிதேவிபாரும் பக்தியோடு சீர்பாதங்களைவருடிக்கொண்டிருக்கயாவும் அறிந்துகொண்டே நித்திரிக்கின்ற கருணாநிலயமே பரமபதநாதா எப்பொருள்களிலும் நிறைந்து உருவமாகவும் அருவமாகவும் இருக்கின்ற மாயாசக்தியையுடையானே அருளாளா உயர்வாகியஞானம்பெற்றசனகர், சனக்குமாரர் உன துகலியாணகுணங்களை அமுதம்போன்ற இசையாகப்பாடுகின்றஸ்ரீமந்நாரதர், ஸ்ரீவேதவியாசர், எப்போதும் அஞ்ஞானதிசையடையாத மார்க்கண்டர், பிருகு, உன துகீர்த்தியைப்புகழ்ந்துபாடத் திருப்பாற்கடலில் சயனித்திருக்கோலமாயிருக்கின்றாய் நாராயணனே எம்பிரானே—எ-று. (௯௭)

கண்ணிரண்டாயிரமுடைய சேஷன்பன்னாள் - - ... *
காத்திருந்துமுன்றனுடை வடிவங்காணான் - - ... *
பண்ணுறத்தன்னாவிரண்டா ராயிரத்தாலோதிப் - - ... *
படித்துமுன்றன்பெருமைதனைப் பகரமாட்டான் - ... *
மண்ணுலகிற்சிறியவரோர் நாவாலுன்றன் ... ... *
மகிமையைக்கண்டொக்கவென்றால் வசமோவானோர் ... *
எண்ணரியமாயவனே கச்சிவாழும் ... ... *
இறைவாநாராயணனே யெம்பிரானே ... ... *

(இ-ள்) இரண்டாயிரங்கண்களையுடைய ஆதிசேஷன் நெடுநாளாக உன்கைங்கரியங்களைச் செய்துகொண்டு உன்பக்கலில்காத்து உனது திவ்வியமங்களவிக்கிரக சௌந்தரியத்தைச் சேவித்திருந்தும் இன்னமும் முற்றுஞ்சேவித்தவனல்லன், தனது இரண்டாயிரநாவுகளினாலும் உனது அனந்தகல்யாணகுணங்களை நெடுநாளாகப் படித்துத் துதித்தும் இன்னமும் முற்றும் துதினவனல்லன், இந்தப்பூலோகத்தில் சிலவாழ்நாளையுடையமக்கள் மாமிசசட்சுகளால் உனது திருமேனியின் அழகைக்காணக் கூடாதபோதிலும் உன்னுடையகல்யாணகுணங்களை இவ்வளவென்று வேதமுதலியநூல்களிற்கண்டு சொல்லவென்றால் முடியுமோ முடியாது, தேவர்களாலும் சித்திப்பதற்குக் கூடாதமாயவனே திருக்காஞ்சியில் எழுந்தருளிய இறைவனே நாராயணனே எம்பிரானே—எ-று. (௯௮)

பட்டமரந்துளிர்த்துமிகப் பூத்துக்காய்க்கப் ... ...*
பாற்பசுக்கள்சுரந்தொழுக மலடுமீனத் ... ...*
துட்டவியாக்கிரமுமா னினமுமொன்றாத் ... ...*
தோகைமயில்படநாக முடனேயாட ... ...*
வட்டமுலைக்கன்னியர்கள் மாலாய்நிற்க ... ...*
வானவருந்தானவரும் வணங்கிப்போற்ற ... ...*
இட்டமுடனேவேணு நாதஞ்செய்தாய் ... ...*
இறைவாநாராயணனே யெம்பிரானே ... ...*

(இ-ள் பிருந்தாவனத்தில் பட்டிருந்தமரங்களெல்லாம் தளிர்களைத்தளிர்த்து மிகுதியாக மலர்களைமலர்ந்து காய்களைகாய்க்கவும் கறவைப்பசுக்கள் கன்றுகளுண்ணாதிருக்கும்போதேசுரந்துபாலை ஒழுகச்செய்யவும், மலட்டுப்பசுக்களும் கன்றுகளையீணவும் குரூரகிர்த்தியமுள்ள புலிகளும் மான்கூட்டமும் ஒன்றாகக்கூடவும், கலாபத்தையுடைய மயில்கள் பெரும்படத்தையுடைய நாகங்களுடனேகூடிநடிக்கவும், வட்டமாகிய ஸ்தனங்களையுடைய கோபாலஸ்திரீஜனங்களும் தேவதாஸ்திரீஜனங்களும், மற்ற சுந்தராங்கனைகளும் உனதுவடிவழகில் ஆசைப்பட்டு நிற்கவும், தேவர்களும் அசுரர்களும் பகையாராட்டாமல் உறவாகி உனது சீர்பாதங்களைவணங்கித் துதிக்கவும், அன்போடு வேணுநாதஞ்செய்தாய் யாவர்களுக்கும்நாயகனே நாராயணனேஎம்பிரானே—எ-று. (௯௯)

ஆருமுனைநவமாகப் பாடலுண்டோ ... ...*
ஆரணமாகமமனைத்து நீயுரைத்தாய் ... ...*
பெருமுனக்குண்டானபழையபேரோ ... ...*
பெருங்கதையும்பலிசையும் பழையவேயாம் ... ...*
காருததிநீர்தனையே முகந்துபெய்யிற் ... ...*
கடலிலதுநீந்தமதாய்க் கலந்தற்றுப்போல் ... ...*
ஈருடன்மெய்யடியார் நவமாய்ப்பாடின ... ...*
இரங்கியதுட்கொள்கின்றா யெம்பிரானே ...*

(இ-ள்) வேதபுருஷனும் ஸ்ரீமத் பராங்குசமுனிவரும் ஸ்ரீ வேதவியாசமுனிவரும் மற்றும்முனிவர்களும் உன்னுடைய அநந்த கலியாணகுணங்களைப்பற்றிக்கூறியிருப்பனவற்றை எவர்களும்பாடுவதேயல்லாமல் வேறேபுதிதாகத் தாங்கள்கண்டு பாடுதலுமுண்டோ இல்லையே வேதங்களையும் ஸ்ரீபாஞ்சராத்திரத்தையும் மற்றும்வைதிகநூல்களையும் நீ உபதேசித்திருக்கின்றாய், உனது குணங்களைத் தெரிவிக்கும் திருநாமங்களும் உனக்குமுன்னே உண்டாயிருக்கும் புராதனமாகிய திருநாமங்களே, பெருமையாகிய சரித்திரமும் இலக்கணத்தோடமைந்த இசையும் பழமையாயுள்ளனவே, இப்படியிருக்க, மேகங்கள் சமுத்திரஜலத்தைமொண்டு உலகில்பெய்தால் அந்தநீர் பிரவாகமாகிமறுபடியும்நெருங்கிச்சேரக் கடல் அங்கீகரிப்பதுபோல அன்போடு மெய்யடியார்கள் புதிதாகப்பாடினுல் திருவுளம் இரங்கி அச்செய்யுளை அங்கீகரிக்கின்றாய் எம்பிரானே—எ று. (௱)

திருநாமமறவாவுன் தாசர்க்கெல்லாம் ... *
சீர்பாதத்தூளிநாயடியேனுன்றன் ... *
அருளாலேயெம்பிரான்சதகமென்றே ... *
அன்றந்தகவிநூறதனிலொன்றுனலும் ... *
பரிவாகக்கற்றவர்க்குங் கேட்டபேர்க்கும் ... *
படிமிசையிற்றுன்பமறுத் தின்பம்பாலித் ... *
திருபாதமெய்ஞ்ஞானம் விளங்கச்செய்வாய் ... *
இறைவாநாராயணனே யெம்பிரானே ... *

(இ-ள்) உனதுதிருநாமங்களை மறவாமல் பஜிக்கின்ற அடியார்களெல்லோருக்கும் சீர்பாததூளியாகிய நாய்போன்ற அடியேன் உனதுநிரேதுககடாட்சத்தினுலே எம்பிரான் சதகமென்று சொன்ன நூறுசெய்யுள்களில் ஒருசெய்யுளையாவது அன்புடனே படித்தவர்களுக்கும், படிக்கக்கேட்ட பேர்களுக்கும், இந்தப்பூமியில் எல்லாத்துன்பங்களையும் ஒழித்து இகத்துக்குவேண்டிய சுகங்களைத் தந்தருளி உனதுஉபயதிருவடிகளையே தஞ்சமென்று பற்றுகின்ற தத்துவஞானம் உண்டாகும்படி செய்தருள்வாய் இறைவனே நாராயணனே எம்பிரானே—எ று. (௱க)

எம்பிரான்சதகம்-மூலமும்உரையும் முற்றிற்று.

ஸ்ரீமத்- உபய - ஆத்தான்கிருஷ்ணமாசாரியர்திருவடிகள்வாழ்க